இது ஒரு ★★★★★ இதழ்

# குடும்ப நாவல்

செப்டம்பர் - 1, 2010

## ஆர்.மகேஸ்வரி

- முழு நாவல்



ரூ.10

# காதலே... என் சுவாசமாய்...!

# அழகிகள் பேரழகிகளாக...

## கூந்தல் பொடுகு நீங்க...

★ **எ**லுமிச்சம் பழச்சாற்றோடு, அதே அளவு தேங்காய் எண்ணெய் சேர்த்து மயிர்க்கால்களில் படும்படி தேய்த்து சிறிது நேரம் ஊற விட்டு குளிக்க வேண்டும்.

★ **தே**யிலை கொதிக்க வைத்த நீரை மயிர்க் கால்களில் படும்படி பத்து நிமிடங்கள் அழுத்தி தேய்த்து விட்டு குளித்து வரவேண்டும்.

★ **து**ளசி இலைகளைத் தேங்காய் எண்ணெய்யில் போட்டு கொதிக்க வைத்து வடிகட்டி தலையில் தேய்த்து வரலாம்.

★ **வே**ம்பாடம் பட்டையைத் தேங்காய் எண்ணெய்யில் காய்ச்சி மண்டை ஓட்டில் படுமாறு நன்றாகத் தேய்க்கவும்.

★ **ம**ருதாணி இலைகளை நெல்லிக்காய்ச் சாற்றிலரைத்து தலைக்குத் தடவி வர வேண்டும்.

## டிப்ஸ்...

★ **வே**ப்பிலை, ரோஜா இதழ், துளசி மூன்றையும் சம அளவு எடுத்து அரைத்து முகத்தில் பூசி அரை மணி நேரம் கழித்து கழுவினால் முகம் பட்டு போல இருக்கும்.

★ **சா**த்துக்குடிப் பழச்சாற்றுடன் தேன் கலந்து அருந்தினால் முகத்தில் சுருக்கம் விழுவதைத் தடுக்கலாம்.

★ **அ**திமதுரப் பொடியுடன் எருமைப் பால் கலந்து அரைத்து தலைக்குத் தேய்த்து குளிக்க வழுக்கை மறைந்து தலைமுடி வளரும்.

★ **எ**லுமிச்சை விதை சிறிதளவு, மிளகு, நீர் விட்டு அரைத்து தேய்த்துக் குளிக்க தலைமுடி கொட்டுவது நின்று முடி வளரும்.

- **செ.கலைவாணி,**
**சென்னை.**





# என்னைப் பற்றி...

நான் ஆசிரியையாகப் பணிபுரிகிறேன். என் நாவல்கள் பல வெளி வந்திருந்தாலும் 'குடும்ப நாவ'லில் முதன் முதலாய் "காதலே என் சுவாசமாய்..." என்ற நாவலின் மூலம் எனது முதற் பயணத்தைத் தொடங்குகிறேன்.

இந்த இனிய, அற்புதமான வாய்ப்பை நல்கிய ஆசிரியருக்கு எனது உள்ளார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இந்த நாவலில் அருமையான, உயிருக்குயிரான காதலைச் சொல்லியிருகிறேன். நாயகன் 'அன்பு', காதலையே உண்டு, உயிர்த்து, சுவாசமாய் எண்ணி வாழ்கிறான். அவன் நேச சுவாசம் நிறைவேறியதா என்று படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

அன்பு, அர்ச்சனா - இருவரும் உங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்வார்கள் - நிச்சயமாய்!

நான் ரசித்து, நேசித்து படைத்த படைப்பை நீங்களும் கட்டாய மாய் நேசிப்பீர்கள்.

என்றென்றும் அன்புடன்,

ஆர்.மகேஸ்வரி.




# 1

இரவு மணி 8.00.

அர்ச்சனாவின் மனம் கலங்கிய குட்டையாய் இருந்தது. தவிப்போடு காத்திருந்தாள்.

அர்ச்சனாவைக் காக்க வைத்த... கலங்க வைத்த... கவலை ரேகைகளை முகமெல்லாம் படிய வைத்த... இளம்புயல் கௌசல்யா... வீதியில் வேகமாய் நடந்து வந்து... பங்களாவிற்குள் புகுந்தாள்.

அர்ச்சனாவின் மனதில் நிம்மதி ஏற்பட்டாலும்... செந்தணலாய் தகித்த கண்களால் கோபத்தை வெளிப்படுத்தி... கௌசல்யாவை வாசலிலேயே பிடித்துக் கொண்டாள்.

''ஏன் தாமதம்? கல்லூரி விட்டதும் நேரே வீடு வராமல்... எங்கே போனாய்? உனக்கு கொஞ்சமாச்சும் அறிவு இருக்கா? இத்தனை நேரமும் என் நெஞ்சில் நெருஞ்சியை வைத்து தேய்த்து விட்டாயே! கழுதை... உன் அப்பா வர்ற நேரம்! அவர் வந்ததும் உன்னைக் காணாமல் தவிச்சுடுவார். அப்புறமா... என்னிடம் சண்டைக்கு வந்துடுவார். குடும்பத்துல குழப்பம் பண்ணவே இருக்கேடி!'' வேகமாய் சத்தம் போட்டாள்.

''நீ கவலைப்பட... நான் என்ன சின்னக் குழந்தையா?''

''சின்னக் குழந்தைன்னாகூட கவலைப்பட மாட்டேன்! நீயோ வயசுப் பெண்! அழகாய் மலர்ந்து மணம் வீசுகிறாய்! சிட்டியில் கொலை, கொள்ளை, கற்பழிப்புன்னு மலிஞ்சிப்போய் கிடக்கு! முன்னேபோல பெண்பிள்ளைங்க ரோட்ல நடந்துபோக முடியல! இதுல பசங்களோட கிண்டலும், கேலியும் கேட்க சகிக்கல! கார்ல போகாமல் பஸ்ல போய் இம்சை படுத்தறது போதாதுன்னு... இத்தனை நேரம் கழிச்சி வரே!'' கத்தினாள்.

''போம்மா... கார் சுத்த போர்ம்மா! வாசலிலேயே நிறுத்தி இப்படி கேள்விகளை கேட்கணுமா? பசிக்குதும்மா...!'' கௌசல்யா சிணுங்க... அர்ச்சனா இட்லியை வைத்து சாம்பார் ஊற்றினாள்.

''தப்பு தண்டா ஏதும் பண்ணலையே! கௌஷிம்மா... ஜாக்கிரதைடா! அப்பாவோட புகழை... பேரை... பாராட்டுக்களைக் கண்டு... அதை எப்படியாவது கெடுக்கணும்ன்னு சில விஷமிகளும்... எதிரிகளின் தூண்டுதலால் சில நாலாந்தர பத்திரிகைகளும், மீடியாக்களும்... எப்போ எப்போன்னு அலையறாங்க! கொஞ்சம் பார்த்து நடந்துக்கோம்மா! ப்ளீஸ்...'' என்று கெஞ்ச...

''உன் புருஷனோட கௌரவத்துக்கு பங்கம் வராப்போல நடந்துக்கமாட்டேன்! வளர்ந்துட்டேன். மெடிக்கல் காலேஜ் ஸ்டூடண்ட் வேற! எது நல்லது, எது கெட்டதுன்னு எனக்குத் தெரியும்! நீ வீணா

பயப்படாதே! வேலையிருந்தா போய்ப் பார்!'' முகம் சுளித்துச் சொல்ல...

''உன் புருஷன்... உன் புருஷன்னு இப்போல்லாம் அடிக்கடி சொல்றடி! அவர் உனக்கு அப்பா இல்லையா?''

''உனக்கு அவர் புருஷனில்லையா? சொன்னால் என்ன தப்பு?'' என்று கௌசல்யா கேட்க... அர்ச்சனா முகம் வாடிச் சென்றாள்.

அன்பு! பிரபல முன்னணி டைரக்டர்! கடந்த பத்தாண்டுகளாய் உச்சத்தில் இருப்பவர். வருடத்திற்கு ஒன்று என்ற கணக்கில் திட்டமிட்டு... நேர்த்தியாக... கதையம்சத்தோடு... கலையம்சத்தோடு... மக்களுக்கு ஏதாவது புதுவித செய்தியைச் சொல்லி... காதலில் கரைய வைத்து... யோசிக்க வைத்து... காயம்பட்ட இதயங்களை சுகமாய் மயிலிறகால் வருடுவது போல படமெடுப்பார். அன்பு எடுத்த அத்தனையும் வெற்றிப்படங்களே! விருது வாங்கிய படங்களே! கலைத் துறையில் உள்ளவர்கள் அனைவருக்கும்... அவரிடம் மரியாதை; பயம். படம் கிடைக்காமல் நலிந்துபோன நடிகர்களை உச்சிக்கு கொண்டு வந்திருக்கிறார்! இளம் புதுமுகங்களை ஜொலிக்க வைத்திருக்கிறார்!

இத்தனை உயரத்திலிருக்கும் அன்புவைத்தான் கௌசல்யா கொஞ்சநாட்களாய் அலட்சியப்படுத்தியும், அவமானப்படுத்தியும் வருகிறாள்.

காரணம் புரியாமல் அன்புவும், அர்ச்சனாவும் கலங்கினர். கௌசல்யாவின் தவிர்ப்பை - அலட்சியத்தை தாங்கிக் கொள்ள முடியாமல்.. தணலில் விழுந்த புழுவாய் தத்தளித்தனர்.

அர்ச்சனா ஏதாவது கோபமாய் கத்தினாலும் அவளை அடக்குவார். ஆனால், அன்பு மனதளவில் வேதனை கொள்வதும்... கௌசல்யாவின் சொல்வீச்சு தாங்காமல் கலங்குவதும், கஷ்டப்படுவதும்... அர்ச்சனாவுக்குத் தெரியும்!

''இழுத்து ரெண்டு அறைவிடாமல்... அவள்கிட்ட கொஞ்சல் எதுக்கு? லட்சக்கணக்குல கொட்டி மெடிக்கல் சேர்த்துவிட்ட நன்றி கூட இல்லாமல் துள்ளறாள்! அவளை அடக்கலன்னா சரிப்படமாட்டாள். அப்புறம் உங்க இஷ்டம்!'' புலம்புவாள்.

அன்பு காரை விட்டு இறங்கிவர... அர்ச்சனா அருகில் ஓடினாள்.

''களைச்சிப்போய் இருக்கீங்களே! ரொம்ப வேலையா?'' அவள் அக்கறையாய் கேட்க... அன்புவின் களைப்பெல்லாம் ஓடிஒளிந்து கொண்டது.

''கௌசல்யா எங்கே, அர்ச்சனா?''

''படுத்துட்டாள்!''

''உடம்புக்கென்ன?'' பதற்றமாய் கேட்டான்.



''சாப்பிட்டுட்டுப் பார்க்கலாமே!'' கௌசல்யா... அன்புவை ஏதாவது சொல்லி கஷ்டப்படுத்தி... பட்டினியாய் படுக்க வைத்துவிடுவாளோ என்று அர்ச்சனாவுக்கு பயம்.

''முதல்ல என் செல்ல மகள்! அப்புறம்தான் சாப்பாடு.'' என்று சொல்லிக் கொண்டே போய் அறைக்கதவைத் தட்டினான்.

''கௌஷிம்மா... நான் அப்பாடா! தூங்கறியா செல்லம்? கொஞ்சம் கதவைத் திறடா, குட்டி!'' என்று அன்பு ஆசையாசையாய் கூற...

''தொல்லை பண்ணாதீங்க! தூக்கம் வருது! காலையில பார்க்கலாம்!'' உள்ளிருந்து குரல் வர... அன்பு வாடியமுகத்துடன் வந்து... பாதி உணவிலேயே கைகழுவினான்.

''ராங்கிக்காரி! ஏன்தான் இப்படி நோகடிக்கறாளோ? எல்லாம் நீங்க கொடுத்த செல்லம்தான்! நீங்கதான் பாசத்துல மகள்... மகள்னு உருகிப் போறீங்க! அவளைக் கொஞ்சம் கண்டித்தால் தேவலாம்! அவள் போக்கே சரியில்லை!''

அர்ச்சனா சொல்ல... கண்களில் வலியோடு நோக்கினான், அன்பு!

## 2

மறுநாள்...

இரவு எட்டு மணியாகியும் கௌசல்யா வரவில்லை. தவிப்பில் அர்ச்சனாவின் நிமிடங்களைக் கரைத்து விட்டு... எட்டரை மணிவாக்கில்... ஒரு அழகான இளைஞனின் டூவீலரில் வந்து இறங்கினாள். வண்டியை லாவகமாய்த் திருப்பி... கையாட்டி அவன் விடை பெற்றது... அர்ச்சனாவின் இதயத்துள் பழையவற்றைக் கிளறி, காயப்படுத்தியது.

''கௌசல்யா... யாருடி அந்தப் பையன்?'' - பயத்துடன் கேட்க...

''என் ஃப்ரண்ட்ம்மா!'' என்று அலட்சியமாய் பதில் வந்தது.

''இது பத்திரிகைக்காரவங்க கண்ணில் பட்டால்... படமெடுத்து.. இல்லாதது பொல்லாததை எழுதிவிட்டால்... உன் அப்பாவுக்கு அசிங்கம்மா!'' வருத்தத்துடன் சொல்ல...

''அவன் வெறும் ஃப்ரண்டதான்! சும்மா கத்தாதேம்மா! கடற்கரைக்குப் போனோம்! பேசிட்டு இருந்ததுல நேரம் போனதே தெரியல. இதைப் போய் தப்பா எடுத்துட்டு... பத்ரகாளிபோல ஆடணுமா?''

''ஏய்... இந்தக் கெட்ட பழக்கத்தை விட்டுடுடி! எங்களைக் கொல்லாதேடி! அப்பாகிட்ட நீ லேட்டா வந்ததையும் - அதுவும் ஒரு இளைஞனோட டூவீலர்ல வந்து இறங்கினதையும்... நான் சொல்லமாட்டேன். நாளைக்கு

நேரே வீட்டுக்கு வந்துடும்மா!'' கெஞ்சினாள், அர்ச்சனா.

அதற்கு அடுத்தநாள் இரவு அன்புவும் வந்துவிட... கௌசல்யா வந்தபாடில்லை.

''கௌசல்யா ஏன் வரவில்லை? ஏதாவது ப்ரண்ட்சுங்க வீட்டுல ஃபங்ஷன்னு சொல்லிட்டுப் போனாளா, அர்ச்சனா?'' கொஞ்சம் பதற்றத்தோடே கேட்டான்.

'இன்று அன்புவே கண்டு கொள்வார். கண்டதும் மகளை நினைத்து வருந்துவார். கடவுளே! அன்புவை வருந்தவிடாமல் காப்பாற்று! இன்று கௌசல்யா அந்த இளைஞனோடு வரக்கூடாது! கடவுளே... கடவுளே...!' மனதிற்குள் அர்ச்சனா வேண்டிக்கொண்டிருக்க...

அதே இளைஞனோடு ஜோடியாக... அவன் தோளை இறுக்கிக் கொண்டு வந்து... இறங்கி... அன்பு அங்கே இருப்பது கண்டு... அந்த இளைஞனுக்கு காற்றிலே முத்தத்தை பறக்க விட்டு... அவன் திரும்பிப் போகும்வரை கையாட்டிவிட்டு உள்ளே போனாள்.

எளிதில் கோபமடையாத அன்பு... அவள் அலட்சியம் கண்டு சட்டென்று கோபமானார். ''கல்லூரி விட்டதும் நேரே வீடு வராமல்...'' என்று குரலெடுத்து வேகமாய் பேசியவன், பின் தணிந்து,

''உன்னோட படிக்கிறானா?''

''இல்லே! காலேஜ்ல சீனியர்! மருத்துவம் நான்காவது வருடம் படிக்கிறார்!''

''அவனோட எங்கே போன?''

''ம்... கடற்கரையில கால் புதைய புதைய... ஓடிப்பிடிச்சி... காதல் விளையாட்டு விளையாடிட்டு வரேன்!'' நக்கலாய் பதில் வந்தது.

''ஏய்...'' என்று அர்ச்சனா கை ஓங்கி அருகில் போக..

''அர்ச்சனா..! நான் கேட்கும்போது நீ ஏன் அவசரப்படுகிறாய்? வாம்மா... வந்து உட்கார்!'' என்று கௌசல்யாவை அமர வைத்து... அருகில் அமர்ந்தார். அலையலையாய் பொங்கிய கோபத்தை... எழுந்த வேகத்துலேயே தன்னுள் போட்டு புதைத்துக் கொண்டார்.

''அப்பாகிட்ட எந்த பயமோ... அச்சமோ... வேண்டாம்! அதே போல அலட்சியமும் வேண்டாம்! அவன் யார்? அவன் உன் நண்பனானால் இவ்வளவு நேரம் அவனோடு இருந்துட்டு வந்தது தப்பில்லே!''

''என்னங்க நீங்க...?'' அர்ச்சனா அவசரமாய் இடைபுக...

''கொஞ்சம் பொறு அர்ச்சனா! சின்னக் குழந்தை! ஏன் இப்படி அவசரமும், கோபமும் படறே? சரி... கௌஷிம்மா.. அவன் வெறும் ஃப்ரண்ட் மட்டும் தானா? நிஜத்தை சொல்லு! நான் உன்னை எதுவும் சொல்லமாட்டேன்! தப்பிருந்தால்... திருத்தி புரிய வைப்பேன்!''



''ஃப்ரண்ட் மட்டுமில்லே! அவன் என் காதலனும்கூட! நாங்க ஒருத்தரை ஒருத்தர் உயிரா லவ் பண்றோம்!'' கௌசல்யா மௌனம் கலைய... அர்ச்சனா அழுதாள்.

''காதல் ஒண்ணும் தப்பில்லே! ஆனால், நீ மெடிக்கல் படிக்கிறே! ரொம்ப கஷ்டமான கோர்ஸ்! நீ படிப்பை மட்டும்பார்!'' அன்பு அழுத்தமாய் சொல்ல...

''நான் அவனைக் காதலிப்பேன்! கல்யாணமும் பண்ணிப்பேன்! என்னிஷ்டம்!'' கௌசல்யா சொல்ல...

''வேண்டாம் கௌசல்யா...!'' கண்ணீரோடு வந்த அர்ச்சனாவை அலட்சியமாய் பார்த்தாள்.

''காதல் பத்தி உங்களுக்கு என்ன தெரியும்?'' என்ற கௌசல்யா மாடி ஏறி ஓடினாள்.

அன்பு கண்களில் நீர்முட்ட... அர்ச்சனாவை என்ன சொல்லித் தேற்றுவது எனத் தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தான்.

அர்ச்சனா மடிந்து, அமர்ந்து, முதுகு குலுங்க அழுதாள்.

பீரோவின் ரகசிய அறையில் இருந்த... அந்த ஆல்பத்தைத் தூக்கி வந்து... அர்ச்சனாவின் முகத்தெதிரே வீசினாள், கௌஸ்யா!

முதல் பக்கத்திலேயே கணேஷும், அர்ச்சனாவும் மாலையும் கழுத்துமாய்..! அர்ச்சனா புது மஞ்சள் தாலியோடு கணேஷைப் பார்த்து புன்னகைத்துக் கொண்டிருந்தாள். அருகில் அன்பு நின்றுகொண்டிருந்தான்.

''காதலிச்சி கல்யாணம் பண்ணிட்டதா நீ அடிக்கடி சொல்லுவீயே... அது இந்த போட்டோவில் இருக்க கணேஷையா? இல்ல அன்புவையா? கணேஷ்தானே... என் அப்பா! அப்போ அன்பு யார்? அன்போட ஏன் வாழறே? என் அப்பா இறந்ததும்... இவரைக் கல்யாணம் பண்ணிட்டையா? அப்போ உன் காதல் என்னாச்சி..?'' கௌசல்யா கத்தினாள்.

''காதல்பத்தி... நீ பெருமையா பேசுவே! இவர் என்னன்னா விதவிதமான காதலை... கதையா எழுதி... படம் பண்ணி... காசு சம்பாதிப்பார்! ஆனால், உங்களுக்கு காதலோட அர்த்தம் மட்டும் தெரியாது! உங்க அகராதியில காதல்ன்னால்... கணவன் இறந்ததும்... அவசர அவசரமா இன்னொருவரை மணந்து மகிழ்ச்சியா வாழ்வதா? இப்படி தப்பான அர்த்தம்புரிஞ்சிட்டு வாழற உங்களுக்கு காதல்பத்தி... என்ன தெரியும்?'' ஆங்காரமாய் கேட்டாள்.

அர்ச்சனா... தாமதிக்காமல் ஓங்கி - கன்னம் பழுக்க... கௌசல்யாவை அறைந்தாள்.

''காதலைப்பத்தி யார்கிட்ட கேக்கறே? காதல்தான் உன்னை

வளர்த்திருக்கு! காதல்தானடி நீ அநாதையாகாமல்... உன்னைக் கல், மண், காற்று, வெப்பம் தாக்காமல்... பத்திரமாய் பாதுகாத்திருக்கு! அதே காதலால்தான் நானும் உயிரோடு இருக்கேன்! அதே காதல்தான் நானும், நீயும் இந்த சமுதாயத்தில் நிர்கதியா நின்னபோது... கை கொடுத்து காப்பாற்றி இருக்கு! நான் கணேஷ்மேல் கொண்ட காதலால் நீயும்... என்மேல் அன்பு கொண்ட காதலால் நானுமாய் வாழ்கிறோம்! அந்தக் காதல் மட்டும் இல்லேன்னால்... நானும், நீயும் புதைஞ்ச இடத்தில் புல் இல்ல... பெரிய மரமே தோன்றி கிளை பரப்பி வந்திருக்கும்!'' என்று ரௌத்திரமாய் கத்திய அர்ச்சனா... கொஞ்சம் மூச்சு வாங்கி... பின் சொன்னாள்:

''இவரையும் என்னையும் தப்பாவா நினைக்கிறே? என் கழுத்தில் கிடப்பது தாலிச்செயின் இல்லே... வெறும் தங்கச் செயின்! இவர் என் புருஷனில்லே! ஆனால் சமுதாயத்தின் பார்வையில் மட்டும் புருஷன்! அது தெரியுமா...?''

''அம்மா...'' கௌசல்யா அலற...

''அதுபோல நீ என் மகளுமில்லே! கணேஷ், அன்புவோட பிள்ளையுமில்லே!''

''அ...அம்மா... நீ... நீ பொ... பொய்தானே சொல்றே?'' வீறிட்டவள் அதிர்ச்சியில் திக்கித் திக்கிக் கேட்டாள்.

''நிஜம்! நிஜம்டி! அநாதையா கிடந்தவளை எடுத்து, கட்டி, காத்து, வளர்த்தால்... எங்கள் நெஞ்சுமேலேயே ஏறி மிதிக்கிறாயே! கொஞ்சநாளா இதுக்காகவா... என்னையும் இவரையும் காயப்படுத்தினே! என்கிட்ட கேட்டிருக்கலாமே? அதைவிட்டு இப்படி 'உன் புருஷன்... உன் புருஷ'ன்னு வலிக்க வைத்தாயே!''

''அப்பா...'' என்று கதறியவளை அன்பு அணைத்துக் கொண்டான்.

''ஏய்... நாங்கள் சிரித்து, பேசி, தொட்டு விளையாடிப் பார்த்திருக்கிறாயா? நான் ஒரு அறையில... அவர் ஒரு அறையில படுப்பதை பார்த்தவள் தானே? நீ சின்னக் குழந்தையில 'அம்மாவுக்கு முத்தம் கொடுப்பா'ன்னு கெஞ்சினால்... சிரித்து மழுப்பிட்டு தூரப் போனதை பார்த்ததில்லே? சமீபத்துலகூட... 'அம்மாவைக் கட்டிட்டு ஒரு குத்தாட்டம் போடுங்கப்பா'ன்னு சொன்னியே... அது உனக்கு ஞாபகமிருக்கா? நிஜ புருஷனா இருந்தா.. சான்ஸ் கிடைச்சுதடான்னு என்னைக்கட்டிட்டு ஆடியிருக்கமாட்டார்?

அன்னைக்கு... உன்னோட, நான் - என் புருஷன் செத்ததும் - என் வீட்டுக்குப்போக... என் அப்பா 'உன்னை பெத்த தோசத்துக்கு உனக்கு மட்டும் சோறு போடலாம்! ஆனால் நீ கண்ட கழிசடையோட வந்திருக்கே...! உனக்கு என் வீட்டுல இடமில்லே'ன்னு துரத்தினப்போ... நடுவீதியில் நின்ற நம்மை... அன்பு அவர் வீட்டையும் பகைச்சிட்டு நம்மைக் காத்த கடவுள்!



எத்தனை வசதியுள்ளவர்! அவர் பண்ணையில... கால்மேல கால் போட்டுட்டு சாப்பிடலாம்! அதையெல்லாம் விடுத்து... இந்த சென்னை வந்து... எத்தனை துயரம், துன்பங்களைக் கண்டிருக்கார்! ரெண்டு பேரும் பட்ட கஷ்டமெல்லாம் உனக்காகத்தானேடி! என் அப்பா, அம்மாவைக்கூட பார்க்காமல்... உனக்காக... எல்லாம் உனக்காகத்தானேடி!'' அர்ச்சனா அடக்க முடியாமல் அழுதாள்.

அன்பு துடிக்க... கௌசல்யா மிரட்சியோடு பார்க்க...

அந்த நாளைய ஞாபகங்களை மெல்ல - வலிக்க வலிக்க... ஏடு திருப்பினாள், அர்ச்சனா-

இதனால்... பின்னால் வரப்போகும் விபரீதம் தெரியாமல்!

## 3

'ஆர்.கே.சண்முகம் ஆர்ட்ஸ் அண்டு சயன்ஸ் காலேஜ் - கள்ளக்குறிச்சி' என்ற பித்தளை போர்டைத் தாங்கிய... அந்தக் கல்லூரி உயர்ந்து, பரந்து, அத்தனை வசதிகளோடும் கம்பீரமாய் காணப்பட்டது.

கல்லூரி கேட்டே கலைநயத்தோடு இருந்தது. வழிநெடுகிலும் அபூர்வ மலர்ச்செடிகளின் அணிவரிசை நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்! கல்லூரியின் முன்புறம் செடி, கொடி, மரங்களால் சூழ்ந்த பெரிய பூங்கா உள்ளது. அந்த நகரத்திற்கும், அதனைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் அந்தக் கல்லூரி பெரிய வரப்பிரசாதம்!

'தரமான கல்வி, குறைந்த கட்டணம், இலவச பஸ்வசதி' என சேவைக்காய் மருத்துவர் ஒருவரால் நிறுவப்பட்டது.

அன்று கல்லூரி முதல் நாள்! இளங்கலை, முதுகலை எனப் படிக்கும் மாணவ, மாணவியர் குதூகலமாய்.... கொண்டாட்டத்தோடு புற்றீசலாய் உள்ளே நுழைந்து கொண்டிருந்தனர்.

'அர்ச்சனா' என்ற அழகுதேவதை... மருளும் மான் விழிகளுடன்... நேரான - நேர்த்தியான நாசியுடன்... இரண்டு ரோஜா இதழ்களைக் கொய்து ஒட்ட வைத்தாற் போன்ற உதட்டுடன்... அழகிய குண்டு முகத்துடன்... அந்தக் காலத்து இளம் ஸ்ரீதேவி ஜாடையில் இருந்தாள். ஆப்பிளாய் உருண்டு திரண்ட கன்னக் கதுப்புகளும்... கன்னத்துக் குழியும்... சாட்டையாய் நீண்டு இடைக்குக் கீழே தொங்கும் அந்த நீள முடியும்... அர்ச்சனாவுக்குக் கூடுதல் கவர்ச்சி!

கல்லூரி சாலையின் வழிநெடுக போடப்பட்டிருந்த பெஞ்சில் மாணவ, மாணவியர் கூட்டம் கூட்டமாய் அமர்ந்து... புது மாணவர்களைக் கிண்டலடித்துக் கொண்டிருக்க... அர்ச்சனா பயத்துடன் போக... அவளைப்

பார்த்து...

''நான் பார்த்ததிலே அவள் ஒருத்தியைத்தான்
நல்ல அழகியென்பேன் நல்ல அழகியென்பேன்...''

''அழகெனும் ஓவியம் இங்கே
உன்னை எழுதிய ரவிவர்மன் எங்கே...''

''ஹலோ மிஸ் ஹலோ மிஸ் எங்கே போறீங்க...''

''தீப்பிடிக்க தீப்பிடிக்க முத்தம் கொடுடி...''

என்று மாணவர்கள் இவளைப் பார்த்துப்பாட 'முருகா சரணம்' சொல்லிக் கொண்டே ஓடினாள்.

அன்பு, கணேஷ் - இருவரும் முதுகலை இரண்டாம் வருடம் படிக்கும் மாணவர்கள்!

அன்பு... மாநிறமானவன்! வசீகரிக்கும் அழகுடன்... ஆண்மை நிரம்பிய கம்பீரத்துடன்... உயர்ந்து வளர்ந்திருப்பான். அழுத்தமானவன். சிரிக்காமலேயே சிரிக்கும் இதழும், கண்களும்... அந்த அடர்ந்த மீசையும்... அவனுக்குக் கூடுதல் கவர்ச்சி! அவன் 'ஸ்ப்லெண்டர் ப்ளசை' ஓட்டி வரும் அழகே தனிதான்!'

கணேஷ்... நல்ல சிவந்த நிறம். இந்தி நடிகன் போன்று மீசையில்லாமல்... மொழுமொழு கன்னத்தோடு... அமுல் பேபியாய் இருப்பான். கலகலப்பானவன்! மற்றவரை சிரிக்க வைப்பதில் வல்லவன். அவனிருக்குமிடத்தில் சந்தோஷத்திற்கும், சிரிப்பிற்கும் பஞ்சமிருக்காது!

அன்பு ஏதோ சொல்ல... கணேஷ் அவனைத் துரத்த... அன்பு ஓடினான். எதிரே வந்த அர்ச்சனாவைக் கவனிக்காமல்... வேகமாய் ஓடி வந்தவன்... அவள் பூந்தளிர் மேனியில்... பாறையாய் மோத... பூவை அவள்... அவன் கனம், வேகம் தாங்காமல் புத்தகத்தோடு விழ... புத்தகம் ஒருபுறமும்.... சாப்பாடு அடங்கிய பாக்ஸ் திறந்து, சாதம் ஒரு புறமுமாய் சிதறி... அவளும் விழுந்து கிடந்த காட்சி... அன்புவைக் கலவரப்படுத்தியது.

''ஸாரி... ஸாரிங்க...!''அன்பு பதற்றத்துடன் சொன்னான்.

''எழுந்திரிங்க! மடையா... ஓடினால் எதிரில் வருபவர்களைத் தெரியாதா? இவங்க மேல் மோதி சாய்ச்சுத் தள்ளிட்டியே! அவனுக்காக நான் மன்னிப்பு கேட்கிறேன்!'' என்ற கணேஷ் புத்தகங்களைப் பொறுக்கிக் கொடுத்தான்.

அர்ச்சனா மருட்சியுடன் அன்புவை நோக்க... அந்த விழியின் வீச்சு தாங்காமல்... தலை குனிந்தான். அவள் பார்வை இதயம்வரை பாய்ந்து... ஊடுருவி... அவனை என்னவோ செய்தது.

அர்ச்சனா, கையில் உள்ள மண்ணைத் தட்டிக்கொள்ள.. அவள் கையில் சிராய்த்து ரத்தம் வடிய... அன்பு பதறி கைக்குட்டையை நீட்ட... அவள்



வாங்கித் துடைத்தாள்.

''ஸாரிங்க! அடி பலம் போலத் தெரியுதே! ஆஸ்பிட்டல் போகலாமா?'' அன்பு கேட்க...

''அதெல்லாம் வேண்டாம்! கர்சீப் பாழாயிடிச்சே! ஸாரிங்க!'' என்று கர்சீப்புக்காக கவலைப்பட்டவளை அதிசயமாய் நோக்கினான்.

மதியம்... காண்ட்டீனில் உணவு வாங்கிக் கொண்டுபோய் அவளிடம் கொடுக்க... ''எதுக்கு இதெல்லாம்?'' என்று மறுத்தவள், பின் வாங்கிக் கொண்டாள்.

''உங்களுக்கு பசிக்குமே என்று கொஞ்சமும் கவலைப்படாமல்... இந்த மடையன் சாதமும், வடையுமா மொக்கிட்டு இருக்காங்க! நான் ஞாபகப்படுத்த... வாங்கினான்!'' என்று போகும்போது கணேஷ் சொல்லிவிட்டுச் செல்ல...

அன்புக்கு கொஞ்சம் ஆத்திரம் வந்தது. 'இந்த கணேஷ் ஏன் இப்படி நடந்து கொள்கிறான்?'

''ஏய் கணேஷ்.. காலையில நீ துரத்திட்டு வந்ததுல... தெரியாமல் மோத... அதை அவகிட்ட நான் வேணும்னே மோதினாப்பல சொன்னே! இப்போ சாப்பாட்டை நான் ஞாபகப் படுத்தி வாங்கினேன். இன்னும் நான் சாப்பிடவே இல்லை! ஆனால் சாதமும், வடையுமா...'' என்ற அன்புவின் பேச்சில் குறுக்கே புகுந்து...

''அழகான பெண்கிட்ட கொஞ்சம் ஹீரோயிசம் காட்டலாம்ன்னுபார்த்தா விடமாட்டே போல! ம்?''

''உன் ஹீரோயிசம் அதிகமா மிஞ்சிப் போய்... அது பிடிக்காமல்... காலில் கிடப்பதை தூக்கிக் காட்டிடப் போறாங்கடா!''

''ஏய்... ஏய்...'' கணேஷ் கை ஓங்க, நழுவி ஓடினான் - அன்பு!

இரவெல்லாம்... அன்புவின் கனவில் அர்ச்சனா வந்து... மோகனப் புன்னகை வீசி.. மறைந்துமறைந்து போனாள்.

மறுநாள் அர்ச்சனா உள்ளே நுழைய... பூவைக் கண்ட வண்ணத்துப் பூச்சியாய் கணேஷ் அவள் அருகில் ஓடினான்.

''என்னங்க... காயம் ரொம்ப வலிச்சதா? மருந்து போட்டீங்களா? எங்களைப்பற்றி அம்மாகிட்ட சொன்னீங்களா? சபிச்சாங்களா?'' மூச்சுவிடாமல் கேட்க... அவள் மௌனமாய் நின்றாள்.

''நான் கணேஷ்! இவன் அன்பு! ரெண்டு பேரும் ஃப்ரண்ட்ஸ்! முதுகலை ஆங்கிலம் படிக்கிறோம்! நீங்க?''

''நான் அர்ச்சனா! இளங்கலை ஆங்கிலம்தான்!'' மெதுவாய் சொன்னாள்.

''கள்ளக்குறிச்சியில உங்களைப் பார்த்ததில்லையே! புதுசா?''

''சொந்த ஊர் விழுப்புரம். வேலை மாறுதலால் இங்கே வந்தோம். அப்பா போஸ்ட்ஆபீஸ்ல பெரிய பதவியில இருக்கார்.''

''நீங்க ரொம்ப அழகு - நடிகை ஸ்ரீதேவி போல!'' கணேஷ் சொல்ல...

'கடங்காரா... அநியாயத்துக்கு வழியறையே!' அன்பு நினைத்துக் கொண்டான்.

அன்புவை அர்ச்சனா விழிகளால் நோக்க...

''பக்கத்துல 'பரிகம்'ன்னு ஒரு மலையடிவார - இயற்கை கொஞ்சும் - கிராமம்தான் இவனுடையது! கொழுத்த பணக்காரன். பெரிய பண்ணை வீடும்.. விவசாய நிலங்களும்... நகரத்துல வாடகைக்கு காரும்ன்னு இருக்கு! பண்ணைக்குப் போனால் திரும்பவே மனசு வராது! கரும்பும், வாழையும், பாக்குத் தோட்டமும், நெல்லும்... அப்பப்பா... எத்தனை அழகா விளைஞ்சி இருக்கும் தெரியுமா! '' கணேஷ் விபரம் சொல்ல...

'இத்தனை வசதியுள்ளவன் ஒரு அலட்டலும் இல்லாமல்... அமைதியாய்.. சாதாரணமாய் இருக்கிறானே?' என்று மெச்சுதலாய்... அன்புவை அர்ச்சனா நோக்க...

அன்பு, அவளின் வசீகரிக்கும் காந்தப் பார்வையின் வீச்சு தாங்காமல்... அவள் கண்களில் விழுந்து விட்டான் - எழவே முடியாத அளவு!

மீண்டும் அன்பு ''ஸாரிங்க..!'' எனச் சொல்ல..

''இட்ஸ் ஓ.கே! நான் வரேங்க!'' இருவரையும் பார்த்து சொல்லிவிட்டு அகல... கணேஷ் பின்னாலேயே ஓடி - ஏதோ சொல்ல... சலங்கை ஒலியாய் - அவளின் சிரிப்பு சப்தம்!

அன்புவின் இதயத்தில் - அர்ச்சனாவைக் கண்டதிலிருந்து - ஒரு ரசாயன மாறுதல்! இதுவரை சுவாரசியமாய் எந்தப் பெண்ணையும் நோக்காதவன்... அர்ச்சனாவைக் காணும்போதெல்லாம்.... பரவசத்துடன் கூடிய... ஆழ்ந்த பார்வையைப் பதித்தான்.

அன்புவின் கண்ணுக்குள்ளும், கருத்துக்குள்ளும், நினைவுக்குள்ளும்... தடம் பதித்து... அர்ச்சனா கண்ணாமூச்சி காட்டி ஓடினாள்.

கண்ணை மூடினால் கனவிலும்... கண்ணைத்திறந்தால் எதிரிலுமாய்... அர்ச்சனாவின் மௌனம் கலந்த பார்வை அவனைச் சித்திரவதை செய்தது!

அர்ச்சனா... எவ்வளவு அழகான பெயர்! ஆளுக்கேற்ப... நேர்த்தியான நெஞ்சம் நிறையும் பெயர்! எத்தனை முறை சொன்னாலும்... சலிக்காமல், இனித்தது!

அவளைக் கண்டால் நெஞ்சுக்குள் இனம் புரியாத குளிர்ச்சி! மீண்டும் மீண்டும் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று அலையலையாய் தவிப்பு!



அவள் பார்வை அவனை வருடிச் சென்றால்.... தென்றல் தீண்டியது கணக்காய்... மேனியெங்கும் ஒரு சுகந்தம் பரவியது! அவள் விழியின் ஸ்பரிசத்தால்.. அவளிடம் தொலைந்துபோனான்!

எத்தனையோ பேரழகிகளைக் கண்டவன்... இதுவரை எவளிடமும் சறுக்கியதில்லை...! சலனப்பட்டதில்லை...! சஞ்சலப்பட்டதில்லை...!

முதன்முதலாய் அவனுள் சலனத்தையும், சஞ்சலத்தையும், பரவசத்தையும் ஏற்படுத்திய முதல் பெண், அர்ச்சனா!

அர்ச்சனா..! அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட.... அழகான கள்ளி!

அவன் நினைவுகளை ஆக்கிரமித்துக் கொண்ட.... சாகசக்காரி!

அவன் இதயத்தை - சொல்லாமல் கொள்ளாமல் - போர் தொடுத்து வந்து - வென்று... வெற்றிவாகை சூடிக் கொண்ட.... இளவரசி!

அர்ச்சனா... அன்புவைத் தன் கடைக்கண் பார்வைக்காக ஏங்கச் செய்து விட்டாள்.

அவனை ஆழிப்பேரலையில் சிக்கிய தக்கையாய்... தவிக்கச் செய்துவிட்டாள்.

அர்ச்சனா கால்தடம் பதித்த பூமியை முத்தமிட ஆசை வந்தது.

இதுவரை சிறுகதைகளும், ஒருசில நாவல்களும் எழுதிய அவனை... கவிதையும் எழுத வைத்து, கவிஞனாக்கி விட்டாள்.

முதல்முதலாய் அவனுள் காதல், மொட்டுவிட்டு... மலர்ந்து... மணம் வீசியது.

மொட்டை மாடியில் படுத்துக் கொண்டு... நிலவில் அர்ச்சனாவின் வதனம் கண்டு... அழகாய் சிரித்துக் கொண்டான் - அந்தக் காதல், கருகப்போவது தெரியாமல்!

## 4

கணேஷ், அர்ச்சனா சகஜமாய் பேசிப் பழக... அன்பு, அவள் ஏதாவது கேட்டால் பதில் சொல்வான். அநாவசியமாய் பேச மாட்டான்.

ஆனால், கணேஷ் அர்ச்சனாவைப் பார்ப்பது, பேசுவது, சிரிப்பதுவே கொள்கையாய் கொண்டான் - அவளைக் கண்டநாள் முதல்! சிலசமயம் அன்புவைத் தவிர்த்து விட்டு அவள் பின்பு ஓடிவிடுவான்.

அன்புவுக்கு, அவளோடு பேசுவதைவிட.... தள்ளிநின்று... அவள் பேசும் பாங்கை.. உதடு சுழிக்கும் அழகை... கன்னத்துக் குழியை.. கண்கள் பேசும் கோடிக்கவிதையை ரசிக்கவே பிடிக்கும்! அர்ச்சனாவை விரும்பும் அவன்

மனமோ... அவளைக் கண்டவுடன் மயங்கி... அவள் காலடியில் அவனைக்கேளாமலேயே தஞ்சம் புகுந்து விடும்.

அன்புவுக்கு அன்று பிறந்தநாள். கணேஷ் நேற்று உளறியதில் தெரிந்து கொண்டு... கடை கடையாய் ஏறி... கடைசியாய் ஒரு போட்டோவை வாங்கினாள்.

அர்ச்சனா அழகாய் புன்னகைத்து "பிறந்தநாள் வாழ்த்துக்கள் அன்பு!" என்று கைகுலுக்கி... பார்சலை அவனிடம் கொடுக்க... பிரித்துப் பார்த்தவன்... இரவிவர்மாவின் 'மோனாலிசா' படம் கண்டு விழித்தான்.

"மோனாலிசா படம்! பிடிச்சிருக்கா?"

'ஆயிரம் மோனாலிசாக்களை உருக்கி, ஒன்று சேர்த்து செய்த சிற்பமாய் காட்சியளிக்கும் உன்னை... இதைவிட ரொம்பவே பிடிக்கும் அர்ச்சனா!'- சொல்லாமல் ம்னதிற்குள் வார்த்தையாய் வடித்துக் கொண்டான்.

"இந்த மோனாலிசாவுக்கும், உங்களுக்கும் ஒரு ஒற்றுமை இருக்கு! அது என்னன்னு கண்டு பிடியுங்க?" குதூகலமாய்க் கேட்க...

"மோனாலிசாவுக்கும் எனக்குமா? என்ன அர்ச்சனா விளையாடறீங்களா?" என்றவன், போட்டோவை உற்று உறுத்தவனின் விழிகள்... விடை கண்டு பிடிக்க முடியாமல் சோர்ந்து... கடைசியாய் அர்ச்சனாவைக் கேள்வியாய் நோக்க...

"அர்ச்சனா... அவன் படிப்புலதான் கெட்டி! இதுபோல ஜி.கே.வுல எல்லாம் சூன்யம்! நீயே சொல்லிடு!" கணேஷ் ஜோக்கடிக்க...

"மோனாலிசா, அந்தப் படத்துல பல்வரிசை தெரிய சிரிக்க மாட்டாங்க! ஆனால், அந்தக் கண்ணும், உதடுகளும் கோடிப்புன்னகையைக் கொட்டும்! அதுபோலத்தான் நீங்களும்! இந்த கணேஷ்போல ஆ... ஊன்னு சிரிக்காமல்... நாலு பேர் திரும்பிப் பார்க்கறாப்போல இல்லாமல்... குளோசப் விளம்பரப் பையன்போல 'ஹஹஹா'.... ன்னு விழுந்து விழுந்து சிரிக்காமல்... உங்க புன்னகையை உதடுகளாலும், கண்களாலும் வெளிப்படுத்துவீங்க!"

அர்ச்சனா அன்புவைப் புகழ... அவனிதயத்தில் கோடி பட்டாம் பூச்சிகள்... சிறகடித்துப் பறந்தன.

அங்கிருந்த கோயிலுக்கு அழைத்துப் போனாள்.

இதழ்களில் இதயபூர்வமான வேண்டுதலோடு... அர்ச்சனா கண்மூடி நின்ற காட்சி... சித்தன்ன வாசல் ஓவியமாய் உருவெடுத்து...அவன் உயிருக்குள் ஊடுருவியது.

"அன்பு..! உங்களுக்காகத்தான் வேண்டிட்டேன்! நீங்க ஆசைப்பட்ட சினிமாத்துறைக்குப் போகணும்... முன்னேறணும்... சாதிக்கணும்ன்னு



வேண்டிக்கிட்டேன்! அடுத்ததா... உங்க உள்ளத்துல உள்ள ஆசைகள், விருப்பங்கள் அனைத்தும் - ஒரு கஷ்டமும் அநுபவிக்காமல் நிறைவேறணும்னு வேண்டிக்கிட்டேன்! போதுமா... இல்ல இன்னும் எதுனா வேண்டணுமா, அன்பு?" குழந்தையாய் கொஞ்சிக் கேட்க...

மனதில் ஆயிரம் ஆசைகளும், எண்ணங்களும் அலைமோதி... அவனைப் புரட்டிப்போட்டது.

'உன்னிடம் நான்கொண்ட காதல் நிறைவேறவேண்டும், அர்ச்சனா! உன்னிடம் என் மனதை திறந்து காட்ட தைரியம் வேண்டும், அர்ச்சனா!'

'கணேஷ் போல சிரிக்க சிரிக்கப் பேசத்தெரியாது! ஆனால், உன்னைத் துன்பமும், துயரமும், கஷ்டமும் தாக்காமல் சிப்பிக்குள் முத்தாய்... உன்னைக் காப்பேன், கண்ணே!'

அவன் முகத்தின் முன்பு சொடுக்குப் போட்டாள்.

"என்ன அன்பு..! கனவா? எந்தப் பெண்ணோடு... நடனமாட காதல் தேசம் புறப்பட்டு விட்டீர்கள்?"

"காதலா? இவனுக்கா? ஜோக்கா அர்ச்சனா? சரியான சாமியாரைப் பார்த்து என்ன வார்த்தை கேட்கிறாய்? நானாவது பொண்ணுங்களை சைட் அடிப்பேன்! குடம் குடமா ஜொள்ளு விடுவேன்! அன்பு இதிலெல்லாம் சுத்த சைவமானவன் ! அவன் பழகிய முதல் பெண் நீதான். உன்கிட்டகூட பேசறனாபார்! ஏன்டா... காதலுக்கு எத்தனை எழுத்துடா? இதுகூட பயலுக்குத் தெரியாது, அர்ச்சனா! இவனெல்லாம் எப்படி கதையும், கவிதையும் எழுதறானோ! நிறைய புத்தகங்கள் படிப்பான்! அதனால் வந்த பழக்கதோசமாய் இருக்கும்!" கணேஷ் விழுந்து விழுந்து சிரிக்க...

'மடையா... என்னுயிர் தோழா... எனக்கும் காதல் தெரியும்... காதலைக் கற்றுத்தந்தவள் அர்ச்சனா! என் இதய வாசலைத் திறந்து... தன் விழி மலரால் புள்ளி வைத்து... இதயம் முழுக்கக் காதலெனும் கோலம் போட்டுவிட்டாள், என் அர்ச்சனா!'

அர்ச்சனாவின் மிருதுவான சருமத்தின் மென்மை... அவனுள் மூடு பனியாய் ஊடுருவி... ரொம்ப நேரம் சிலிர்க்க வைத்தது.

அர்ச்சனா பற்றிய கையை, உதட்டுக்குக் கொண்டு போய் எத்தனை முறை முத்தமிட்டானோ.. அது கடவுளுக்கே தெரியும்!

அந்தக் கையைக் கன்னத்தில் வருட... அர்ச்சனாவே வந்து தீண்டியது கணக்காய் இருக்க... அவன் நினைவுப் புத்தகத்தில் அன்றைய சம்பவங்களைக் குறிப்பெடுத்து விட்டு... தூக்கத்துக்காய் தவிக்க... பொழுது புலரும் போது தளர்ந்து உறங்கினான்-

இனி அவன நிம்மதியாய் உறங்கவே முடியாது... எனத் தெரியாமல்!

## 5

**க**திரவனின் உக்கிரமான பொசுக்கும் வெய்யில் குறைந்து... தென்றல், வீதிகளில் யாரையும் கேளாமல்.. அங்குமிங்கும் குதித்து ஓடி... மனிதர்களின் முன்னுச்சி முடியை... செல்லமாய் சிலுப்பி விளையாடிக் கொண்டிருந்த மாலைப் பொழுது!

''வேலையிருக்கு! நீ போ அன்பு'' என்று சொல்லிவிட்டு.. பூங்காவில் வந்து அமர்ந்தான், கணேஷ்.

கணேஷின் சீண்டல், குறும்பு, ஏதாவது பெரிய ஜோக்கை சொல்லிவிட்டு... அடுத்தவர் விழுந்து விழுந்து சிரிக்க... அவன் சீரியஸாய் இருப்பது... எல்லாமே அர்ச்சனாவிற்குப் பிடித்திருந்தது. சில சமயம் அவள் காதுகளில் 'ஏ' ஜோக் கூட சொல்லுவான்.

சமீபகாலமாய் கணேஷ் அவளைக் கனவில் கூட துரத்தி துரத்தி வந்தான்! நல்லவன்! குழந்தைபோல கள்ளம் கபடம் இல்லாத கணேஷை ரொம்பவே பிடித்து விட்டது.

அவன் இன்று காலையில் அவளிடம் வந்து ''அர்ச்சனா... உனக்காக மாலை கல்லூரி பூங்காவில் காத்திருப்பேன்! நீ வரவேண்டும்!'' எனக் கூறிப் போனான்.

அர்ச்சனா அவன் எதிரே சென்று கனைக்க... ''உட்கார் அர்ச்சனா!'' என்று அருகே சுட்டிக்காட்ட, அமர்ந்தாள்.

''அர்ச்சனா..! எனக்கு மூடி மறைக்கத் தெரியாது! நேரே விஷயத்துக்கு வரேன்! எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு! நான் உன்னை நேசிக்கிறேன், அர்ச்சனா! என்னுள்ளே உன்னைவைத்து பூஜிக்கிறேன்! நீயில்லாத ஒரு எதிர்கால வாழ்க்கையை நினைச்சிக் கூட பார்க்க முடியாது! உனக்கு சம்மதமா, அர்ச்சனா?''

அர்ச்சனா..! மவுனமாக இருக்க...

''அர்ச்சனா மவுனமா இருக்கியே!''

அவள் தலையாட்டினாள்.

''என்ன அர்த்தம்? புரியலையே! எதுவா இருந்தாலும் வாயைத் திறந்து சொல், அர்ச்சனா! பாஸிட்டிவான பதில்ன்னா... சந்தோஷப்படுவேன்! நெகட்டிவ்வான பதில்ன்னால் துக்கப்படுவேன்! துயரப்படுவேன்! அதன் பிறகும் நம் நட்பு வெறும் ப்ரண்ட்சா தொடரும்! ஆனால் என்னுள் விழுந்த முதல் காதல் வித்து! சம்மதித்தால் பூத்துக் குலுங்கும்! மாட்டேன்னால் கருகிடும்! என் இதயமும் கூட! இது முக்கியமான நேரம் அர்ச்சனா! யோசிக்க டைம் வேணும்ன்னாலும் நீ எடுத்துக்கலாம்! மெதுவாய் உன் பதிலைச் சொல்லலாம்! டைம் வேணுமாடா?''



கணேஷை இதற்கு மேல் கெஞ்சவிட பிடிக்கவில்லை.

''ஐ லவ் யூ, கணேஷ்! ஐ லக் யூ டா!'' என்று உடைந்தாள். ''நீ ஏற்படுத்திய சலனம்... என்னுள்ளும் காதலாய் மலர்ந்திருக்கு கணேஷ்!'' அர்ச்சனா தவிப்புடன் கூற...

''ஐ லவ் யூ! ஐ லவ் யூடி, அர்ச்சனா!'' அவள் கைபிடித்து உருகினான்.

''தேங்க்யூ... தேங்க்யூடா கண்ணம்மா...!'' கையைக் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

''ஆனால், என் அப்பா கோபக்காரர்! அவர் எதிர்ல நின்னு நானெல்லாம் பேசினதே கிடையாது! அவர் ஒத்துக் கொள்வது கஷ்டம்! உங்க வீட்ல எப்படி? நீயோ ஆச்சாரமான ஐயர் வீட்டுப் பையன்! நாங்க அசைவம் சாப்பிடறவங்க! உங்க அம்மா என்னை ஒத்துப்பாங்களா, கணேஷ்?''

''ஒத்துட்டா, தெரிஞ்சு கல்யாணம்! இல்லேன்னால் அவர்களை எதிர்த்து ரிஜீஸ்டர் மேரேஜ் செய்துக்க வேண்டியதுதான். அம்மா, அப்பாவெல்லாம் ஒரு குறிப்பிட்ட வயசு வரைதான் அர்ச்சனா! அதன் பிறகு காலமெல்லாம் கைகோர்த்து வருபவள் மனைவி மட்டுமே! அந்த மனைவி எனக்குப் பிடிச்சவளாய் இருக்க வேண்டுமல்லவா? காதல்ன்னால் எதிர்ப்புகள் வரும்தான்! அதையெல்லாம் மீறி ஜெயிக்கிற சக்தி காதலுக்கு உண்டு! நம் காதல் ஜெயிக்கும்! நம்புவோமே! எனக்கு ஒரு அண்ணன் இருக்கான். அண்ணி இறந்துட்டா! தங்கைக்கு வரன் பார்க்கறாங்க! அவளுக்கு முடியட்டும்! நீ படிப்பை முடிச்சிட்டு வா! நானும் படிப்பை முடிச்சிட்டு வேலை தேடி சுயமா சம்பாதிக்க ஆரம்பிக்கிறேன். அதன் பிறகு வீட்டுல சொல்லலாம்! என்ன?'' அழகாய் பேசினான் கணேஷ்.

''என்னால நம்ப முடியல கணேஷ்! எத்தனை அழகா பேசறே!''

''பின்னாடி வரப்போகும் பிரச்சனைக்காக... முன்னாடியே பயந்து சாகவேண்டாம்! நான் இருக்கேன், அர்ச்சனா!''

''சரி கிளம்புவோமா, கணேஷ்?''

''ஒருவருக்கொருவர் காதலை வெளிப்படுத்தி இருக்கோம்! இதைக் கொண்டாட வேண்டாமா? காதல் பரிசாய் ஏதாவது கொடேன்!'' கண்ணடித்துக் கேட்க..

''கண்ணடிக்கற வேலையெல்லாம் என்கிட்ட வச்சுக்காதே! நாளைக்கு எதுனா கிஃப்ட் வாங்கிவரேன்!''

''ஏன் அர்ச்சனா... காதலில் முத்தத்தை விட... விலையுயர்ந்த பரிசு உண்டா? நம் காதலர்கள் புதுசா ஏதாவது கண்டு பிடிச்சி இருக்கிறார்களா?''

''ஏய் பொறுக்கி...! உன் போக்கிரித்தனத்தை என்னிடம் காட்டாதே!''

''ப்ளீஸ் அர்ச்சனா... என் கண்ணில்லே! கிஸ் மீ! கிஸ் மீடி!'' உதடு குவித்துக் கேட்க...

"எல்லாம் கல்யாணத்துக்கு பின்னாடிதான்! என் விரல்நகம் தொடக்கூட இனி நான் அனுமதிக்கமாட்டேன்!" கண்டிப்பாய் கூற...

"இன்னைக்கு ஒரு நாள்... ஒண்ணே ஒண்ணு! உதட்டுல கூட வேண்டாம்! கன்னத்துல கொடுபோதும். கண்ணம்மா ப்ளீஸ்..."

"பெண் என்றால் இதுதானா? பெண்சுகம் இப்படித்தான் இருக்குமா?ன்னு தெரிஞ்சுட்டால்... என்னை அடைய வேண்டும் என்ற வெறி குறைஞ்சிடும்! நிறைய காதலும்... நிறைய காதலர்களும்... இப்படி வரம்பு மீறுவதால்தான்... நிறைய பேருடைய காதல் பொய்த்துப் போகிறது!"

"இந்த கணேஷ்... ஏமாற்றுக்காரனா?"

"கெஞ்சினாலும்... மிஞ்சினாலும்... என் பதில் 'நோ' தான்! காதலைச் சொன்ன முதல் நாளே சண்டை வேண்டாம்! பை கணேஷ்!" அர்ச்சனா எழுந்து ஓடினாள்.

மறுநாள் அன்பு கல்லூரிக்குள் நுழைய.. கணேஷ் காண்ட்டீனுக்கு அழைத்துப் போனான். அர்ச்சனா அருகில் கணேஷ் அமர... அந்தக் காட்சி நெருஞ்சியாய் நெருடியது. ஐஸ்கிரீமை நீட்டிச் சொன்னான்,

"நானும் அர்ச்சனாவும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பறோம், அன்பு! அதுக்குதான் இந்த ட்ரீட்!" என்று.

கணேஷ் பூவாய் மலர...

அர்ச்சனா நாணத்தில் சிவக்க...

அன்பு பூகம்பத்தில் சிக்கியது கணக்காய் தவித்தான்.

ஒரு கணம் துடிக்க மறந்த இதயம்... மீண்டும் சுருதி தப்பி... வேகமாய் துடிக்க...

அன்பு, காலடி நிலம் பிளந்து தூக்கி எறியப்பட்டது கணக்காய் உள்ளுக்குள் அலறினான்.... அழுதான்... கத்தினான்... கதறினான்!

## 6

நிலவுப் பெண்ணின் தாலாட்டைக் கேட்டு அநுபவிக்க... நட்சத்திரக் கூட்டங்கள் கண்சிமிட்டி... ரொம்ப நேரமாய் காத்திருக்க... காத்திருத்தலின் பலனாய்... காந்தப் பெண்ணாய்... நிலவு தேவதை கைவீசி நடந்து வந்து கொண்டிருந்தாள் - வானவீதியில்!

மொட்டை மாடியில் படுத்து நிலவு, நட்சத்திரம், கருமேகங்கள், வெண் மேகங்கள் என்று அணு அணுவாய் ரசிக்கும் அன்புவுக்கு... இன்று அது ரசிக்கவில்லை. பால் நிலவு பகலாய்க் காய... அந்த ஒளி அவனுக்கு தீயாய்



சுட்டது! காதல் தந்த வலி... கண்ணீராய் புறப்பட்டு... காதோர முடிகளை நனைத்தது.

இதுவரை - விபரம் தெரிந்து - தன் வாழ்நாளில் அழாத அன்பு... முதன் முதலாய் கரைந்து அழுகிறான்.

இதயம் முழுக்க வலி உயிரே போனது!

அவன் ஆசைகளும், கற்பனைகளும், கனவுகளும் போட்டி போட்டுக் கொண்டு... நெருப்பில் விழுந்த காகிதமாய் பொசுங்க... அவன் உயிர் துடித்தது.

கண்களால் தீண்டி சிலிர்க்க வைத்த அவன் தேவதை... இன்று அவன் இதயம் வலிக்கவலிக்க நிமிண்டிச் சென்றுவிட்டாள்.

மனம் சோர்ந்து, மடிந்து, விழுந்து, விசித்துவிசித்து அழுதது. இனிப்பில் கசப்பு சேர்ந்தாற்போல... அவன் சந்தோஷத்தில் துக்கம் கலந்து... தூண்டில் மீனாய் துடிக்க வைத்தது.

'அர்ச்சனா... நீயில்லாமல் எப்படி வாழ்வேன்? என் கனவுகள் அத்தனையும் கானல்நீராகிவிட்டதே! உனக்காக என் இதயத்தில் கட்டிய காதல் கோட்டையை இடித்து உருதெரியாமல் தரைமட்டமாக்கி விட்டாயே!'

'என் இதயத்தில் விழுந்த முதல் காதல் பனித்துளி... இப்படியா சட்டென்று காய்ந்து, கருகிப் போகவேண்டும்? என்ன வினை செய்தேன்? கடவுளே..! அர்ச்சனாவின் மேலுள்ள காதல் எனக்கு மறுக்கப்பட்டதேன்? அர்ச்சனா! நீ எனக்காகப் பிறக்கவில்லையா? கணேஷுக்காகப் பிறந்தவளா? இது தெரியாமல் உன்மேல் உயிரையே வைத்துவிட்டேனே!'

'அர்ச்சனா...'

'அர்ச்சனா...'

'என் கண்ணே... என் காதல் உனக்குத் தெரியவில்லையா? நானும் உன்னை நேசிப்பது... உன் கண்களுக்குத் தெரியாமல் போனதேன்? அப்படி என்ன கண்டுவிட்டாய், கணேஷிடம்?'

'கணேஷ்... என் பால்ய சிநேகிதன்! என் உயிர் நண்பன்! இந்தப் பிறவியில் என் நண்பனுக்காகவும்... உன் மகிழ்ச்சிக்காவும்... உன்னை அவனுக்கு விட்டுக் கொடுக்கிறேன்!'

'ஆனால், அடுத்த பிறவியில் நீ எனக்கு வேணுமடி கண்ணம்மா! அப்போ என்னால் விட்டுக் கொடுக்க முடியாது! நீ எனக்கே எனக்காய்.... எனக்கு மட்டுமே வேண்டும், செல்லம்மா!'

'உன்மேல் நான் உயிராய்... உணர்வாய்... உயிர்குலுங்க... என் நெஞ்சார உன்னை நேசிக்கவேண்டும், கண்ணே!'

'உன் கால்தடம் பதிந்த மண்ணில்... என் கால்தடமும் பதிய... மறுஜென்மமும் நான் மனிதனாய் பிறக்க வேண்டும், கண்மணி!'

'அப்போது நான் மட்டுமே உன்னை சந்தித்து உன் காதலை வரமாய் பெறவேண்டும்! உன் காதலும், நீயும் எனக்கு மட்டுமே கிடைக்க வேண்டும்!'

'உன் காதல் கிடைக்க... ஜென்மா ஜென்மத்துக்கும் காத்திருப்பதுகூட.... சுகம்தான் கண்ணே!'

'ஆனால், இப்பிறவியில் யாரிடமும் சொல்லாமல்... என் இதயத்துள் என் காதல் வாழும்! உன்னை ஒருதலையாய்க் காதலிக்க மட்டும் அனுமதி கொடு, கண்ணம்மா! இது தப்புத்தான்! உன்னிடம் யாசகமாய்த்தான் கேட்கிறேன்!'

'இப்பிறவியிலும்... எப்பிறவியிலும் என் காதலி... மனைவி எல்லாமே நீதான் பெண்ணே! இந்த உடம்பை வேறொருத்தி தொடாமல்... கறைபடியாமல் காத்து... உனக்காகத் தவமிருப்பேன், கண்ணம்மா! கற்பனையிலும்... ஆயிரம் கனவுகளோடும் வாழ்ந்து விடுவேன்! அர்ச்சனா... என் கண்ணே... என் உயிரின் உயிரே... இது ஒன்றிற்காய் மட்டும்... என்னை மன்னிக்க வேண்டுகிறேன், தாயே...!'

அன்பு உள்ளுக்குள் புலம்பினான்.

காதல் தந்த வலியால் நொந்து நூலாகிப்போனான். கல்லூரி போகவே பிடிக்கவில்லை.

எங்கே கணேஷ்மேல் சிறு இழையாய்கூட பொறாமை வந்துவிடுமோ என்று பயந்தான்.

வலிக்க வலிக்க அர்ச்சனாவின் நினைவுகள் அவனைத் தீண்டினாலும்... திரும்ப திரும்ப... ஏடு திருப்பி மனனம் செய்தான் - அவள் அவனுள் ஏற்படுத்திய நினைவுகளை!

'எத்தனை சொத்திருந்தும்... சுகமிருந்தும் அர்ச்சனாவின் ஒரு கடைக்கண் பார்வைக்கு இதெல்லாம் இணையாகுமா? ஐயோ அர்ச்சனா...! என்னை உயிரோடவே கொன்னுட்டியே! என் இதயம் பொசுங்கும் வாசம் உன் நாசியால் உணர முடியவில்லையா? என் நெஞ்சு சில்லுசில்லாய் உடையும் சப்தம் உனக்குக் கேட்கவில்லையா..? கண்ணம்மா... என் காதலியே...!'

முன்பு போல அர்ச்சனாவின் முகம் பார்த்து பேசமுடியவில்லை. தனிமையை, மௌனத்தை விரும்பிப் போர்த்திக் கொண்டான்.

ஆறாத ரணத்தை ஏற்படுத்திய அர்ச்சனா... கவிதையாய் காகிதத்தில் கால் முளைத்து நின்றாள்... நடந்தாள்... மலர்ந்தாள்.

ஒரு நாள் மாலை கல்லூரிவிட்டு அன்பு கிளம்ப... அர்ச்சனா அவனிடம் ஓடிவந்தாள்.



''நான் உங்ககிட்ட பேசணும்! ஒரு டென்மினிட்ஸ்... எனக்காக இருக்க முடியுமா?''

'காலமெல்லாம் உனக்காகத்தான் காத்திருக்கிறேன், அர்ச்சனா!'

பூங்காவில் அமர்ந்தனர்.

''அன்பு... சும்மா கணேஷ் தொல்லை பண்ணிட்டு இருக்கான். நாலுநாள் சும்மா இருக்கான். ஐந்தாவது நாள் வந்து 'ஒரு முத்தம் கொடேன்'னு நிற்கிறான். எனக்கு இதெல்லாம் பிடிக்காது என்று உங்களுக்குத் தெரியும்தானே?''

'உனக்கு எதெல்லாம் பிடிக்கும், பிடிக்காது என்று எனக்குத் தெரியும், அன்பே!'

''இன்று மதியம் பேசிட்டு இருந்தப்போ... அவன் உதட்டை என் கன்னத்துட்ட முத்தமிட கொண்டு வந்துட்டான். சடார்ன்னு சுதாரித்து... கன்னத்துல 'பளார்'ன்னு அறைஞ்சி திட்டி அனுப்பிட்டேன்! அப்போ போனவன்... இப்போ என்னைப் பார்த்து முறைச்சிட்டே போறான்! அவன் போக்கே எனக்குப் பிடிக்கலே!''

''அர்ச்சனா... கணேஷ் குறும்புக்காரன்தான்! ஆனால் குழந்தை மாதிரி! கோபிச்சிக்காதேம்மா!''

''அவனை நீங்கதான் மெச்சிக்கணும்! என்னை வச்சிட்டே போறவர பொண்ணுங்களைக் கிண்டல் பண்றான்! எனக்கு சுத்தமா புடிக்கலே! அவனைக் காதலிச்சதுக்குப் பதிலா... உங்களைக் காதலிச்சி இருக்கலாம்! உங்க எல்லா நல்ல குணங்களும் தெரிய வந்தாலும்... அவன் என்னைக் கவர்ந்துட்டான்!''

அன்பு கனத்த இதயத்துடன் சொன்னான்.

''காதல் வந்துட்ட பின்னாடி அவனா..? இவனா? என்று சாய்ஸ் பார்க்கக் கூடாதும்மா அர்ச்சனா..! நல்லவனை மேலும் நல்லவனாக்குவதைவிட... ஒரு கெட்டவனை நல்லவனாக்குவதுதான் பெஸ்ட், அர்ச்சனா! அவனைக் கொஞ்சம் மாத்த ட்ரை பண்ணு!''

''சும்மா ஒரு பேச்சுக்கு சொன்னேன், அன்பு! அவன் என் நெஞ்சுல ஏறி உட்கார்ந்துட்டதாலதான், அவன் அடுத்தவளோட பேசினாப்பிடிக்கலே! அவன் எனக்கு மட்டுமே சொந்தமா இருக்கணும்ன்னு நான் நினைக்கறது தப்பா? பொண்ணுங்களுக்கு மட்டும்தான் இந்த 'பொஸஸிவ்நஸ்' இருக்கா? அது கட்டாயம் அவனுக்கும் இருக்கும்! நான் வேறு ஆம்பளையோட சிரிச்சிப் பேசினால் சும்மா பார்த்துட்டு இருப்பானா?''

''நீ அவனுக்கு மடங்கலையா? சும்மா சீண்டிப் பார்க்க ஏதாவது அவன் முட்டாள்தனம் செய்யலாம்! நான் கண்டிக்கிறேன்! கண்ட கண்ட சினிமாக்களைப் பார்த்துட்டு... ஏதாவது கேட்டிருப்பான்! அடிப்படையில அவன் ரொம்ப நல்லவன்! நீயில்லாத ஒரு வாழ்க்கையை வாழமாட்டான்.

அர்ச்சனா! உங்க காதலுக்காக என்ன ஹெல்ப் வேண்டுமோ செய்வேன்! உன் சந்தோஷம் எனக்கு முக்கியம், அர்ச்சனா!'' சொல்லிவிட்டு எழுந்து போனவனைப் புரியாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் -

அவன் கண்ணை விட்டு மறையும் வரை.

## 7

அர்ச்சனா இளமஞ்சளில் கறுப்பு பூக்கள் போட்ட சுடிதாரில் தேவதை கணக்காய்... அன்புவும், கணேஷும் இருக்கும் இடம் வந்தாள்; அமர்ந்தாள்.

தலைக்குமேலே குல்மொஹர் மரம் பூத்துக் குலுங்கி... காற்று வீசும் போதெல்லாம்... தன் பூக்களின் இதழ்களால் அவர்களை அர்ச்சித்துக் கொண்டிருந்தது.

''அர்ச்சனா... பரீட்சை முடிந்து விடுமுறை விட்டதும் உன்னைப் பாராமல் எப்படி இருப்பேன்? தினம் தினம் நாம் சந்திக்கணும்! '' கணேஷ் கேட்க,

''நான் படிக்க வேண்டாமா? மாசம் ஒருநாள் மட்டும்தான் என்னை நீ பார்க்க அனுமதி தருவேன்!'' அர்ச்சனா சொன்னாள்.

''பெரிய கலெக்டர் படிப்பு! எனக்கு வர கோபத்துக்கு அறைஞ்சிடுவேன்!''

''என் கைமட்டும் பூப்பறிச்சிட்டு இருக்குமா? நீ ஒரு பக்கம் அறைந்தால்... நான், உன் கன்னம் பழுக்க ரெண்டு பக்கமும் அறைவேன்!''

''இந்தாடி என் கன்னம்! அறைஞ்சிக்கோடி!'' அவள் கைபற்றி கன்னத்தில் 'வைத்துக் கொள்ள...

''என்னைத் தொட.... ஏதாவது சாக்கு வச்சிட்டு நடிக்கறீயா? விடுடா என் கையை. திருடா... அன்பு முன்னாடி ஏன் அசிங்கப்படுத்தறே? உன்னை என்ன செய்தால் தகும்?ம்?'' என்றவள், கணேஷின் கன்னத்தில் வலிக்க வலிக்க கிள்ளினாள்.

''ஏய் ராட்சசி... எருமைமாடே.... இப்படியா மனுசன் உயிர்போறாப்பல கிள்ளுவே! இருடி...! நமக்கு கல்யாணமாகட்டும்! முதலிரவுல வச்சி... எங்கெல்லாம் கிள்றேன் பார்!'' என்று கண் சிமிட்ட...

அவன் அடிக்க... அவள் அடிக்க... அன்பு தலையை தாழ்த்திக் கொண்டான்.

''நான் 'ஃபேர்வெல்டே'ல்ல பாடப்போறேன் அன்பு!''

''உனக்குப் பாடவருமா அர்ச்சனா?'' அன்பு ஆசையாய் கேட்க -

''பாடவராது! கழுதை போல கத்த வரும்!'' கணேஷ் கிண்டலடிக்க...

''நான் முறையா பாட்டு கத்துக்கிட்டவள்! உனக்கு வேலையே



இல்லேன்னாலும்... நான் பாடி உன்னைக் காப்பாத்துவேனாக்கும்!''

''பொண்டாட்டியை சம்பாதிக்க விட்டு... உட்கார்ந்து திங்கறவன் நானில்லே! தில் உள்ள ஆம்பளைடி! உன்னை வீட்டிலேயே மகாராணிபோல உட்கார வச்சி சம்பாதித்துப் போடுவேன்!''

''நீ சும்மாயிரு கணேஷ்! அர்ச்சனா! எனக்காக ஒரு பாட்டுப்பாடேன்!'' அன்பு கேட்க...

''எனக்கும்....''

''முதல் சான்ஸ் அன்புவுக்குத்தான். என்ன பாட்டு பிடிக்கும்?''

'இதிலெல்லாம் முதல் சான்ஸ் கொடுத்த நீ... காதலில்... உன் வாழ்க்கையில் சான்ஸே கொடுக்கலையே, அர்ச்சனா!'

அன்பு கண்களில் வலியோடு நோக்கினான். பின் சொன்னான்.

''முத்துக்களோ கண்கள்.... ரொம்ப பிடிக்கும்!''

''பழங்காலம்! எத்தனை குத்துசாங்க் இருக்கு! அதைக் கேட்பதை விட்டுட்டு... உன் ரசனை..!'' கணேஷ் நக்கலடிக்க...

''முத்துக்களோ கண்கள்... தித்திப்பதோ கன்னம்

சந்தித்த வேளையில் சிந்திக்கவே இல்லை

தந்துவிட்டேன் என்னை...

படித்த பாடம் என்ன... உன் கண்கள் பார்க்கும் பார்வை என்ன...

..... ..... ..... ....

..... ..... ..... ....''

கண்மூடி ரசித்த அன்பு கை தட்டினான்.

''அர்ச்சனா நீயா? பெரிய பெரிய சிங்கர்ஸ்ஸையே உன் குரல் தோற்கடிச்சிடும்! என்ன நெளிவு! என்ன மென்மை! என்ன இனிமை! என்ன நளினம்! என் உயிரையே உலுக்கி உள்ளுக்குள்ள இறங்கிடிச்சி உன் குரல்! கிரேட் அர்ச்சனா! தப்பா எடுத்துக்காதே... இதை என் அன்பு கலந்த பரிசாய் நீ வாங்கிக்கணும்!'' அன்பு தன் சுண்டுவிரலில் கிடந்த மோதிரத்தை கழட்டி நீட்ட...

''உங்க பாராட்டு ஒன்றே போதும்! வானத்துல பறக்காறப்போல இருக்கு! வேணாங்க!'' மறுக்க...

''அன்பு முகம் வாடுதே அர்ச்சனா! வாங்கிக்கோ!'' கணேஷ் சொல்ல அந்த தங்க மோதிரத்தை வாங்கிக் கொண்டாள்.

''கல்யாணத்துக்குப் பின்னாடி தூக்கம் வராமல் நான் கஷ்டப்படத் தேவையில்லை. என்னை மடியிலே போட்டு... பாடி தூங்க வைத்துவிடுவாள். இல்லையா அன்பு? ஸாரி அர்ச்சனா!'' உண்மையாக மன்னிப்புக் கேட்டான்.

''சரி... உனக்கு என்ன பாட்டு பிடிக்கும்'' அவள் கேட்க...

''தீப்பிடிக்க... தீப்பிடிக்க முத்தம் கொடுடி! ரொம்பவே பிடிக்குமே!''

''உன் ரசனையும்... உன் முகரையும்... ச்சே..!''

''நீ பாடினால தங்கம் தார அளவு வசதியில்லை! அதைவிட உயர்வான பரிசு வச்சிருக்கேன். புரியாமல் அப்படி கண்ணை விரிக்கிறாயே! என் உதட்டால்... உன் பட்டு கன்னத்தில் நீ போதும் போதும் என்று சொல்லும் வரை....'' கணேஷ் புன்னகைக்க...

அர்ச்சனா அவனை அடித்தாள்.

''கடன்காரன்... திருந்தவே மாட்டான்!''

''சுத்தியிருக்கறவங்களை எந்த நேரமும் சிரிக்க வைத்து.. ஆயுளைக் கூட்டுபவன்... நிஜமாகவே ஹீரோ. அர்ச்சனா! இது எல்லோருக்கும் வாய்க்காத பெரிய வரம்! இத்தனை நல்லவனைக் காதலிக்க நீ கொடுத்து வச்சிருக்கணும்!'' அன்பு கூற...

''சதா நக்கலடிச்சுட்டு... துறுதுறுன்னு எதிலும் வேகம்.. வேகம்ன்னுட்டு... நீங்க உங்க டூவீலரை இவன்கிட்ட கொடுக்காதீங்க! நீங்களும் பின்னாடி உட்காராதீங்க! இவனும் செத்து... உங்களையும்... எனக்கு இவன் வேகம் பயமா இருக்குங்க. அன்பு!''

''ஏய் அர்ச்சனா... அப்படியெல்லாம் செத்துவைக்கமாட்டேன்டி! உன்னோட ஒரு அம்பது... அறுபது வருசத்துக்கு சந்தோஷமா இருந்து... உன்னை தொல்லை பண்ணிட்டுத்தான் சாவேன்! அர்ச்சனா கிழவி எப்படி இருப்பான்னு... நான் பார்க்க வேண்டாமா?'' பளீரென கணேஷ் புன்னகைக்க...

''இப்படி பேசிப்பேசித்தான்டா... உன் வலையிலே என்னை விழ வைத்தாய்! நீ இல்லாமல் எப்படித்தான்... ரெண்டு வருடப் படிப்பை முடிப்பேனோ?'' அர்ச்சனா அழ...

கணேஷ்மேலுள்ள அர்ச்சனாவின் காதலை எண்ணி சந்தோஷப்படுவதா, துக்கப்படுவதா எனத் தெரியாமல், அன்பு விழித்தான்!

## 8

அர்ச்சனாவின் மேல் கொண்ட ஆசை பொய்த்துப் போனதால்... டைரக்ஷன் படிப்பு படிக்க வேண்டும் என்ற ஆசையும் அவனிடம் அடியோடு போய்விட்டது.

விவசாயத்தில் புதுமையைப் புகுத்தி... திறமையுடன்... சாகுபடி அதிகமாய் செய்ய... வருமானம் பெருகியது. அவன் தாய் சாரதா, அக்கா ஜெயா, மாமா சிவா அனைவருமே மகிழ... கிராமத்து



பிள்ளைகளுக்கும்... மக்களுக்குமே பல நன்மைகளைச் செய்து கொண்டு வாழ்ந்தான். அந்த வாழ்க்கை அவனுக்கும் பிடித்துவிட்டது.

ஜெயாவுக்கும், இவனுக்கும் வயது வித்தியாசம் நிறைய! ஜெயாவுக்கு பதினேழு வயதில் லதா என்ற பெண்ணொருத்தி இருக்கிறாள். ஜெயாவுக்கு தம்பியையே மருமகனாக்கிக் கொள்ள விருப்பம்! சொத்துக்கு சொத்தும்... சொந்தத்துக்கு சொந்தமும் விட்டுப்போகாது. அவள் கணவன் யாருமில்லாதவன். அதனால் மாமியார் வீட்டிலேயே தங்கிவிட்டான்.

லதாவிடம் அறியாத வயதிலிருந்து சாரதா ''உன் புருஷன்! நல்லாப் பார்த்துக்கோ! மாமன் வந்த உடனே தண்ணி கொடுக்கணும்! சாப்பாடு போடணும்! குளிக்கப் போனால் வெந்நீர் விளாவி டவல், சோப்பு, பிரஸ் எல்லாம் எடுத்துக் கொடுக்கணும்! இல்லேன்னால் உன்னைக் கட்டிக்க மாட்டான்! புரியுதா?'' என்று கற்பித்து வைத்து இருந்தாள்.

அவன் அனைத்துதேவைகளையும் கவனிப்பவள், லதா!

லதா, பருவ வயதில் மலர்ந்ததும்... தென்னை ஓலையில் குடிசை கட்டிய மாமனைப் பார்க்க வெட்கம்... இப்போதெல்லாம் அவன் முகம் பார்க்க நாணுவாள்; நாணத்துடனே அவன் தேவைகளைப் பூர்த்தி செய்வாள்.

அவன் எங்கே வேலையாய் சென்றாலும்... சாப்பாடு எடுத்துச் செல்வாள். அவன் திட்டினாலும் காதில் வாங்கிக்கொள்ள மாட்டாள்.

அன்று....

''லதா... மாமா வந்தாச்சி! அங்க என்ன பண்றே? உன் புருஷன் களைச்சி தெரியறான்! மோர் கொண்டாடி!'' சாரதா குரல் கொடுக்க...

''ஏம்மா.... உனக்கு எத்தனை தரம் சொல்வது? சின்னபுள்ளைகிட்ட போயி புருஷன்.. கிருஷ்ன்னுட்டு! உனக்கு அறிவே இல்லையா?'' அன்பு கோபமாய்க் கேட்க...

''சொன்னா என்னலே தப்பு? நாளைக்கு அவளோட புருஷன் நீதானே?''

''இது போல பேசிட்டு திரியவேணாம்! உன் ஆசை ஒரு நாளும் பலிக்காது!'' சீறினான், அன்பு!

''உன் அப்பன் உயிரோட இருந்தப்பவே... பேசின பேச்சுதானே?''

''நீயும், உன் புருஷனும் முடிவு பண்ணினால் போதுமா?''

''அவர் இல்லேன்னுதானே... இந்தப் பெத்தவளை எடுத்தெறிஞ்சி பேசறே?''

''தாய்க்காரி... வெளியே போனமனுஷன் அலுத்து.. களைச்சி வந்தா... நீயும் என் சாகடிக்கிறே! தூக்கி வளர்த்தவளை யாராவது... கல்யாணம் செய்துக்குவானா? அறிவு கெட்டவளே... இனியும் அவள் மனசுல ஆசையை மூட்டாதே! அவள் என் தங்கை போல!''

''என்னலே... முறையை மாத்தறே?''

"படிக்காத ஜென்மம்! உனக்கு சொன்னாவே புரியாதா? உன் கனா ஒரு நாளும் பலிக்காது!" என்று சொன்னவன் கோபமாய் வெளியேற...

"எலே அன்பு...என்னலே சொல்லிட்டேன்! சாப்பிடாம போறீயே! அடியேய் சிறுக்கி... உள்ள என்னடி பண்றே?"

சாரதா கத்தினாள்.

"மாமா... மாமா..." லதா ஓடிவர... சட்டை செய்யாமல் போனான்.

மாமரத்து அடியில் கயிற்றுக் கட்டிலில் பட்டினியாய் கிடந்தான்.

'அர்ச்சனாவை நினைத்த மனதால்... வேறு எவளையும் நினையேன்!' - சொல்லிக் கொண்டான்.

"ஏய் சிறுக்கி.... இந்தப் பய படிக்கப்போன எடத்துல எவளையோ புடிச்சிட்டு இருக்கான்! அதான் இப்படி பேசறான். என் பேத்தியைத் தவிர.... வேறு ஒரு சிறுக்கியை மருமகளா ஏத்துக்குவேனா? எவளாவது 'அன்பு பொண்டட்டி நான்தான்'னு வாசப்படி ஏறினா... அவ வலது காலை அரிவாளாலே வெட்டிப் புடுவேன்! உன்னைத்தவிர... வேறொருத்தி கழுத்துல தாலிகட்ட விட்டுடுவேனா? அப்படி ஒரு நிலைமை வந்தா... இந்தப் பயலையும் பொலிபோட்டுடுவேன்! நீ ஏன்டி அழறே? வெள்ளிக்கிழமையில ஒப்பாரி வைக்காதே! போய் சாமிகிட்ட 'என் மாமனே புருஷனா வரணும்'னு வேண்டிக்கோ!"

இரவு வர... சாரதா புலம்ப வாயைத் திறக்க....

"பாட்டி... நீ எதுவும் புலம்பாதே! மாமன் சாப்பிடட்டும்!" லதா சொல்ல...

"எவ்வளவு அக்கறை! இவளைக் கட்டிக்க கசக்குதாலே? அடுத்த வருடம் கட்டி... குடித்தனம் போற வழியைப் பார்!" சாரதா அதிகாரமாய் கூற...

"கல்யாணமே நான் பண்ணிக்கப் போறதில்லே!"

"எலே... எலே... எதுனா கூறுகெட்ட தனமாப் பேசி.... என் குடியைக் கெடுத்துடாதலே! உனக்குப் பிறகு இந்த சொத்தை ஆள... ஒரு ராசா வேணாமா?"

"கல்யாணமே வேண்டாம்கிறேன்! புள்ளைக்குப் போயிட்டே!"

"லதாவுக்கு பதினேழு வயசாகுது! இனியும் தாமதிச்சா முத்திப் போயிடுவாலே! டவுனுல எதுனா புள்ளையை வச்சிட்டு இருக்கியாலே? நீ பாட்டுக்கும்... திடீர்ன்னு எதுனா புள்ளையை கையில புடிச்சிட்டு வந்துடாதலே! தாய்க்காரி உயிரு அப்பவே போயிடும்!"

"உன் ரோதனைதாங்காமல் ஒருநாள் திருட்டுத்தனமா ரயில் ஏறி... ஓடிடுவேன்! ஜாக்கிரதை!" மிரட்டிவிட்டு மொட்டைமாடியில் போய் வெறும் தரையில் மல்லாந்து படுத்தான்.

வானவெளியில் நிலவு பட்டொளி வீச... நிலவிலும்,



நட்சத்திரங்களிலும்... அர்ச்சனாவின் முகமே தெரிய... ஆசையாய் பார்த்துக் கொண்டிருந்தான்.

அர்ச்சனா வந்து அவன் முடிகோதி... முகம்வருடி... மார்பு தடவி...'அன்பு... அன்பு!' என்று அழைப்பது போல பிரமை ஏற்பட...தலையை உதறி திடுக்கிட்டான்.

'ச்சே... நான் மனிதன் தானா? என்ன கற்பனை இது? கற்பனையில்கூட அர்ச்சனா என்னைத் தொடலாமா? கணேஷின் உடைமை! நாளை அவனை மணக்கப் போகிறவள்! அவளைக் காதலிக்கிறேன் என்று... என் நெஞ்சில் அவள் நினைப்புகளை சுமப்பதே பாவம்! இதில் அர்ச்சனா வந்து கன்னம் வருடி... ஐயோ அர்ச்சனா..! எனக்கு ஏன் இப்படி மோசமான கற்பனை? என்னை இதற்காக மன்னிப்பாயா, கண்ணம்மா? இனி இப்படி தவறாய் என்றுமே நினைக்க மாட்டேன், பெண்ணே! ஸாரி... ஸாரிம்மா...!"

டவுனிற்கு சென்றால் என்றாவது கண்ணில் படுவாள். என்றாவது அதிசயமாய் ஃபோன் செய்வாள்.

கணேஷ், அதே கல்லூரியில் வேலைக்கு சேர்ந்து விட்டான்.

அவனை அடிக்கடி போய் சந்திப்பான். சமீபமாய்... அவன் தங்கை திருமணத்திற்கு சென்று வந்தான்.

கொலுசு செல்லமாய் சிணுங்க அருகில் வந்த லதா... யாசிக்கும் தோரணையில் சொன்னாள்.

"உடம்பு கெட்டுடும்! சாப்பிட்டு வந்துடுங்க! பாட்டி கிடக்கறாள்! அவள் பேச்சை பெரிசா எடுத்துட்டு.... சென்னை மட்டும் போக வேண்டாம் மாமா!"

"தாய்க்காரி தொல்லை மிஞ்சினால் போகத்தான் போறேன்!"

"என்னைப் புடிக்கலையா, மாமா?"

"புடிச்சிருக்கு!"

"அப்போ கட்டிக்கறதுதானே!"

"பொண்டாட்டியா... உன்னை புடிக்கலே லதா!"

"நான் படிக்காதவள் என்றா?"

"அதெல்லாம் இல்லே!

"மாமா.. உங்களை சின்ன வயசுல இருந்தே புருஷனா பார்க்கறேன்! மனசுல உங்கமேல நிறைய ஆசை! கட்டிட்டா சந்தோஷப்படுவேன்! நீங்க மறுத்துட்டால்... உசிரையெல்லாம் விடமாட்டேன்! ஒரு மூலையில கன்னியா - பொணம்போல வாழ்ந்துடுவேன்! அப்படி ஒரு நிலைமையை எனக்கு ஏற்படுத்திடாதீங்க, மாமா...!" அவள் வாயில் தாவணியைப் பொத்தி முதுகு குலுங்கச் சொல்ல...

அவளை அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தான்!

## 9

மகாலட்சுமி திருமண மண்டபத்தில் 'சொட்டு நீர் பாசனம்' பற்றிய ஒரு கருத்தரங்கு நடைபெற்றது.

''தண்ணீரை வீணாக வாய்க்காலில் பாய்ச்சி வெட்டியாக்குவதைவிட.... இந்தப் பாசன முறை, விவசாயத்திற்கு சிறந்தது. குறைந்த தண்ணீரைக் கொண்டு... கரும்பு சாகுபடியில் - ஏக்கருக்கு எண்பது, தொண்ணூறு டன் அறுவடை செய்யலாம்'' என்று அந்த கருத்தாளர் பேசியதில் உண்மை இருப்பதாய் அன்புவிற்கு பட்டது.

இரண்டரை மணிநேர பேச்சு முடிந்து வீட்டிற்குக் கிளம்ப... வழியில் அர்ச்சனாவைப் பார்த்து விட்டான்.

''ஹலோ அர்ச்சனா... நலமா?'' என்று கேட்க...

''அட அன்பு... நீங்களா? உங்களைப் பார்ப்பேன்னு நினைக்கவேயில்லை!'' ஆச்சரியப்பட்டாள்.

''மகாலட்சுமியில 'சொட்டு நீர் பாசனம்' பற்றிய கருத்தரங்கு. அது முடிஞ்சி கிளம்பறேன்!''

''ஞாயிறு அல்லவா... போர் அடிச்சுது! அதான் என் ஃப்ரண்டைப் பார்க்க கிளம்பிட்டு இருக்கேன். ஆமாம்... என்னை எப்போ உங்க வீட்டுக்கு கூட்டிட்டுப் போவீங்க?''

''உங்களுக்கு ஆட்சேபணை இல்லேன்னால்.... இப்பவே வாங்களேன்! போனதும் திரும்பிடலாம்!''

''சரி வரேன்!'' என்று அவன் பின்னாடி அமர, அவன் ஓட்டினான்.

'காலமெல்லாம் என்னருகில் கைகோர்த்து வருவாய் என்ற என் ஆசை, காற்று நிரப்பிய பலூனாய் உடைந்து விட்டதே! 'மை லேடி' என்ற என் நினைப்பில் மண் விழுந்துடிச்சே!'

''அம்மா பட்டிக்காடு! சரியான விபரம் போதாது! அதனால் அது எதுனா பேசினால் மனசில் வச்சிக்கக் கூடாது. அர்ச்சனா!'' அம்மா குணம் தெரிந்து அவளிடம் வேண்டினான்.

''சரிங்க...''

''வாங்க... உங்க வரவு நல்வரவாகட்டும்!''

''ஒருமையிலே கூப்பிடுங்க. அன்பு! என்னவோ போல இருக்கு! வாவ்..! வொண்டர்ஃபுல்! பியூட்டியா இருக்கு ஹவுஸ்! சூப்பர் அன்பு!'' அவன் வீடு கண்டு குதூகலித்தாள்.

சாரதாவிடம் ''அம்மா... இவங்க என் ஃப்ரண்ட்! காலேஜ்ல என் ஜூனியர்! பேர் அர்ச்சனா!'' என்று அறிமுகப்படுத்த... சாரதா குரோதமாய்ப் பார்க்க...



''உள்ள வாங்க! உட்காருங்க! லதா... என்ன பண்றே? வா... இவங்க அர்ச்சனா.... சாப்பிட ஏதும் கொண்டுவா! எங்க லதாகுட்டி நல்லா சமைப்பாங்க!'' என்று புகழ... லதா மானாய் துள்ளினாள்.

''தம்பி அன்பு...'' வெளியில் குரல் வர... ''ஸாரிங்க... அவரைப் பார்த்துட்டு வரேன்!'' என்று சிரித்துவிட்டுச் செல்ல...

'அட.... இத்தனை அழகாய் அன்புவால சிரிக்க முடியுமா? கன்னக்குழியும்... மோவாய் வெட்டும்தான் எத்தனை அருமை!' அர்ச்சனா அவனை புதுசாய் பார்ப்பதுபோல பார்க்க... அன்பு அவ்விடம் விட்டு அகன்று விட்டான்.

''யார் நீ? எந்த ஊரு?'' - சாரதா அருகில் வந்து கேட்க...

''சொந்த ஊர் விழுப்புரம்! அப்பா வேலை மாறுதலால கள்ளக்குறிச்சியில இருக்கோம்! அன்பு படிச்ச காலேஜ்ல படிக்கிறேம்மா!''

''இப்படி வயசுப் பையனோட வெளியே புறப்பட்டு வந்திருக்கீயே... உன் அப்பனும், ஆயியும் எதுவும் சொல்லமாட்டாங்களா?''

அர்ச்சனா மௌனமாய் இருந்தாள்.

''பிரண்ட்சுனா தொடுப்பா? எங்க அன்புவோட தொடுப்பாடி நீ? அந்தப் பயலை இத்தனை நாளும் நல்லவனாய் நினைச்சிருந்தேனே!''

''த்தூத்தேறி... ஏய் கிழவி... கம்முன்னு வாயை மூடிட்டு அந்தாண்ட போகமாட்டே?'' லதா கோபப்பட...

''இவளாண்ட கேட்டா உனக்கென்னடி? இங்கபாருடி பொண்ணே... கிராமத்து ஆளுங்க சரியானவனுங்க! எங்க அன்பு பையன் ஒரு குட்டியோட வந்திறங்கினா 'தொடுப்பு'ன்னு... நாக்குமேலே பல்லைப்போட்டு பேசுவானுங்க!''

''ஏய் கிழவி... நீ போ திண்ணைக்கு..!'' என்று சாரதாவைத் தள்ளிவிட்ட அதே வேகத்தில் அர்ச்சனாவின் கைபிடித்து தோட்டத்துக்கு அழைத்துப் போனாள் லதா.

''இந்தக் கிழவி பேசியதை மனசுல போட்டுக்காதீங்க! இது தொணதொணப்பு தாங்காமத்தான்... என் மாமன், வீடு தங்காமல் காடுமேடுன்னு சுத்திக்கிட்டு இருக்கு! என் மாமனைப் பேசியே சாவடிக்க... இந்தக் கிழவி ஒண்ணே போதும்!'' லதா அலுத்துக் கொள்ள...

'' 'தொடுப்பு'ன்னா... என்ன லதா? உன் பாட்டி ரெண்டுமுறை சொல்லிச்சி!'' - அர்ச்சனா கேட்க...

''அது அந்தக் காலத்து ஜென்மம்! ஏதோ தவறாப்பேசிடிச்சி!''

''பரவாயில்ல சொல்லு! கோபிச்சிக்கமாட்டேன்!''

''கஷ்டப்பட்டுக்குவீங்க! 'தொடுப்பு'ன்னா மாமனை 'வச்சிட்டு இருக்கீங்க'ன்னு அர்த்தம்! உங்க பாஷையில சொல்லணும்னால்...

மாமனுக்கும் உங்களுக்கும் காதல்ன்னு அர்த்தம்!''

''ஐயோ...'' அர்ச்சனா அலற...

''இதுக்குத்தான் சொல்ல மாட்டேன்னேன்! இது மாமாவுக்கு தெரிஞ்சா... பாட்டிட்ட சண்டைக்குப் போயிடுவார்!'' லதா பயந்தவாறு கூற...

''சொல்லமாட்டேன்! ப்ராமிஸ்!''

பறந்து திரிந்த புறாக்களையும்... லவ் பேர்ட்ஸ், கிளிகளையும் ரசிக்க - சுதந்திரமாய் சுற்றித்திரிந்த முயல் கூட்டத்தில் ஒன்று வந்து லதாவின் காலைக்கட்ட... அதை அப்படியே தூக்கி முத்தமிட்டாள்.

''இங்க இருக்க முயல்களுக்கு பேர் உண்டு. அர்ச்சனா, லதா, கணேஷ் இப்படி பேர் வச்சி செல்லமா கொஞ்சுவார், மாமா! இது பேர் அர்ச்சனாதான்!''

''ஓ....'' என்று குதுகலித்தாள். பின் ''கணேஷைத் தெரியுமா?''

''என்ன இப்படி கேட்கறீங்க? லீவுக்கெல்லாம் கணேஷ் மாமா இங்கே வருவார்! என் சமையலை ரசிச்சி சாப்பிடுவார்!''

''அதென்ன அவரையும் மாமா?''

''அண்ணான்னுதான் அழைச்சேன்! சிலசமயம் வாய்தவறி... என் மாமனையும் அண்ணான்னு கூப்பிட 'நீ குழப்பிக்க வேண்டாம்! ரெண்டு பேரையும் மாமான்னே கூப்பிடு'ன்னு சொல்ல... அப்படியே பழகிட்டேன்!''

''கணேஷை விரும்பறேன்! படிப்பு முடிஞ்சதும் கல்யாணம்! சொன்னாரா?''

''இல்லையே!''

''சின்ன பிள்ளைன்னு விட்டிருக்கலாம்! நீ?''

''என் மாமனை ரொம்ப பிடிக்கும்! ஆனால் அதுக்கு என்னை பொண்டாட்டியா பிடிக்கலையாம்!'' லதா முகம் வாடிச் சொல்ல...

''விடலாமா? 'உன் மனசுல வேற எதுனா பொண்ணிருக்கா?'ன்னு கேட்க வேண்டியதுதானே?''

''ஈஸியா சொல்றீங்க! மாமனைக் கண்டால் பயம்! அது முறைச்சி கோபப்பட்டா... நடுங்கிடுவேன்!''

''வேற்று மனிதரா? அவர்கிட்ட என்ன பயம்? நான் கேட்கட்டுமா?''

''கேட்டுப் பெறுவதோ... கெஞ்சிப் பெறுவதோ... காதல் இல்லீங்க! காதலும்... விருப்பமும்... ஆசையும் மனசுல தானா வரணும்! அப்படி ஒரு நல்லநாள் எனக்கும் வரும்ன்னு நம்பறேன்! 'நம்ம மாமனைத்தானே கட்டிக்கப் போற... நல்லா சமைக்கவும்... காட்டு வேலையும் கத்துட்டாப் போதும்! படிப்பு எதுக்கு'ன்னு எட்டாம் கிளாஸ்ஸோட என் தாய் நிறுத்திடிச்சி! ஒருவேளை உங்களைப்போல படிச்சிருந்தால்... என்னை என் மாமனுக்கு பிடிக்குமோ... என்னவோ...!'' கண்கள் கலங்கி லதா கூற...



''படிப்பென்ன... பெரிய படிப்பு! இப்படி வெள்ளைமனசோட.... அன்பா.... தேவதை கணக்கா இருக்கீயே... அது போதுமே! அன்பு வரட்டும்! சண்டைபிடிக்காமல் போகப் போறதில்லை!''

''வேணாங்க! மாமா கோபிக்கும்! அப்புறம் வருத்தப்படும்! அது கஷ்டப்பட்டா எனக்குத் தாங்காது!''

கிளியிடம் பேச... அதுவும் திருப்பி பேச... அர்ச்சனா அகமகிழ்ந்தாள்.

''எல்லாம் மாமாவோட ட்ரைனிங்க!''

அழகான குடிசை வீடு! அதைச் சுற்றி மல்லிகையையும், முல்லையையும் நட்டு மேலேற்றி விட்டிருந்தனர். பூக்கள் நிறைய மலர்ந்து... யாரும் பறிக்கப்படாமல்.... அது தன் வாசத்தை பரிசாக்கிக் கொண்டிருந்தது. குடிசையினுள் பொருள்கள் அழகாய் அடுக்கி வைக்கப்பட்டிருக்க... ஒரு புறம் கண்ணாடி பீரோவில் தமிழ், ஆங்கில இலக்கண, இலக்கியங்கள் வரிசையாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

அன்பு வந்தான்.

''குடிசை பிடிச்சிருக்கா அர்ச்சனா?''

''ரொம்ப ரொம்ப! அப்படியே உங்க பறவைகளும் - அர்ச்சனா, கணேஷ் முயல்களும்..!''

''வாயாடி சொல்லிட்டாளா? உங்க ரெண்டுபேரையும் மறக்க முடியாமத்தான்!''

காட்டின் விஸ்தாரம் கண்டு அதிசயத்திவளிடம்...

''எல்லா இடத்தையும் சுத்திப் பார்க்கணும்ன்னால்... ஒருநாள் கூட பத்தாது அர்ச்சனா! இப்போ நேரமாகுது. போகலாம்! பிறகு ஒருநாள் நீயும், கணேஷும் வாங்க. பார்க்கலாம்!''

''எனக்கு போகவே மனசு வர்லே! இங்கேயே தங்கிட்டா எவ்வளவு நல்லாயிருக்கும்ன்னு ஆசையா இருக்கு! அப்படியே தங்கிக்க அனுமதி கேட்டால்... அனுமதிப்பீங்களா, அன்பு?'' என்று சிரித்தாள்.

'என் இதயத்துல தங்கிக்கவே இடம் கொடுத்தபோது... சாதாரண வீட்டில் தங்க இடம்தரமாட்டேனா, அர்ச்சனா?' என்று அன்பு கண்களில் வலியோடு நோக்க...

அவன் பார்வையின் அர்த்தம் புரியாமல் பார்த்தாள், அர்ச்சனா!

## 10

அர்ச்சனாவின் படிப்பு முடிந்தது.

வீட்டில் மாப்பிள்ளை பார்த்தனர். இந்தச் செய்தியை கணேஷிடம் சொல்ல... ''என்ன அவசரம்? மேலே

படியேன்! பி.எட்., எம்.ஏ என்று! நானும் அதற்குள் அரசாங்க வேலை தேடிக் கொள்கிறேன்!''

''இப்போ சம்பாதிப்பதை வைத்துக் கொண்டே என்னால் குடித்தனம் நடத்த முடியும் கணேஷ்!''

''உன் அப்பா அனுமதித்தால் படி! முடியலேன்னால்.... உன்னைக் கட்டிக்க முயற்சி பண்றேன்!''

அப்பாவிடம் கெஞ்சினாள்.

''அப்பா..! பி.எட். எம்.ஏ ன்னு படிக்கணும்ப்பா! வெறும் பி.ஏ வை வச்சி வேலைக்குப்போய் சம்பாதிக்க முடியாது!''

''உன்னை வேலைக்கு அனுப்பி... அந்த சம்பாத்தியத்தில் சாப்பிடும்... பஞ்சப் பரதேசி... வக்கில்லாத பயலுக்கெல்லாம் உன்னைக்கொடுக்க மாட்டேன்! என் பொண்ணு பட்டதாரின்னு சொல்லிக்கவும்... நாளைக்கு உனக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கும் உன் படிப்பு பயன்பட்டால் போதும்! நீ இவ்வளவு படிச்சி கிழிச்சதே போதும்! சின்ன சேலத்துல இருந்து நல்ல மாப்பிள்ளை... நாளைக்கு வரார். கவர்மெண்ட் ஸ்கூல்ல பி.ஜி. கெமிஸ்ட்ரியாம்! நல்ல வசதி! லட்சணம்! அம்மா இல்லே! அப்பா மட்டும்தான். தங்கையைக் கட்டிக் கொடுத்தாச்சு. மரியாதையான குடும்பன்னு ஊர்ல அவங்களுக்கு நல்ல பேர்! அவரையும் பிடிக்கலேன்னு... குருடி மாதிரி குறை சொன்னே... நான் பொல்லாதவனாயிடுவேன்! என்னைப் பற்றி முழுசா தெரியுமில்லே - பெல்ட்டை உருவினா ரத்தம் பார்க்காமல் வைக்கமாட்டேன்னு! புத்தியா உடம்பைக் காப்பாத்திக்கோ! இல்லே காயம்பட்டே செத்துடுவே...''

ராகவன் மிரட்டிவிட்டுப் போனார்.

விடிய விடிய தலையணையை நனைத்தாள்

மறுநாள் வீடு பரபரப்பானது.

அம்மா நிறைய நெய்விட்டு மிக்ஸரும், ஸ்வீட்டும் செய்தாள்.

நன்கு நெருக்கமாய் கட்டிய மல்லிகை இவளைப் பார்த்து... வெள்ளையாய் புன்னகைத்தது! தீபாவளிக்கு சென்னை போய் போத்தீஸில் எடுத்த சாமுத்திரிகா பட்டு... இவளைப் பார்த்து கண் சிமிட்டியது! சரவணா ஜுவல்லரியின் ஆரமும், நெக்லஸும்... அவளை போட்டுக்கச் சொல்லி கெஞ்சியது! அழகிய ஸ்டிக்கர் பொட்டு... இவள் நெற்றியை அலங்கரிக்க தவமிருந்தது.

'கணேஷ்... அப்பாவிடம் நம் காதலைச் சொல்ல தைரியம் கொடுடா!'

'இதையெல்லாம் அலங்கரித்துக் கொண்டு கண்டவர்கள் முன் நிற்கும்போது... அவன் என்னை நோக்கும்போது கற்பே போயிட்டாப் போல அவமானமா இருக்கே! இந்த இக்கட்டுல இருந்து காப்பாத்தேன், கணேஷ்! அன்பு... அன்பு... இங்க ஒருத்தி கிடந்து தவிக்கிறேனே! நீங்களாவது



கண்ணபரமாத்மாவாக வந்து காக்கக் கூடாதா?''

''என்னடி நின்னுட்டே கனா காணறியா? அவங்க வர நேரம்! அலங்கரிக்கலையா?'' ராகவன் சத்தம் போட.....

''மேலே படிக்கறேம்பா...!''

''மேலே... கீழே படிச்ச வரைக்கும் போதும்! உனக்குப் பிறகு ஒரு தங்கை இருப்பது ஞாபகமில்லையா?''

'வேண்டாம்... எனக்கு மேரேஜ் வேண்டாம்...!' கத்த வேண்டுமென்ற வெறிவந்தது. ஆனால், அவர் இடுப்பு பெல்ட் பயமுறுத்தியது.

எல்லா ஒப்பனைகளும் முடிந்து கண்ணாடியில் பார்க்க... அவளை அவளாலேயே நம்பமுடியவில்லை.

பெரிய இடம் என்பதால் கூடுதல் அலங்காரமும் செய்யச் சொல்லி ஆர்டர்!

'கணேஷ்... நீ மட்டும் கண்குளிர பார்க்க வேண்டிய அழகை... கண்டவனெல்லாம் பார்த்து... ரசிக்க... அவன் முன்பு நிற்கப்போகிறேனே! என்னை மன்னிப்பாயா, கணேஷ்? நெஞ்சிலே உன்னைச் சுமந்து கொண்டு... கண்டவர்கள் முன்பு காட்சிப்பொருளாய் நிற்கவே பிடிக்கவில்லையே!'

'அம்மாவின் கண்களிலேயே விரியும் ஆயிரம் கற்பனைகள்...!'

'அப்பாவின் நெஞ்சிலே பூக்கும் கோடி கனவுகள்...!'

'எல்லாமே... எல்லாமே பொய்க்கப் போவது தெரியாமல் இப்படி பறந்து திரிகிறார்களே! நீ சரியான பயந்தாங்கொள்ளி கணேஷ்! என் அப்பாவின் முன் நின்று ஆம்பிளையாய் பெண் கேட்க தைரியமில்லாத நீயெல்லாம்... எதற்கு சட்டைக்காலரை கெத்தாய் தூக்கிவிட்டு... இல்லாத மீசையை முறுக்கிக் கொள்கிறாய்?'

''என்னடி ரெடியா? அவங்க வந்தாச்சி! மாப்பிள்ளை எவ்வளவு அழகு தெரியுமா?''

'என் கணேஷை விட.... இந்த உலகில் யாருமே அழகில்லை!' அர்ச்சனா மனம் சொன்னது.

''ஒரு நூறு முறையாவது இந்த அறை வாயிலைப் பார்த்திருப்பார் மாப்பிள்ளை! அவங்க அப்பாவும், தங்கையும் என் மருமகள்... என் அண்ணின்னு வார்த்தைக்கு வார்த்தை சொல்றாங்க! அவங்களுக்கு உன் போட்டோவைப் பார்த்தே சம்மதமாம்! நீயும் நல்லா பார்! கிறுக்கி மாதிரி புடிக்கலேன்னு எதுனா உளறி வைக்காதே! உன் அப்பாவைப்பற்றி தெரியுமில்லே!'' மல்லிகா சொன்னாள்.

அர்ச்சனா குனிந்த தலை நிமிராமல் காபியை நீட்டினாள்.

'' மருமகப் பொண்ணு மகாலட்சுமிபோல இருக்காளே! பொம்பளை

இல்லாமல் வீடு வெறிச்சோடி போயிருக்கு! சீக்கிரம் வா தாயீ! அம்மா தாயீ... என் புள்ளையை நல்லாப் பார்த்துக்கம்மா! பீடி, சிகரெட், தண்ணி, பொம்பளைன்னு எந்த ஒரு கெட்ட பழக்கமும் இல்லாதவன் எங்க கௌதம். சிறு வயசிலே தாய் இறந்துவிட... தாய் பாசத்துக்காக ஏங்குறான் பிள்ளை! நீதான் தாயா, தாரமா பார்த்துக்கணும், தாயீ!'' மாப்பிள்ளையின் அப்பா சொன்னார்.

கௌதமை ஏறிட்டாள். அவனோ கண்களில் ரசனையுடன் அவளை மென்மையாய் பார்த்துக் கொண்டிருந்தான்.

அழகாய்... கட்டான உடலோடு... ஆண்மையாய்... அம்சமாய்த்தான் இருந்தான். ஆனால் உள்ளே கணேஷ் இருக்க.. அந்த மாப்பிள்ளையை எப்படிப் பிடிக்கும்?

''எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு! அவங்களுக்கு பிடிச்சிருந்தா மற்ற ஏற்பாடெல்லாம் செய்யுங்க, அங்கிள்!''

அர்ச்சனாவின் தந்தை பூரித்துப் போனார்.

''எங்க அர்ச்சனாவுக்கும் இஷ்டம்! உங்களைக் கண்டு அவளும் மலர்ச்சியா இருக்காளே!''

'ஐயோ... புளுகாதீங்கப்பா! நான் சோகமா இருக்கேன்...' அர்ச்சனாவின் மனம் அலறியது.

''அர்ச்சனா மட்டும் போதும்! வரதட்சணை எல்லாம் கொடுத்து எங்களை அவமானப்படுத்திடாதீங்க, அங்கிள்''

கௌதம் 'அங்கிள்' என்றது வேறு - ராகவனுக்கும் மல்லிக்காவுக்கும் சந்தோஷம்!

''இலை போடறோம்! சாப்பிடுங்க எல்லோரும்!''

அர்ச்சனா திடுக்கிட்டாள்.

''வேண்டாம் அங்கிள்!'' கௌதம் மறுக்க...

''பொண்ணு பிடிச்சிருக்குன்னு சொல்லிட்டு... சாப்பாடு வேண்டாம்ன்னா என்ன அர்த்தம் மாப்பிள்ளை?''

'ஐயோ... மாப்பிள்ளையா?' அர்ச்சனா உள்ளுக்குள் கதறினாள்.

''சரிங்க அங்கிள்!'' என்றான் கௌதம்.

''இவ ரம்யா! சேலத்தில் படிக்கறாள். பி. எஸ்ஸி செகண்ட் இயர்!'' என்று அடுத்த பெண்ணை அறிமுகப்படுத்தினார்.

அர்ச்சனா வாய்விட்டு அழமுடியாமல்... உள்ளுக்குள் ஊமையாய் அழுதாள்.

கௌதம், அர்ச்சனாவைப் பார்த்து... புன்னகைத்து... சந்தோஷமாய் கையாட்டிச் சென்றான்.



## 11

இரவு கௌதம் பற்றியே பேச்சு இருக்க... இனியும் பேசாமல் இருந்தால்... கௌதம் தாலியே கட்டினாலும் கட்டிவிடுவான் என்று... பயத்தை விலக்கி... அப்பா முன் நின்றாள்.

''அப்பா... எனக்கு இப்போ கல்யாணம் வேண்டாம்! நான் இன்னும் படிக்கணும்!''

''உன் படிப்பாசையை மாப்பிள்ளைகிட்ட சொல்ல... காலேஜ்லேயே சேர்த்து படிக்க வைக்கிறேன்னு சொல்லியாச்சு! இதுக்குமேல் பேசினே... எனக்கு வரும் கோபத்துக்கு கண்டபடி அறைஞ்சிடுவேன்!'' அப்பா முகத்தை கடுமையாக்கிக் கத்த...

அர்ச்சனாவுக்கு கோபமும், ஆத்திரமும் வந்தது. அந்த ஆத்திரம்... தன் காதலைப் போட்டுடைக்க துணிவை தந்தது.

''அப்பா... நான் ஒருத்தரைக் காதலிக்கிறேன். அவர் பேர் கணேஷ்! அவரைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன். அவர் ரொம்ப நல்லவர்ப்பா!''

ராகவனுக்கு கண்மண் தெரியாமல் கோபம் வர...ஓடிவந்து அவளின் நீண்ட பின்னலைப் பிடித்து... ''என்ன சொன்னே?'' என அறைந்தார்.

''எனக்கென்ன பயம்? இதுக்கு மேலும் பயந்தால்... அந்த கௌதமுக்கு என்னைக் கட்டிவச்சிடுவீங்க! கணேஷை விரும்பறேன்! காலேஜ்ல ஒர்க் பண்றார். என்னை வச்சி காப்பாத்தற அளவு சம்பாதிக்கிறார்! வேறென்ன வேணும்?'' - அலட்சியமாய் கூற...

அப்பா இடுப்பு பெல்ட்டை உருவி விளாச...

''அடிச்சாலும், உதைச்சாலும் நான் கணேஷைத்தான் கட்டிப்பேன்! நெஞ்சுல ஒருத்தனை சுமந்துட்டு... படுக்கையில ஒருத்தனை என்னால சுமக்க முடியாது! கணேஷ்தான் எம் புருஷன்! அவரைத்தவிர வேறு ஒருத்தன் கையால தாலி வாங்கிக்க மாட்டேன்! கொல்லுங்க! என்னைக் கொன்னு போட்டுடுங்க! கணேஷுக்கு உதவாத உயிரும், உடலும் அழிஞ்சு போகட்டும்!'' அடிவாங்கி கதறினாள்.

ராகவன் ரௌத்திரம் மேலும் அதிகரிக்க, விளாசினார்.

அர்ச்சனா துள்ளினாள்! துடித்தாள்! கத்தினாள்! கதறினாள்!

ஓடிவந்து மறித்த மல்லிகாவையும் அடித்தார். ''என்னடி புள்ளையை வளர்த்தே? ஒரு புள்ளையை ஒழுங்கா வளர்க்க முடியாதவள் எல்லாம் எதுக்கு உயிரோடு இருக்கணும்?''

அர்ச்சனாவை விடுத்து - அவர் கோபம் மல்லிகாவின் மேல் பாய்ந்தது.

''தப்பு பண்ணியது நான்! என்னை விடுத்து அம்மாவை தண்டிப்பது

கோழைத்தனமில்லையா?'' என்று குறுக்கே புகுந்து, நெஞ்சை நிமிர்த்தி, பயம்போய் கேட்ட அர்ச்சனாவையே மீண்டும் குறி வைத்துத் தாக்க...

''ஐயோ கணேஷ்... கணேஷ்... அன்பு... அன்பு'' என்று அலற...

''இதுவரைக்கும் ஒருத்தனைச் சொல்லிட்டு இருந்தே! இப்போ ரெண்டு பேரா? நாய் ஜென்மமாடி நீ? அன்புவும் உன் காதலனா? என்ன இழவுடா இது? மானம்போகுதே...!''

''அன்பு என் உயிர் தோழன்... நல்ல நண்பன்! அவனோட என்னை இணைச்சி பேசினீங்க... நீங்க நல்லாவே இருக்க மாட்டீங்க!'' என்று அர்ச்சனா கத்த...

''இத்தனை நாள் பெத்து, வளர்த்தவனுக்கே சாபம் விடறீயா?''

''பெத்து வளர்த்துட்டா... எங்களுக்குன்னு ஒரு விருப்பம், ஆசை இருக்க வேணாமா? உங்களுக்குப் பிடிச்சிருந்தா... எங்களுக்குப் பிடிக்கலேன்னாலும் கழுத்தை நீட்டணுமா? எந்தக் காலத்துல இருக்கீங்க? வீட்டைவிட்டு வெளியேறி... கணேஷை கைப்பிடிக்கத் தெரியும்! திருட்டுத்தனமா... கோழையா.... உங்களை அவமானப்பட வச்சிட்டு ஓடக்கூடாதேன்னு பார்த்தால்... ரொம்பத்தான் துள்றீங்களே! கணேஷ் என்னை ஏத்துக்கலன்னாலும்... நான் படிச்ச படிப்புக்கு... சம்பாதித்து... என் கால்ல நிக்கமுடியும்! செய்யட்டுமா?''

''நீ படிச்ச படிப்பு... நான் போட்ட பிச்சை! உன் படிப்பு இல்லாமல் வாழ முடியுமா?''

''ஏன் முடியாது? கூலி வேலை செய்துகூட என்னால் வாழ முடியும்! என்னை கணேஷோட சேர்த்து வைக்க முடியுமா? முடியாதா?''

அர்ச்சனா பேசப்பேச ராகவன் அடங்கினார். அவர் அடங்க... இவள் எகிறினாள்.

''நீங்க சொல்ற மாப்பிள்ளைக்கு என்னால் கழுத்தை நீட்ட முடியாது! இந்த கழுத்துல தாலி கட்டவறன்... கணேஷ் ஒருத்தனாத்தான் இருக்கு முடியும்! வேற எந்தக் கொம்பனாலும்... என்னைத் தொட்டுத் தாலி கட்ட முடியாது! பார்க்கலாமா?'' சவால்விட -

''நீ அழிஞ்சி போவேடி! கட்டின உடனே தாலியைப் பிய்ச்சிப் போட்டுட்டு... தனி மரமா நிற்கப் போறே! என் வயித்தெரிச்சல் உன்னை நல்லா வாழவிடாது! பெத்தவனையே நெஞ்சை நிமிர்த்தி... கேள்வி கேட்கறீயா? இப்படிப்பட்டவள் இனி இங்கே இருக்கக்கூடாது! நான் நாளைக்கு வேலைக்குக் கிளம்பிப் போனதும் நீ வெளியேறணும் - கட்டின துணியோடத்தான்! - சர்ட்டிபிகேட், நகைன்னு எதுனா எடுத்துட்டுப்போனே... தேடி வந்து பொலிபோடுவேன்! நாளைக்கு சாயங்காலம்... என் பெரிய பெண் செத்துட்டான்னு தலைக்கு தண்ணி



ஊத்திட்டு... துக்கம் அநுசரிக்கணும்! உன் ஆத்தா எனக்கே முந்தானையை விரிச்சிப் பெத்திருந்தால்... நீ நாளைக்கு இங்க இருக்கக் கூடாது!'' ராகவன் ஆங்காரத்தில் கத்தினார்.

''ஐயோ! தவமா தவமிருந்து பெத்த பெண்! அவள்தான் சின்னப் பெண்ணென்றால்...'' இடைமறித்தார், மல்லிகா...

''எவடி சின்னப்பெண்? காதலிக்கத் தெரியும் - காதலிச்சவனோட படுத்து எந்திரிச்சாளோ... என்னவோ... இந்த அளவு பேசறா...''

''அப்பா...'' அர்ச்சனா கத்தி முறைக்க...

''என்னை அப்பான்னு கூப்பிடற உரிமை கொஞ்சநேரத்துக்கு முன்ன போயிடிச்சி! என்னைக் கொலைகாரனா ஆக்கிடாதே! என் பெண் ரம்யாவுக்கு உன் அளவு சாமர்த்தியம் போதாது! என் மனைவியையும், மகளையும் அநாதையா விட்டுட்டு ஜெயிலுக்குப் போக வசசிடாதே!''

அர்ச்சனா பேச்சிழந்து... சிலையாய் நின்றாள்.

## 12

மறுநாள் சோகமாய் விடிந்தது.

அப்பா வேலைக்கு செல்லும் வரை அறையிலேயே இருந்தாள். அவர் நேற்று அடித்த அடியில்... உடம்பெல்லாம் உயிர்போகும் அளவு வலித்தது. உடம்பு வேறு அனலாய் சுட்டது.

அம்மா கதவைத் தட்ட... வந்து அணைத்துக் கொண்டாள்.

''அம்மா...! அவர் நல்லவர்ம்மா! நான் போனால் உடனே ஏத்துக்குவார். நான் போகவா? உனக்கொண்ணும் என் மேல் கோபமில்லையே!'' அழுதாள்.

''உன் சந்தோஷம்... எனக்கு முக்கியம் அர்ச்சனாம்மா! அவனைக்கட்டி நீ நல்லா வாழணும்! இங்கேயே இருந்தால்... அப்பா உன்னை கௌதமுக்கே கட்டி வச்சிடலாம்! நீ போ கண்ணம்மா! அவனை எங்கே பார்க்கலாம்?''

''காலேஜ்லம்மா!''

''சரி. இதை வச்சிக்கோ!'' என்று கொஞ்சம் பணத்தை நீட்ட...

''வேணாம்மா... உன் அன்பும், ஆசீர்வாதமும் மட்டுமே போதும்! என்னைப் போல காதல்ன்னு தங்கை வழிதவறிப் போயிடப்போறாள். அவளைப் பார்த்துக்கங்க! நான் வரேன்!''

''இந்த மாத்திரையை போட்டுட்டுபோ அர்ச்சனா!'' அன்பாக அம்மா நீட்ட, வாங்கி முழுங்கினாள்.

அர்ச்சனா கணேஷைப் போய் பார்க்க... அவன் என்ன செய்வது என்று புரியாமல் அன்புக்கு ஃபோன் செய்ய, அரைமணியில் அன்பு ஓடிவந்து விட்டான்.

''அன்பு... அம்மா, அண்ணாகிட்ட இன்னும் என் காதலை சொல்லவே யில்லை! தங்கைக்கு இது ஒன்பதாவது மாதம்! நான் பக்குவமா சொல்லி அனுமதி வாங்கி வரும்வரை... அர்ச்சனாவை எங்கடா விடலாம்?'' கணேஷ் கேட்க...

''அதுவரை அர்ச்சனா என்வீட்டுல இருக்கட்டும், கணேஷ்! உங்களுக்காக நான் இதுகூட செய்யமாட்டேனா? என்ன அர்ச்சனா... என் வீட்டில் தங்க சம்மதமா? என்ன... அம்மா லொடலொடக்கும்! ஆனால் அக்கா, மாமா, லதா உன்னை நல்லாப் பார்த்துப்பாங்க! நீ எதையும் நினைத்துக் கவலைப்பட வேண்டாம்! கணேஷ் அவங்க வீட்டுல பேசட்டும்! ஒத்துக்கலன்னா நான் போய் பேசறேன்!''

அந்த நல்ல மனிதனை நன்றி பொங்கப் பார்த்து... கையெடுத்து கும்பிட்டாள்.

அன்புவோடு கிளம்பினாள்.

அன்பு முதலில் அவளை ஆஸ்பிட்டல் அழைத்துப்போய் காட்டி மருந்து, மாத்திரைகளை வாங்கினான். பின்னர் துணிக்கடைக்குப் போய் சேலை, ரெடிமேட் ப்ளவுஸ், இன்ஸ்கட்... இத்தியாதிகளை வாங்கினான். டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோர் போய் பொட்டு, வளையல், பவுடர், க்ரீம், செப்பல் என்று பார்த்து பார்த்து வாங்கிக் கொடுத்தான்.

''அன்பு... ஒண்ணு சொன்னால் தப்பா நினைக்கமாட்டீங்களே!'' அர்ச்சனா புதிர்போட... அன்பு புரியாமல் பார்க்க... அவள் சொன்னாள்.

''உங்களுக்கு வரப்போகும் மனைவி ரொம்பக் கொடுத்து வைத்தவள்! பேரதிர்ஷ்டசாலி! கட்டிக்க மாற்றுத் துணியில்லேன்னு நான் சொல்லாமலேயே... நீங்களா புரிஞ்சிட்டு... எனக்குத் தேவையானதை வாங்கித் தரீங்க! எனக்கே இப்படி பார்த்துப் பார்த்து செய்யும் போது... உங்க மனைவிக்கு எப்படி செய்வீங்க?''

இதயத்தின் மத்தியில் சிறியதாய் ஏற்பட்ட வலி... அலையலையாய் பெரிதாகியது, அன்புக்கு!

வாசலிலேயே சாரதா இன்முகத்துடன் வரவேற்றாள்.

''வாம்மா தாயீ... நீ வந்தப்ப... உன்னைப் புரிஞ்சிக்காமல் திட்டிட்டேன்! அதை மனசுல வச்சுக்காதே! லதா சொன்னாள், கணேஷைக் கட்டிக்கப்போற பொண்ணுன்னு! என்ன இது என் கால்ல எல்லாம் விழுந்துட்டு! எழுதாயி! அமோகமா... கணேசோட ரொம்ப நாள் வாழ்வே



கண்ணு!'' சாரதா அர்ச்சனாவைத் தூக்கி நிறுத்தினாள்.

அன்பு அனைத்தும் சொல்ல..

''பேஷா இரு தாயி!'' என்று சாரதா கூற... அர்ச்சனாவின் மனம் சமாதானமானது.

கணேஷின் வீட்டில் அம்மா, அண்ணன் நடராஜன் இருவரும் செய்தி கேட்டு... வானுக்கும், பூமிக்கும் குதித்தனர்.

தங்கை ராஜி, அவளுடைய கணவன் ஷியாம் இருவரும் கணேஷுக்கு ஆதரவாய் பேசினர்.

''ஊர், உலகத்துல நடக்காத தப்பை நம்ம அண்ணா செய்துடலே! ஆசைப்பட்ட பொண்ணைக் காதலிப்பதும், கல்யாணம் பண்ணிப்பதும் தப்பில்லே! அண்ணன் காசு வேணும்! அதுல பீரோ, ஃப்ரிட்ஜ், வாஷிங்மெஷின்னு வாங்கி சொகுசா அனுபவிக்கணும்! ஆனால் அண்ணன் பிரியப்பட்ட... ஆசைப்பட்ட பெண் வேணாம்னால், என்ன இது அநியாயம்? அண்ணா வீம்பா வெளியேறி.... அந்தப் பெண்ணைக் கட்டிட்டா... மீண்டும் பழைய நிலைக்கே வரணும்! தண்ணியா மோர் சாதமும்.. துளியோண்டு பருப்புப் போட்டு... காய் மிதக்காத சாம்பாரும் சாப்பிட வேண்டி வரும்! மாசத்துக்கு ஒரு புடவையா எடுத்து மினுக்கிடறேலே... அப்புறம் பழைய வாயில் புடவைக்கே வழியில்லாமல் போயிடும். பரவாயில்லையா?''

ராஜி விளக்க... அம்மா கொஞ்சம் இறங்கினாள்.

''வேற ஜாதியா, இருக்காளே!'' அண்ணன் சொல்ல..

''ஜாதி, சம்பிரதாயம், நாள், நட்சத்திரம், ஜாதகம் அத்தனையும் பார்த்து நடத்தி வச்ச கல்யாணம் உங்களது! ஆனால், உன் பொண்டாட்டி என்னத்த வாழ்ந்தா? நாலே மாசத்துல பொட்டுன்னு... உன்னை அநாதையாக்கிட்டு போயிடல? இதுல பத்துக்குப் பத்து பொருத்தமும் சரியா இருக்குன்னு பீத்தல் வேற...!'' ஷியாம் வேகமாய் பேச...

''சொந்தக்காரங்க...'' அம்மா இழுக்க...

அவங்கதான் சோறுபோடறாங்களா...?'' ராஜிசொல்ல...

''அர்ச்சனா தவிர... வேற யாரையும் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்!'' கணேஷ் கறாராய்ச் சொல்ல...

ஷியாம், ராஜி, கணேஷ் மாறி மாறி சொல்லிப் புரியவைக்க...

கடைசியாய் தலையாட்டினர்.

ஒரு சுபயோக சுபதினத்தில் ரிஜிஸ்டர் ஆபீஸில் கணேஷ்... அர்ச்சனாவின் கழுத்தில் மூன்று முடிச்சி பலமாய் போட்டான்.

அர்ச்சனா வேறு ஜாதி என்பதாலும், திடீர் திருமணம் என்பதாலும்

கணேஷ் வீட்டில் - யாரையுமே அழைக்காமல் - திருமணம் நடந்தது.

கணேஷ் அம்மாவிற்கு ஜாதிக்காரர்களிடம் அவமானமாய் போய்விடும் என்ற எண்ணத்தால்... சொந்தங்களை அழைக்கவில்லை.

அன்பு, அழும் மனதை... அர்ச்சனா - கணேஷ் சந்தோஷம் பார்த்து... அடக்கிக் கொண்டான்.

அவர்களின் திருமணம் நிறைவேறிய சந்தோஷத்தால்... அர்ச்சனா... ஒரு அழகான மோதிரத்தை அன்புவின் கையில் போட்டு ''பிடித்திருக்கிறதா?'' எனக் கேட்கவும்... மேலும் அன்புவின் துக்கம் அதிகமாகி... கண்களில் நீர் தளும்ப ''ம்...!'' என்று தலையாட்டி... கண்ணீரை மறைக்க வேறுபுறம் திரும்பிக் கொண்டான், அன்பு!

## 13

''கணேஷ்... இன்று முதலிரவை முடிச்சிட்டு... நாளைக்கு சேலம், ஏற்காடு, ஊட்டி, கொடைக்கானல்ன்னு ஒரு ரவுண்ட் தேன்நிலவுக்குப் போயிட்டுவா! அதுவரை காரும், டிரைவரும் இங்கேயே இருக்கட்டும்!'' என்று ஒரு டாடா சுமோவை விட்டுவிட்டுப் புறப்பட்ட அன்புவிடம் -

''தேன் நிலவு கொண்டாடற மனநிலை இல்லே அன்பு! அப்பாவைப் பகைச்சிட்டு... எனக்கு கவலையா இருக்கு!'' அர்ச்சனா மறுக்க...

''அதையே நினைச்சிட்டு இருக்க வேண்டாம். அடுத்ததா... தங்கை ராஜி பிரசவம் முடியும் வரையும் கார் இங்கேயே இருக்கட்டும்!'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

கணேஷுக்கு அர்ச்சனாவை தனியே சந்திக்கும் சந்தர்ப்பமே வாய்க்கவில்லை! கணேஷ் பாலைச் சுற்றிவரும் பூனையாய்... அர்ச்சனாவையே தூர இருந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

இரவு வந்தது. முதலிரவுக்கு ராஜி அவளை அலங்கரித்துக் கொண்டிருந்தாள்.

அர்ச்சனாவுக்கு முதலிரவு பற்றிய எந்தக் கனவுகளையும் ரசிக்கும் மனநிலை இல்லை. அம்மா, அப்பாவிடம் மாட்டிக் கொண்டு எப்படி தவிக்கிறாளோ... என்றே குழம்பியது.

நிறைமாத கர்ப்பிணியான ராஜி... வயிற்றில் ஒரு வலி வந்து... துடிக்க வைத்தாலும்... பல்லைக்கடித்துக் கொண்டு... அண்ணியை அலங்கரிப்பதையே கடமையாய்க் கொண்டாள்.

மாமியின் உறவுப் பெண் பால் சொம்பு நீட்ட.... அர்ச்சனா வாங்கிக்கொள்ள... நடராஜன் ஒருவித பொறாமையுடன், ஆசையுடன், காமத்துடன்... தம்பி பொண்டாட்டியை ஆடை உரித்துப் பார்க்க... அர்ச்சனா கூசிவிட்டாள்.



'பொண்டாட்டி இல்லாமல்... அத்தனை சுகங்களும் மறுக்கப்பட்ட மனிதன்... பாவம்!' என்று சமாதானமானாள்.

அர்ச்சனா அறைக்குள் வர... அவசர அவசரமாய் தாழ்போட்டான். ஆசையாய் அணைக்க வர... தள்ளிவிட்டாள். ''என்ன அவசரம்?''

''கொல்றீயேடி ராட்சசி! கல்யாணம், தாலின்னு பேசி... இதுவரை உன விரல் நகத்தைக்கூட தொட அனுமதிக்கலே! எல்லாம் முடிஞ்சியும்... மூர்க்கத்தனம் காட்டினால்... என்ன அர்த்தம்? ம்? இதுக்கு என்ன தண்டனை தரலாம்!'' என்று குறும்பாய் அவளை மேலிருந்து கீழாய் பார்த்தவன்... கண்ணில் பாலாய், பளிங்காய், சதை மடிந்து தெரிந்த இடுப்பைப் பிடித்துக் கிள்ளினான்.

''ஐயோ... என்ன கணேஷ்? வலி உயிர்போகுது!''

''ஒரு முத்தத்துக்குகூட வழி இல்லாம மறுத்து... என்னை எத்தனை சித்திரவதை செய்திருக்கிறாய்?''

அர்ச்சனாவைக் கட்டிலில் அமர வைத்து... அவள் கழுத்தில் தன் கைகளை மாலையாய் கோர்த்து... அவளை அருகே இழுத்து... ஆசையாய் முத்தமிடப் போனபோது... அவள் நாணத்தில் சிவந்து கண்களை மூடிக்கொள்ள.. அவள் ரோஜா இதழருகே... மெதுவாய் தன் உதட்டை கொண்டுபோக...

வெளியே கதவு தட்டப்பட்டது.

''கணேஷ்... டேய் கணேஷ்... சீக்கிரம் வாடா! ராஜி வலியில துடிக்கிறா...'' அம்மா கத்த-

''அண்ணா... அண்ணா...'' ராஜி வலியில் அலற...

''முதல்ல கதவைத் திறங்க... என்னன்னு பார்க்கலாம்!'' என அர்ச்சனா எழ... முத்தமிடாமலேயே... வருத்தத்தோடு கதவைத் திறந்தான், கணேஷ்!

ராஜி பிரசவ வலியில் துடித்தாள்.

''டிரைவர் வீட்டுக்குப் போயிட்டான்! எனக்கு கார் ஓட்டத் தெரியாது! என் பொண்டாட்டி துடிக்கறதைக் கண்கொண்டு பார்க்க முடியலை! கொஞ்சம் உதவு கணேஷ்!'' மாமா கெஞ்ச...

''வலி உயிர்போகுதே கணேஷ்ண்ணா!'' என்று ராஜி தவிக்க...

''காரை எடு கணேஷ்! நான் தேவையான பொருளை எடுத்துட்டு வரேன்!'' - அம்மா உள்ளே ஓடினாள்.

''ஸாரி... ஸாரி அண்ணி!'' ராஜி, அர்ச்சனா கைபிடித்து அழ...

''அசடே... உன்னைவிடவா எங்களுக்கு முதலிரவு முக்கியம்! நானும் கணேஷும் எங்கே போகப் போறோம்! நாளை இரவே வராதா... என்ன? குழந்தையைப் பெத்து, பிழைப்பது மறு ஜென்மம் போல! நல்லபடியா நீயும்,

குழந்தையுமா வாங்க! நானும் வரவா?''

''தாங்க்ஸ் அண்ணி! வேணாம்! நீங்க இப்படி கேட்டதே... மனசுக்கு சந்தோஷமா இருக்கு. வரேன்!''

கணேஷ், அர்ச்சனாவின் கைபற்றி.. பிரியமுடியாமல்.... பிரிந்து.... தவிப்புடன்... திரும்பித் திரும்பி பார்த்துச் சென்றான்.

அர்ச்சனாவுக்கும் ஏனென்றே தெரியாமல் கண்ணீர் வந்தது.

அவர்கள் ஆத்தூரை அடைய மணி பத்தரை! கொஞ்ச நேரத்தில் சுகப்பிரசவத்தில்... அழகான பெண்குழந்தை பிறந்தது.

''நார்மல் டெலிவரி! மருந்து, மாத்திரை வாங்கிகிட்டு - விருப்பப்பட்டா-கிளம்பறதானா கிளம்பலாம்'' என டாக்டர் சொல்ல... சில மணி நேரம் இருந்து விட்டுக் கிளம்பினர்.

ரோஜாக் குவியலாய் குழந்தை இருக்க... அம்மா அதை ஆசையாய் மடியில் வைத்துக் கொள்ள... ராஜி பின் சீட்டிலும், ஷியாம் முன்சீட்டிலும் அமர... கணேஷ் காரைக் கிளப்பினான்.

'அர்ச்சனாவைப் பார்க்கப் போகிறோம்! அவளைக் கொஞ்சப் போகிறோம்! மீதி இருக்கும் இரவைக் குதூகலத்துடன் கொண்டாடிவிட வேண்டும்!' என்று வெறி வர... காரை கணேஷ் வேகமாய் ஓட்டினான்.

''மெல்ல... மெல்ல கணேஷ்!'' அம்மா சொல்ல -

''மாப்பிள்ளைக்கு அவசரம்!'' என்று ஷியாம் சொல்ல... ஆமோதிப்பாய் புன்னகைத்தான்.

'இந்த நேரத்தில் எந்த வாகனம் வரப்போகிறது' என ஒரு மூலையில் வளைய.. எதிர்க்கே வந்த லாரிக்காரனும் இதே நினைப்பில் ஹாரனை உபயோகிக்காமல் வந்துவிட... விபரீதம் உணர்ந்து பிரேக் போடும் முன்பு காரும் லாரியும் மோதி... கார் அப்பளமாய் நொருங்கி ஷியாமும், ராஜியும் அதே இடத்தில் உயிரைவிட... கணேஷ் குத்துயிரும் குலையுயிருமாய்.... ரோந்து சுற்றிய போலீசாரால் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டான்.

அம்மாவுக்கும்,குழந்தைக்கும் எந்த சேதமும் இல்லை.

செய்திபோய் அன்பு, அர்ச்சனா, நடராஜன் என அனைவரும் அலறித் துடித்து வ்ர... ''ஸாரி... கடைசியா பேசணும்னால்.. பேசிக்குங்க!'' என்று டாக்டர் சொல்லி நகர...

''கணேஷ்... கணேஷ்'' உயிர் உறைய அர்ச்சனா கதற... ஆறுதல் சொல்ல முடியாமல் அன்பு தவிக்க... மெதுவாய் கண்திறந்த கணேஷ்... அர்ச்சனா, அன்புவைப் பார்த்துச் சொன்னான்.

''அர்ச்சனா... என் அர்ச்சனா... குழந்தை... குழந்தை... அன்பு... அன்பு...'' என்று முனக...

''உனக்கு ஒண்ணுமில்லே... மனசைத் தளரவிடாதேடா...!'' அன்பு கதற...



''அர்ச்சனா... அர்ச்சா.... அர்ச்..... அ.... அ...!'' என்று கூறிய கணேஷ்... அர்ச்சனாவைப் பார்த்தவிழி பார்த்தபடி... அன்புவின் கையை இறுக பற்றியபடி... அவனுடைய உயிர் போய்விட்டது.

எல்லாம் முடிந்தது!

அப்பாவின் எதிர்ப்பை சம்பாதித்து...

ஆசையாசையாய் தாலி வாங்கி...

இன்பமாய் வாழப்போகும் ஆசையெல்லாம்...

காற்றாய்... நெருப்பாய்... ஒரு கைப்பிடி சாம்பலாகிப் போனது!

உணவு உண்ணாமல், பசி, தூக்கம், தாகம், தன் உணர்வு... அத்தனையும் மறந்து ஜீவனற்றுப் போய்விட்டாள், அர்ச்சனா!

அர்ச்சனாவின் சந்தோஷம்... கடைசியில் ஒரு கைப்பிடி சாம்பலாகிப் போனதை எண்ணி... அன்பு செத்தே விட்டான்.

சாவுக்கு வந்த அனைவரும் அர்ச்சனாவையும், குழந்தையையும் அவர்கள் வந்த நேரத்தை - அவர்களின் துக்கிரிதனத்தை இழுத்து திட்டிவிட்டுச் செல்ல... எழுந்த சினத்தை அடக்கப் பெரும்பாடுபட்டான், அன்பு!

அப்பாவின் சாபமோ.. அவள் மேல் அன்பு கொண்ட அளவுக்கதிகமான காதலோ... அல்லது அர்ச்சனாவின் விதியோ... எதுவோ அர்ச்சனாவை கணேஷோடு வாழவிடாமல் செய்துவிட்டது.

காரியம் முடிந்து சொந்த பந்தங்கள் சென்றுவிட... அர்ச்சனாவும், குழந்தையும் அநாதையாய் விடப்பட்டனர். அவர்களுக்குப் பரிவு காட்ட அந்த வீட்டில் நடராஜனோ, கணேஷின் அம்மாவோ முன்வரவில்லை!

குழந்தை அழ... அர்ச்சனா அதனை எடுத்து அணைக்க... பாலுக்காய் அலைமோதி... மார்பில் முட்டியது. இறுக அணைத்து கத்தினாள். கதறினாள். குழந்தை அப்படியே ராஜி ஜாடையில் இருக்க... அந்தக் குழந்தைக்காய் தான் வாழவேண்டும் என்று முடிவெடுத்து... பராமரிக்க ஆரம்பித்தாள்.

இதனைக்கண்ட மாமி... அர்ச்சனாவையும், குழந்தையையும் சபித்து, வெடுக்வெடுக்கென்று பேச-

அங்கே வந்த அன்புவிடம் அனைத்தையும் கூறி அழ-

''அம்மா... கணேஷோட விதிமுடிஞ்சிடிச்சி! செத்துட்டான்! கணேஷ் போன துக்கத்துல அர்ச்சனா நொந்து போயிருக்க... இப்படி அவளையே குற்றம் சொல்லி... மேலும் வேதனைப்படுத்தலாமா?''

''என் பிள்ளை சாகக் காரணம்.... இவ கழுத்துல தாலி கட்டின நேரம் தான்!''

''இனி அப்படியெல்லாம் சொல்லாதீங்கம்மா!'' அன்பு வேகமாய் பேச...

"அவளைச் சொன்னா உனக்கு என் கோபம் வருது! இனி நீ இங்கே வராதே! அவள் என் பிள்ளையின் விதவை! அவளை நடராஜனுக்குக் கட்டி வைக்கப்போறேன்! அவளும் புருஷன் செத்தவள்! நடராஜனும் பொண்டாட்டி இல்லாதவன்! ரெண்டையும் இணைக்க நினைக்கிறேன்!"

"ஐயோ மாமி..." அர்ச்சனா அழ...

"இதுபோல பேசற வேலையை இனி ஒரு பொழுதும் பேசிடாதீங்க! பெரியவங்கன்னு மரியாதை கொடுத்தா... என்ன பேசறீங்க?" கோபமாய் அன்பு கத்த...

"இது என் வீட்டுப் பிரச்சனை! அதுல மூக்கை நுழைக்க நீ யாருடா?" நடராஜன் கை ஓங்கி வர... அந்தக் கையை பிடித்து முறுக்கிய அன்பு...

"அர்ச்சனா... என் நண்பனோட மனைவி! என் உயிர்த் தோழி! அவளுக்கு ஒரு தீங்குன்னால்... கைகட்டி பார்த்துட்டு இருக்க மாட்டேன்! அம்மாவுக்கு பேசத் தெரியாதே! எல்லாம் உன் ஐடியா தானா, நடராஜா?" அன்பு ஆக்ரோஷமாய் கத்த...

"ஆமாண்டா! என்ன செய்வே? ஒண்ணு... என்னைக் கட்டிக்கணும்! இல்லேன்னா மொட்டையடிச்சி... காவி கொடுத்து மூலையில உட்கார வச்சிடுவோம்!"

"அன்பு... என்னவெல்லாமோ சொல்றாங்களே! இந்தக் கொடுமைக்கார பாவிங்ககிட்ட இருந்து காப்பாத்துங்களேன்!" அர்ச்சனா கதறி அழ-

"என்னைக் கட்டிக்க... உனக்கு கசக்குதாடி? என்னைவிட... உனக்கு இனி நல்ல மாப்பிள்ளை கிடைப்பானா?" நடராஜன் எகத்தாளமாய்ச் சொல்ல... அர்ச்சனா மார்பில் அறைந்து கொண்டு அழுதாள்.

"டீன்னா... பல்லைப் பேத்துடுவேன், ராஸ்கல்!"

"உனக்கு ஏன்டா... அவ்வளவு கோபம்? காலேஜ்ல என் தம்பியோட... நீயும் பங்குபோட்டு... இவளோட சந்தோஷித்தாயா!"

நடராஜனை அன்பு கன்னம் பழுக்க அறைந்து... கீழேதள்ளி மிதித்தான்.

"கொலையே பண்ணிடுவேன்! அர்ச்சனாவை இனி ஒரு வார்த்தை தப்பா சொன்னே... நீ உயிரோடவே இருக்கமாட்டே!"

"ஐயோ... நடராஜா..." அந்த அம்மாள் பிள்ளையைத் தூக்க வர...

"அர்ச்சனா... இனி ஒரு நிமிடம் தாமதிக்கக் கூடாது. கிளம்பு நீ! உன் அப்பாகிட்ட பக்குவமா பேசி... உன்னை அங்கே விடறேன்! உன் எதிர்காலத்துக்கு நான் பொறுப்பு! நான் உயிரோடு இருக்கும்வரை... உனக்கு ஒரு தீங்கும் வரவிடமாட்டேன்! வா! புறப்படும்மா...!" என்று முடிவாய் சொல்ல...

"அன்பு... குழந்தை பாவம்! இதை இங்கேயே விட்டால் பாவிங்க கொன்னுடுவாங்க! ராஜி நல்ல பெண்! இவங்க குணம் தெரிந்தோ...



என்னவோ கணேஷும் குழந்தை... குழந்தைன்னார்! அவங்க ரெண்டுபேர் ஆத்மாவும் சாந்தி அடைய... குழந்தையை நான் வளர்க்கணும், அன்பு!" அர்ச்சனா அழுகையோடு சொல்ல...

அன்பு, தூங்கும் குழந்தையைத் தூக்கி அர்ச்சனாவின் கையில் கொடுத்தான்.

அதன் எதிர்காலம்... இனி இவர்கள் கையில்!

## 14

சூரியன்... தன் உக்கிர குணத்தைவிட்டு... அர்ச்சனாவுக்காக கவலைப்பட்டானோ... என்னவோ...! தன் வெப்பத்தைக் குறைத்து குளிர்ச்சியை தந்த இள மாலைப் பொழுது!

ராகவனுக்கு ஏற்கனவே அர்ச்சனாவின் செய்தி தெரியும்!

அர்ச்சனா அன்புவிடம் குழந்தையைக் கொடுத்துவிட்டு... அவர் காலில் அப்படியே சரணாகதியாய் விழ... வேகமாய் எட்டி உதைக்க... தூரப்போய் விழுந்தாள்.

"நாயே... என்ன திமிரிருந்தால்... இந்த வீட்டுப்படி ஏறுவே? புருஷன் செத்தவளை எல்லாம் வீட்டுக்குள்ளே விட... இது ஒண்ணும் விதவைகள் மறுவாழ்வு இல்லமில்லே! எப்போ என் எதிர்க்க... நெஞ்சை நிமிர்த்தி பேசிட்டுப் போனாயோ... அன்னைக்கே நீ செத்துட்டே! செத்த பிணத்தை வச்சிக்க... இது ஒண்ணும் சுடுகாடு இல்லே! மரியாதையா போயிடு! இந்த வீட்டுல நல்ல காரியம் நடக்கப்போகுது! என் மானத்தைக் காக்க ரெண்டாவது பெண், கௌதமைக் கட்டிக்க சம்மதிச்சுட்டா! இப்படி ஒரு நல்ல வேளையில அமங்கலியான நீ.... தாலியறுத்த நீ... புருஷனை வாரிக் கொடுத்த நீ... ராசியேயில்லாத நீ... இங்கே இருக்கலாமா? உன்மேல் துளிகூட இரக்கம் வர்லே! இதுல புள்ளையை வேற தூக்கிட்டு வந்துட்டாள்!"

ராகவன் நெருப்புத் துண்டுகளாய் வார்த்தையை வீச... அர்ச்சனா பொசுங்கிவிட்டாள்.

"பாவங்க... என் பெண்!" என்று வந்த மல்லிகாவை விளாசினார். தடுக்க வந்த அன்புவை...

"என் பெண்டாட்டியை அடிப்பேன்! கொல்லுவேன்! யார்டா நீ? என் முதல் எதிரியே நீதான்...!"

"கொஞ்சம் மரியாதையா பேசுங்க! அங்க நடராஜனுக்கு அர்ச்சனாவைக் கட்டி வைக்க சதி நடக்குது! இப்படியொரு நிலைமையில நீங்களும் கைவிட்டால்... அர்ச்சனா எங்கே போவாங்க? கொஞ்சம தயவு பண்ணுங்க சார்!"

"நீ எதுக்கு இருக்க? ஆபத்பாந்தவனா காப்பாத்தேன்!" நக்கலாய் கேட்க-

''அது முறையா சார்?''

''ஜாதி மாறி மேரேஜ் பண்ணிவச்சியே... அது முறையா? போடா... போடி அவனோட...! கொஞ்சநேரம் நின்னால் கழுத்தைப் பிடிச்சி தள்ளவும் தயங்கமாட்டேன்!''

''ஈவு, இரக்கமே இல்லாத மனுசன்! இவர்கிட்ட கெஞ்சி நிற்பதே நமக்கு அசிங்கம்! வா போகலாம்!'' என அவள் கைபிடித்து வெளியேற...

''இந்த நாய் மட்டும்ன்னா கூட கொஞ்சம் யோசிக்கலாம்! இதுல ஒரு குட்டியை வேற இழுத்துட்டு வந்துட்டாள்!'' அப்பாவின் குரல் உள்ளிருந்து கசிந்தது.

''எங்கே அன்பு?''

''என் வீட்டுக்கு!''

''அங்க மட்டும் எதிர்ப்பு வராதா?'' கவலையாய் கேட்க...

''எத்தனை எதிர்ப்பு வந்தாலும் உன்னையும், ராஜியோட பிள்ளை யையும்... அநாதையா தெருவுல விடமாட்டேன்!'' அழுத்தமாய் அன்பு கூற...

''உங்களுக்கு தலையெழுத்தா? இப்படி எனக்காக ஒவ்வொருத்தர்கிட்டேயும் அவமானப்படறீங்களே!''

அன்புக்கு உயிரே போய்விட்டது. சொன்னான்.

''அர்ச்சனா! உனக்காக... உனக்காக... எத்தனை எதிர்ப்புகளையும், அவமானத்தையும் தாங்குவேன்! நீ இப்படி பேசறதுதான் கஷ்டமா இருக்கு'' எனச் சொல்ல... பேசாமல் காரில் ஏறினாள்.

''இப்படிப்பட்ட நல்லவரை தோழனா அடைய முற்பிறவியில கொஞ்சம் புண்ணியமும் பண்ணியிருக்கேன் போல!'' கண்ணீர் விட்டாள்.

**சா**ரதா பத்ரகாளியானாள்.

''ஏன்டி... என் பையன்தான் கிடைச்சானா? உனக்கு வேற எவனும் கிடைக்கலே? புருஷன் செத்ததும்... நீ கூப்பிட - பொசுக்குன்னு வராள்ன்னா... அவ எப்படிப்பட்ட பொண்ணு? இதுல ஏதோ உள்ளர்த்தம் இருக்கு!''

''ஐயோ தாய்க்காரி... உன்கிட்ட பெரும் ரோதனையா இருக்கே! அக்கா நீயாவது சொல்! அர்ச்சனாவா வர்லே! ரெண்டு குடும்பமும் கைவிட... நான்தான் அழைச்சிட்டு வந்தேன். இவளுக்கு என்னை விட்டால் உதவ யாருமே இல்லை. அதுவுமில்லாம அர்ச்சனாவை அநாதையா விடமாட்டேன்!''

''அதுதான்... ஏன்னு கேட்டேன்?'' சாரதா நீட்டி முழக்க...

''இங்கபார் என் தாயக்காரி... அர்ச்சனாவையும் இங்கே வாழவிட்டால்...



நானும் இங்கே இருப்பேன்! இல்லேன்னால் வெளியே போறேன்!''

''உன் ஒருத்தனுக்கு மட்டும்தான்... இந்த வீட்டுல இடமுண்டு! எவன் பொண்டாட்டிக்கும்... எவன் புள்ளைக்கும் இடமில்லே! போவதானா போய்த் தொலை!'' சாரதா கத்த-

ஜெயா, சிவா, லதா குறுக்கே வர-

''நீங்க உங்க வேலையைப் பாருங்கடி! எனக்கும்... என் வவுத்துல பொறந்ததுக்கும்தான் பேச்சே! நடுவுல நீங்களெல்லாம் யாரு?'' கிழவி சத்தமிட... அவர்கள் அடங்கிப் போனார்கள்.

''இந்த சிறுக்கி... அவ்வளவு முக்கியமாயிட்டாளா? போடா... நீ எப்படி வாழறேன்னு பார்க்கிறேன்? உன் வீம்பு... கும்பி காய்ஞ்சா வருவே! என் கால்ல விழுவே! ராசா போல இருந்த பிள்ளையை எதைக்காட்டி மயக்கினாளோ! எப்படிடி என் பிள்ளையை முந்தானையில முடிஞ்ச..? நீயெல்லாம் ஒரு பெண்ணா?'' அர்ச்சனாவைப் பார்த்து கத்தினாள்.

''வாய்ல வந்தபடி பேசாதே... எனக்குக் கோபம் வந்தால்...''

''என்னடா செய்வே?''

''அன்பு... என்னால் உங்க வீட்டுல பிரச்சனை வேணாம்! வாழமுடிஞ்சால் வாழறேன்! இல்லேன்னால் ஏரிலயோ... குளத்திலயோ விழுந்து செத்துடறேன், பிள்ளையோட!'' என்று அர்ச்சனா நடக்க...

''அர்ச்சனா நில்! எங்கே போற? நீ செத்து நான்மட்டும் உயிரோட இருப்பேனா?'' அன்பு கூற... அர்ச்சனா புரியாமல் பார்த்தாள். அவள் கையைப் பிடித்துக் கொண்டான்.

''லதா... பீரோ திறந்து நான் படிச்ச சர்ட்டிபிகேட் மட்டும் எடுத்து வா! அம்மா! அதை மட்டும் பிச்சையாக் கொடு!'' அம்மாவிடம் கையெடுத்து கும்பிட... வெடுக்கென திரும்பிக் கொண்டாள்.

லதா ஃபைலை நீட்டி ''போகாதீங்க மாமா...!'' என அழ...

''அம்மாவுக்கு நீங்களெல்லாம் இருக்கீங்க! ஆனால் அர்ச்சனாவுக்கு யாருமே இல்லேக்கா! அம்மாவை பார்த்துக்கங்க! நான் வரேன்!''

பிள்ளை மனம் கல்லாய் அன்பு செல்ல... அம்மா விழுந்து புரண்டு அழுதாள்.

கிராமத்திற்கு வரும் கடைசி பஸ்ஸில் ஏறினர்.

''அன்பு... எனக்காக உங்க குடும்பத்தை பகைச்சிட்டு வர்றீங்களே..! இத்தனை பேர் சாபத்தில்... நாம் வாழ முடியுமா?''

''அழாதே அர்ச்சனா! ஏன் வாழாமல்? நம்பிக்கைதானே மனித வாழ்வின் அச்சாணி! உன்னையும், குழந்தையையும் கண்கலங்காமல் காப்பேன்!''

''எத்தனை நாளைக்கு? நாளைக்கு உங்களுக்குன்னு மனைவி வந்த

பின்னால்...''

''நான் கல்யாணமே பண்ணிக்கப் போறதில்லே! நீ என்ன வாரீட்டே!''

''அது என் விதி!''

''ஆனால்... எனக்கு கல்யாணம் பிடிக்கலே, அர்ச்சனா!''

''அப்படி சொல்லக்கூடாதுங்க! உங்களுக்குன்னு ஒரு மனைவி.. பேர் சொல்ல அழகான பிள்ளைன்னு வேணும்!'' என்று அழுத்தமாய் சொல்ல...

''என் கல்யாணம் இப்போ பிரச்சனையா? எங்கே போறது, என்ன செய்யறதுன்னு யோசிக்காமல்..!''

''எனக்கு எதிர்காலம் இருட்டா மிரட்டுது, அன்பு!''

''இங்கே என்னைப்பற்றி எல்லோருக்கும் தெரியும்! கைகட்டி வேலை செய்தா அசிங்கம்! கண்காணாமல் தூர போயிடலாம்! சென்னை போகலாமா? சினிமாமேல உள்ள ஆசை... நீருபூத்த நெருப்பா... என் மனசுல இருக்கு! தூரப்போய் எந்த வேலை செய்தாலும்... பங்கமில்லே! அப்படியே அந்த சொற்ப வருமானத்துல நாமும் வாழலாம், அர்ச்சனா! எதுனா டைரக்டர்கிட்ட எடுபிடியா சேரட்டுமா?'' அர்ச்சனாவிடம் விருப்பமாய் கேட்க....

''உங்களுக்கு பிடிச்சதை செய்யுங்க!'' என்றாள்

''இவளுக்கு என்ன பேர் வைக்கலாம்?''

''கௌசல்யா..?''

''நல்லாயிருக்கு!'' என்றவன் குழந்தையை முத்தமிட்டான். கள்ளக்குறிச்சியில் இறங்கி உணவு உண்டுவிட்டு... வெதுவெதுப்பான பாலை குழந்தைக்கு வாங்கிக் கொண்டு... சென்னை செல்லும் பேருந்தில் ஏறி அமர...

'அன்பு இருக்கிறான்! எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் அநாதையாய் விட மாட்டான்!' என்று நினைத்தவளுக்கு... உறக்கம் நீலாம்பரி ராகம்பாட.. அப்படியே தளர்ந்து... தூங்கிப்போனாள் அர்ச்சனா.

கைக்குழந்தையை வைத்துக்கொண்டு - எதிர்காலம் மிரட்ட... கலங்கி... கொட்டகொட்ட விழித்திருந்தான் அன்பு.

15

**வி**டியலை.. சென்னை நகரம் அழகாய், பரபரப்பாய், சுறுசுறுப்பாய் வரவேற்க ஆயத்தமாகிவிட்டது.

ஒட்டலில் அறை எடுத்து.. அர்ச்சனாவையும், குழந்தையையும் விட்டுவிட்டு வெளியே போனவன்... ஒரு பெரிய தொகையோடு வந்தான்.



அவன் கழுத்து, கைகளிலெல்லாம் வெறுமை. அவன் அணிந்திருந்த நகையைத்தான் விற்று விட்டான்.

மூவருக்கும் நாலைந்து செட் உடையும் வாங்கிவந்தான். அர்ச்சனா ஊமையாய் உள்ளுக்குள் அழுதாள்.

அவன் குளித்துவிட்டு வெளியேறினான். 'வீடு வாடகைக்கு விடப்படும்!' என்ற போர்டு பார்த்து போய் கேட்க...

''உங்களுக்கு கல்யாணமாயிடிச்சா?''

''இல்லே!''

''கல்யாணமாகாத இளைஞர்களுக்கெல்லாம் வீடுவிடறதா இல்லை!''

அன்பு சுருங்க சொல்ல...

''என்னது? நீங்க, பிரண்டோட மனைவி, குழந்தையா? இந்தமாதிரி வரன்முறை இல்லாத உறவு... கூடி வாழ.... வீடு விடமாட்டோம்!''

ஒவ்வொரு இடத்திலும்...

**''வயசுப் பெண் உள்ள இடம்! உங்களைப் பார்த்து எங்க குடும்பமும் கெட்டுடும்!''**

**''ப்ரண்ட் செத்தால் தாய்வீடு போகணும்! இல்லே படிச்ச பெண்தானே? எதுனா வேலை செய்து பிழைப்பதை விட்டு உன்னோட ஓடி வந்தா என்ன அர்த்தம்? போ... போ...!''**

**''உங்களுக்குள்ள ஒண்ணுமில்லாமலா... அவங்க சொந்தங்கள் விரட்டியடிச்சிருப்பாங்க?''**

**''நிஜமாவே அந்தப் பொண்ணுக்கு புருஷன் செத்துட்டானா? இல்லே... உங்களுக்குள்ளே கசமுசா ஏற்பட்டு ஓடிவந்துட்டீங்களா?''**

நாள் முழுக்க... இந்த இழிசொற்களைக் கேட்டுக்கொண்டு... கோபத்தை அடக்கிக் கொண்டு சுற்றியதுதான் மிச்சம்.

மறுநாள் மறுக்க மறுக்க அர்ச்சனா அவனோடு வர... ''அர்ச்சனா... கணேஷ் கட்டிய தாலியை அவுத்துட்டே! அது ஊர், உலக வழக்கு! ஆனால் உன்னோடு பிறந்த பொட்டையும் பூவையும் துறப்பது நியாயமா? உன்னை இப்படி பார்க்க எனக்கு பகீர்ன்னு இருக்கு! பூ கூட வேணாம்! பொட்டு வச்சிக்கோ அர்ச்சனா!'' என்று சொல்ல கடையில் சின்ன ஸ்டிக்கர் வாங்கி ஒட்டிக் கொண்டாள்.

கணேஷ் இறந்ததிலிருந்து தூக்கிப் போட்ட கொண்டையும், இழுத்துப் போர்த்திய சேலையுமாய் அர்ச்சனா இருக்க... அதுவே கூட அவளுக்கு கூடுதல் அழகையும், கம்பீரத்தையும் கொடுத்தது.

நேற்றைய போலவே சொல்லடிபட்டு அர்ச்சனா துடித்துவிட்டாள்.

அன்னை காளிகாம்பாள் கோவில் தெரிய... உள்ளே போய்.... ஒரு மூச்சு அழுதாள். கவிழ்ந்து அழுத அர்ச்சனாவைத் தேற்றத் தெரியாமல்... அன்புவும் கலங்கினான்.

''ஏன் அன்பு.. நெருப்புன்னால் வாய் சுடுமா?''

''நேரம் காலம் தெரியாமல்... குழப்பறே அர்ச்சனா!''

''ஒரு பொய்யால் நன்மை பயக்குமெனில், பொய் கூட அப்போது சொல்லலாம்'ன்னு வள்ளுவர் 'பொய்மையும் வாய்மையிடத்து...'ன்ற குறள்ல சொல்லி இருக்கார். உண்மையை சொன்னால் முகம் சுளிக்காமல் வீடு தரமாட்டாங்க போலத் தெரியுது! அதனால 'ரெண்டுபேரும் புருஷன் - பொண்டாட்டியா'ன்னு கேட்டால் 'ஆமா'ன்னோ 'இல்லே'ன்னோ சொல்லாமல் நின்னுட்டா என்ன? இந்த உலகம்ங்கிற நாடக மேடையில புருஷன் - பொண்டாட்டியா நடிக்க வேண்டிய கட்டாயம் வரும்போது... நாமும் கொஞ்சநாள்... நீங்க முன்னேறும் வரை நடிச்சுட்டா என்ன?''

அன்புவுக்கு அதிர்ச்சி!

''உங்களுக்கு அதிர்ச்சியா இருக்கலாம்! ஆனாலும் ப்ரக்ட்டிக்கலா திங்க் பண்ணினால் உண்மை புரியும்! மனுசங்க மனசுல அன்பு, பாசம், பரிதாபம், பச்சாதாபம் எல்லாம் வத்திட்டே வருது! மனுசங்க மனசுல கள்ளமும், கபடமும் ஆக்கிரமிக்க ஆரம்பிச்சிடிச்சி! எல்லாத்தையும் ஒட்டு மொத்தமா குறை சொல்லலே! உங்களைப் போல மனுச தெய்வமும் நிறையப் பேர் இருக்காங்க! நம்மைப்பற்றி நமக்கு தெரியும்! நம் புனிதம் தெரியும்! நான் உங்க மனைவின்னோ... நீங்க என் புருஷன்னோ.. சொல்லிக் கொள்வதால்... நாம் புருஷன் - பொண்டாட்டியா மாறி.. அத்துமீறப் போறதில்லே! நாம் இந்த வாழ்வை எதிர்கொண்டு முன்னேறும் வரை... கால் ஊன்றும் வரை... பொய் சொல்லலாமா, அன்பு?''

''....................''

''புடிக்கலையா, அன்பு? கேவலம் ஒரு விதவையைப்போய் சொல்லணுமான்னு தோணுதா?'' அர்ச்சனா கேட்க...

'இந்த நொடிகூட உன்னை மனைவியா ஏத்துக்கத் தயாரா இருக்கேனே, அர்ச்சனா? வார்த்தையால கொல்றீயே! என் கனவுக் காதலி... காதல் மனைவி.. கற்பனைத் துணைவி... எல்லாமே நீதானே.. கண்ணம்மா...! சொல்ல முடியாத பாவியா இருக்கேனே!' மனதில் புலம்ப...

''பொய் சொல்றீங்க! புடிக்குதோ... புடிக்கலையோ! எத்தனை நாள் வீடில்லாமல்... பச்சக் குழந்தையை வச்சிட்டு ஓட்டல்ல தங்கறது?''

'அர்ச்சனா சொல்லும் பொய்... என்றாவது நிஜமாக வேண்டும், அன்னையே! அர்ச்சனா மனம் மாறி... என் காதலை உணர்ந்து... என்னை உண்மையாகவே கணவனாய் ஏற்றுக் கொள்ள வேண்டும் தாயே! அர்ச்சனா... என் வாழ்வை மலரவைக்க... என் மனைவியாய் வரவேண்டும்!



என் கண்ணான அர்ச்சனா... ஒருநாள் என் கைபற்ற வேண்டும்!' அன்னை காளிகாம்பாளிடம் வேண்டிக் கொண்டான் -

அவன் வேண்டுதல், ஆசை பலிக்காது எனத்தெரியாமல்!

## 16

''பச்சப் பிள்ளையை தூக்கிட்டு வெய்யில்ல வந்து இருக்கீங்களே! ரெண்டு பேரும் வசதியா வாழ்ந்தாப் போலத் தெரியுது! ஓட்டுவீடுதான். பரவாயில்லையா?'' அந்த அம்மாள் கேட்க...

இருவரும் தலையாட்டினர்.

''ரெண்டு பேரும் சின்னஞ்சிறுசுகளாகத் தெரியுது! எங்க வீட்டுல வயசுப் பொண்ணுங்க இருக்கு! நீங்க கொஞ்சம் சத்தமா சிரிச்சி, பேசி, விளையாடினா கேட்கும்! ஓட்டுவீடு... ஒத்த சுவருதான் மத்தியில! பதமா நடந்துக்கங்க தம்பி!'' என்று அந்த அம்மாள் சாவி கொடுக்க... அர்ச்சனாவை பரிதாபமாய்ப் பார்க்க... இந்த சொல்லால் அவள் அதிர்ந்து இருப்பது அவள் முகத்தில் தெரிந்தது.

காம்பௌண்ட் சுவருக்குள் ஐந்து ஓட்டுவீடுகள். பின்னாடி தோட்டம், கிணறு, மலர்செடிகள் என்று ரம்மியமாய் இருக்க... அவர்களுக்குப் பிடித்துவிட்டது.

''நீ வசதியா வாழ்ந்த பொண்ணு! இன்னும் கொஞ்சம் நல்ல வீடா பார்த்திருக்கலாமோன்னு தோணுது, அர்ச்சனா!''

''நீங்க மட்டும்...'' என சொல்ல, வாயை மூடிக்கொண்டான்.

''உன்னிஷ்டம் எதுவோ... அதுதான் எனக்கும் அர்ச்சனா! எனக்குன்னு தனியா எண்ணமோ, விருப்பமோ எதுவும் இல்லை!'' என்று அன்புபொங்க கூறினான்.

ஒவ்வொரு டைரக்டர் வீட்டுப் படியேறி.. இறங்கியதுதான் மிச்சம்!

வேலை கிடைத்தபாடில்லை! காசெல்லாம் கரைந்தது.

அர்ச்சனா அவன் படும் வேதனை, கஷ்டத்தைப் பார்த்து... கவலையானாள்.

அவன் போய்விட்டால் பட்டினி கிடந்து மிச்சப்படுத்தினாள்.

'கணேஷ்... எதிலும் வேகம்... வேகம்ன்னு... என்னையும் வேகமா தவிக்க விட்டுட்டு போயிட்டையே! இத்தனை தவிக்கவா... கஷ்டப்படவா.. என்னுள் வேகவேகமாய் காதல் துளிர் விட்டது?'

'கணேஷ்... எங்களுக்காக அன்பு படும் வேதனையைப் பார்த்தாயா? நாங்கள் படும் வேதனை உனக்குத் தெரிகிறதா? அவருக்கு வேலை கிடைக்க... நீயும் வேண்டிக் கொள்ளக்கூடாதா?'

'கடைசியில் என்னை முத்தமிடாமலேயே போய்விட்டாயே, கணேஷ்! உன் ஆசை நிறைவேறாமல் போயிடிச்சே! இப்படி ஆகும் என்று நினைத்துக்கூட பார்க்கவில்லையே! இதுபோல ஆகும் என்று தெரிந்திருந்தால்... உன்னை ஆயிரம்... கோடி... முத்தங்களால் அர்ச்சித்திருப்பேனே!' தனிமையில் புலம்புவாள்.

அன்பு, களைத்து, அலுத்து வந்தாலும்... அழும் குழந்தையை மடியிலேயே போட்டுக் கொண்டு... அர்ச்சனாவைத் தூங்கச் சொல்லுவான்.

''ராத்திரியில குழந்தை கத்துதேம்மா! நீ அணைச்சுட்டு படுத்துட்டீன்னா.. உன் மார்புல பால் குடிச்சிட்டே... குழந்தை தூங்கிடுமே! இதுகூட தெரியாத பெண்ணா?'' என்று வீட்டுக்காரம்மா சொன்னால், அமைதியாய் இருப்பாள்.

'குழந்தை பெறாத என் மார்பிலிருந்து பால் வராதுன்னு தெரியாத பெண்மணி நீங்கள்தான்!' சொல்ல முடியாமல் கலங்குவாள்.

''சாதாரண டைரக்டர்கள் கீழேயே கணக்கில்லாமல் நிறைய பேர் இருக்காங்க! இந்த சினிமா ஆசைக்கு முழுக்கு போட்டுடலாம்ன்னு பார்க்கிறேன்! நாளைய லட்சியத்துக்காக... இன்று பசியும், பட்டினியுமா கிடக்கணுமா? கையில இருக்க பணமும் குறைஞ்சிட்டே வருது! இன்னும் ஒருமாசம் வரலாம்! பிறகு?''

''அப்படியெல்லாம் பேசக்கூடாது, அன்பு! நீங்க உங்க லட்சியத்துலயே குறியா இருங்க. நீங்க ஜெயிப்பீங்க!''

''வார்த்தைக்கு வேணா நல்லாயிருக்கு அர்ச்சனா... நீ இப்படி பேசுவது! ஆனால் வாழ்க்கைக்கு ஒத்துவராது! எதுனா கம்பெனியில கணக்கெழுதற வேலையோ... இல்ல கான்வெண்ட்ல ஆசிரியர் வேலையோ கிடைச்சாக்கூட பரவாயில்லைன்னு தோணுது!'' என்று அன்பு சோகமாய் கூற...

''அப்படியெல்லாம் பேசக்கூடாது அன்பு! மனம் என்ற குரங்கை கயிறுபோட்டு கட்டி... நம்ம கட்டுப்பாட்டுக்குள்ள வச்சிக்கணும்! இல்லேன்னா... இப்படித்தான் - வெற்றியா..? தோல்வியா? என்ற கிளைகளில் மாறிமாறித் தாவும். உங்களால் முடியும், அன்பு! வெல்வது நிச்சயம்! தோல்வியிலதான் வெற்றியே ஒளிஞ்சிட்டு இருக்கு! பத்துமுறை தோற்கறவன்... வெற்றிக்கு ஸ்ட்ராங்கா அஸ்திவாரம் போடறான்னு அர்த்தம்! இந்த அலைச்சல், ஏமாற்றம், தோல்வி, கஷ்டம் எல்லாமே வெற்றி என்னும் இலக்கை எட்டுவதற்கு கிடைக்கும் ஸ்ட்ராங்கான ஏணிப்படிகள்!'' அர்ச்சனா அருமையாய் கூறி முடிக்க...



''நீ பேசறதைக் கேட்க... மனசுக்கு தெம்பு வந்தாப்போல இருக்கு அர்ச்சனா! அழகா பேசறே அர்ச்சனா...'' அவளை ரசனையுடன் நோக்க...

''உங்களோட இயல்பு எனக்கும் ஒட்டிகிச்சிப்போல!'' மல்லிகையாய் சிரித்தாள்.

ஒரு வீட்டில் இருந்தாலும்... அந்த வாலிப உள்ளங்கள்... ஒரு நாள்கூட தப்பான பார்வைகூட பார்த்துக் கொண்டதில்லை.

அழகான பதுமையாய்... அர்ச்சனா அவன் கண் முன்னே நடமாடினாலும்... ஒரு சின்ன மோகப்பார்வையோ... கெட்டபார்வையோ பார்க்காத அன்புவை மனதிற்குள் மெச்சிக் கொண்டாள்.

அன்பு தன் நல்ல நடத்தையாலும், பாசத்தாலும், அன்பாலும்... அர்ச்சனாவின் மனதில் மேலே மேலே உயர்ந்து நின்றான்.

கண்கண்ட தெய்வமாய்... தவசியாய்... ஞானியாய்... அர்ச்சனாவிற்கு அன்பு தெரிந்தான்.

வீட்டு ஓனரின் முத்த பெண் திவ்யா கல்லூரிப் படிப்பு முடிந்து வீட்டில் இருந்தாள். திவ்யாவிற்கு அர்ச்சனாவைப் பிடித்து விட்டது. அதைவிட காலையில் பாடும் சுப்ரபாரதமும்... குழந்தைக்கு பாடும் தாலாட்டும் பிடித்துவிட... ஒருநாள் மெதுவாய் கேட்டாள்.

''அக்கா... ரொம்ப நல்லாப் பாடறீங்களே... முறையா பாட்டு கத்து இருக்கீங்களா?''

''ஆமாம்மா!''

''உங்க குரல் என்னை மயக்குதுக்கா. உங்க குரலில் மயங்கித்தான்... மாமா இத்தனை சாதுவாய்... மென்மையாய்... நல்லவரா இருக்கிறாரா? நான் இதுபோல அதிசயமான ஆண்பிள்ளையை பார்த்ததில்லேக்கா! சின்ன கோபம், முகம் திருப்பல், கண்டிப்பு என்று எதுவுமே உங்களிடம் காட்டி பார்த்ததில்லையே! இப்படி ஒரு கணவர் கிடைக்க என்ன தவம் செய்தீங்க?''

திவ்யா கேட்க... அடிபட்ட வேதனையில்... ஊமையாய் உள்ளுக்குள் கண்ணீர்விட்டாள்.

''காதல் கல்யாணமா?''

அர்ச்சனா அதிர்ந்து... பின் பார்வையை நார்மலாக்கி மௌனமானாள்.

''புரியுது... புரியுது! உங்க மௌனமே... காதல் கல்யாணம்ன்னு சொல்லுது! குழந்தையை தாலாட்டறாப் போல... மாமாவை எப்போ தாலாட்டுவீங்க? நைட்டுலயா? ஆனால் மாமாவை தாலாட்டறது மட்டும் காதுலயே விழலையே!'' வெள்ளையாய் கூறி திவ்யா சிரிக்க... அர்ச்சனா எரிச்சலானாள்.

''திவ்யா... விளையாட்டுக்கும் ஒரு எல்லை உண்டு!''

''சரிக்கா... இனி கிண்டல் வேண்டாம்! எனக்கு முறையா பாட்டு சொல்லிக் கொடுங்களேன். என்னோட என் தங்கை, பக்கத்துவீட்டு பிள்ளைகள், இந்த தெருப்பிள்ளைகள்ன்னு சொல்லித்தந்தால்... மாமா வேலையில்லாமல் கஷ்டப்படுவதற்கு... இந்த வருமானம் உங்களைக் காப்பாற்றும். என்னக்கா?''

திவ்யாவின் கருத்து பிடித்திருந்தது. அதனால் ''அவர் வரட்டும்! கேட்டுட்டு சொல்றேன்!'' என்றாள்.

''மாமா மறுக்காமல் இருக்க... பக்குவமா 'அந்த' மூடில் இருக்கும்போது கேளுங்கக்கா! என்ன?'' திவ்யா சிரித்தவாறே ஓடிவிட்டாள்.

அர்ச்சனா தலையணையில் விழுந்து ஒரு மூச்சு அழுது முடித்தாள்.

இரவு அன்பு வந்ததும் விஷயத்தை சொல்ல...

''வேணாம் அர்ச்சனா! உன்னைக் கஷ்டப்படுத்தி... அப்படி ஒரு சாப்பாடு எனக்கு வேண்டாம்!'' மறுக்க...

''நம்ம கஷ்டம் தீர்ந்து... நீங்க ஒரு வேலையில அமர்ந்த பிறகு பீஸ்வாங்கி சொல்லித்தரமாட்டேன்! அப்போது சேவைக்காய் செய்வேன். அதுவரை குறைந்த கட்டணத்தில் சொல்லித்தரேனே! எனக்கும் கணேஷ் ஞாபகம் அதிகமா வாட்டி வதைக்குது! அதுல இருந்து விடுபட... ஒரு வடிகாலாய் பாட்டு சொல்லித் தரேனே! எனக்கும் ஒரு மாற்றம் வேணுமில்லையா?''

''உன்னிஷ்டம் அர்ச்சனா! ஆனால், எனக்கு வேலை கிடைச்சதும்... ஒரு மாற்றத்துக்காக... சேவைக்காக... உன் சந்தோஷத்துக்குன்னால் நான் சம்மதிப்பேன்! பணம் சம்பாதிக்க... அப்போ சம்மதிக்கவே மாட்டேன்!''

''நீங்களே செய்யச் சொன்னாலும் செய்ய மாட்டேன்! அப்படி ஒரு எண்ணமிருந்தால்... நானும் உங்களோட - மியூசிக் டைரக்டரைப் பார்த்து சான்ஸ் கேட்க - புறப்பட்டு வந்திருக்க மாட்டேனா? ஊர்ல இருந்தவரை பக்கத்துல இருக்கற - இல்லாதவங்க குழந்தைகளுக்கு இலவசமா சொல்லிக்கொடுத்துட்டு இருந்தேன்! நான் பாட்டு கத்துக்க ஆரம்பிச்சப்பவே... என்னுள் எழுந்த எண்ணம் இது!''

''எத்தனை நல்ல மனசு! உன்னை தண்டிக்க... அந்தக் கடவுளுக்கு எப்படித்தான் மனசு வந்ததோ! கடவுளும்... கடவுள் சக்தின்னு ஒன்றும் இருக்கா? சந்தேகமா இருக்கு அர்ச்சனா!''

''கடவுள் சக்தின்னு ஒண்ணு இருந்ததால்தான்... இப்படிப்பட்ட நல்ல மனுசன் எங்களுக்கு கிடைச்சி இருக்கீங்க! இல்லேன்னால் நடுவீதியில நின்னு தவிச்சி இருப்போமே! கடவுள் வந்து நேரா காட்சி தரமாட்டாங்க! உதவமாட்டாங்க! இப்படி உங்களைப்போல மனுசனா பிறந்துதான் காட்சி தருவாங்க! நீங்கள் கடவுள்! கடவுளின் அவதாரத்தில் ஒருவர்!'' கண்ணீர் சொட்டக் கூறினாள்.

''கேவலம் நான் சாதாரண மனிதன்! என்னைப் போய் கடவுள் அது



இதுன்னுட்டு..! என்ன அர்ச்சனா நீ..?'' கொஞ்சம் கோபமாய் கேட்டான்.

''நிச்சயமா நீங்க கடவுள்தான்! கஷ்டப்படறவங்களுக்கு... கடவுள் ஏதாவது உருவில் வந்து காப்பாராம்! உங்க உருவிலே அந்தக் கடவுள் வந்து... எங்களைக் காக்கிறார்! ரட்சிக்கிறார்! நீங்க செய்யற உதவிக்காகவோ... எங்களைக் கடைசிவரை வச்சிப் பார்த்துக்கணுங்கிற தப்பான எண்ணத்திலோ... பொய்யா புகழலே, அன்பு! நிஜம் அன்பு! உங்களை இதயத்துல கடவுளா வச்சி... தினம் தினம் பூஜிக்கிறேன்... வணங்குகிறேன், அன்பு!'' கண்ணீர் வழிய சொல்லி... கையெடுத்துக் கும்பிட்டாள், அர்ச்சனா!

## 17

அர்ச்சனா நன்கு பாட்டு சொல்லிக் கொடுக்கும் செய்தி பரவி... நிறைய குழந்தைகள் சேர்ந்தனர்.

கௌசல்யா குட்டி, எல்லோரையும் சிரிப்பால் மயக்கி... ஐந்து குடித்தனக்காரர்களிடமும் ஒட்டிக்கொண்டாள்.

குறைந்த கட்டணம் என்றாலும்... அவர்கள் வாழ போதுமானதாக இருந்தது.

அன்பு அலைந்து, திரிந்து கஷ்டப்பட்டதின் பலனாய்... டாப்பில் இருக்கும் டைரக்டர் பாலசேகரனிடம் வேலைகிடைத்தது.

அன்புவின் அபரிமிதமான திறமையாலும்... அறிவாலும்... ஒழுக்கத்தாலும்... அடக்கத்தாலும்... பாலசேகரனின் மனதில் உயர்ந்து... தனியிடம் பிடித்தான். அன்பு இல்லாமல் பாலசேகரனால் தனித்து இயங்க முடியாது என்ற நிலைக்கு வந்துவிட... சம்பளத்தை அவர் கூட்டிக்கொடுக்க...

இங்கே அர்ச்சனா கட்டணமே இல்லாமல் பாட்டு சொல்லிக் கொடுக்க... மக்களின் மனதில் இடம் பிடித்தாள். அவள் புகழ் அந்தத் தெரு... அடுத்த தெரு என பரவி.. ஒரு பெண்கள் பத்திரிகையின் நிருபருக்குத் தெரிய வர.... அவளைப் பேட்டிகாண வந்தவரிடம்.... அர்ச்சனா புன்னகையோடு மறுத்து விட்டாள்.

அன்புவை அஸிஸ்டெண்டாய் போட்டு எடுத்த அத்தனைப் படங்களும் வெற்றிநடைபோட.... சினிஃபீல்டில் அன்புவைத் திரும்பிப் பார்த்தனர். சில தயாரிப்பாளர்கள் வீட்டுக்கே வந்துவிட.... அவன் மறுத்துவிட்டான். இன்னும் கொஞ்சம் அனுபவம் தேவை என்று நினைத்தான்.

''நல்லதா வேற வீடு பார்க்கலாமா, அர்ச்சனா?''

''வேணாங்க! எல்லோராலும் தூர்த்தியடிக்கப்பட்ட நம்மை அணைச்சிட்ட... தாய்வீடு இது! சொந்தமா வீடு கட்டித்தான்... இங்கிருந்து

போகணும்!''

அன்பு நெகிழ்ந்துவிட்டான், அவள் பேச்சில்!

''பாலசேகரன் சார்கிட்ட சொல்லி குழந்தையை நல்ல ஸ்கூல்ல சேர்க்கணும்! குழந்தையோட தகப்பன் நான்! என் இனிஷியல் போட்டுக்கலாம். தாய்ங்கிற இடத்துல உன் பேர் போடலாமா, அர்ச்சனா? உன் மகளா ஏத்துட்டையா?''

''என் சந்தோஷம், துக்கம், உலகம் எல்லாமே... இந்த கௌசல்யாதான்! என் வயிற்றுல பொறக்கலன்னாலும்... என் மார்புல பால் குடிச்சி வளரலன்னாலும்... என் மகள் இவள்தான்! ஆனால் தகப்பன்னு உங்க பேரைப் போடுவதால்... நாளைக்கு உங்களுக்குப் பிரச்சனை வரலாம், அன்பு!'' என்று கனிவாய் அர்ச்சனா சொல்ல...

''எப்போ?'' அவசரமாய் கேட்டான்.

''உங்க கல்யாணத்தின் போது!''

''நான் கல்யாணமே பண்ணிக்கப் போறதில்லை!''

''உங்களுக்காக ஏங்கிட்டு லதா இருக்கா!''

''என்னோடு வளர்ந்த பெண் - தங்கை போல! எப்படி முடியும்? அவ மனசைக் கெடுத்ததெல்லாம் என் தாய்க்காரிதான்! லதாவுக்கு வேற மாப்பிள்ளை பார்க்க சொல்லணும்! அப்படியே என் தாய், அக்கா, மாமாவைப் பார்க்கணுமுன்னு ஆசையா இருக்கு! ஒரு முறை போய்வரவா?''

''என்ன? என்னங்க இது என் அனுமதி கேட்டுட்டு? முதல்ல லீவு போட்டுட்டுப் போங்க!''

''நீயும் வாயேன்!''

''ரம்யா கௌதமோட நல்லா வாழறாளாம்! அப்பாவுக்கு போஸ்டல் இன்ஸ்பெக்டரா பிரமோஷன் வந்து... வடக்கே வெளிமாநிலத்துக்கு போயிட்டாங்களாம்! சமீபமா நம்ம ஊர் பையனைப் பார்த்தேன்! சொன்னான்!'' உணர்ச்சியற்ற குரலில் கூற...

''என்கிட்ட சொல்லவே இல்லையே அர்ச்சனா!'' அன்பு குறைபட...

''முக்கியமான விஷயமானால் சொல்லியிருப்பேன்!''

''உனக்கு எது முக்கியமான விஷயம்?''

''நீங்க டைரக்டரா உயரணும்! பேரும், புகழும் பெறணும்! நல்ல பெண்ணை மணந்து... வரிசையா உங்களுக்குப் பொறக்கற குழந்தைகளோட...அசிங்கம் பண்ணின துணியைத் துவைக்கணும்! கடைசிவரைக்கும் உங்க வீட்டு சமையல்காரியா இருக்கணும்! என்னால் இப்படியெல்லாம்தான் நன்றிக் கடனை அடைக்க முடியும்! மறுபிறவின்னு ஒண்ணு இருந்தால்... நான் உங்க வீட்டைக் காவல் காக்கும் நாயா



பொறக்கணும்... அல்லது மாடா பொறந்து, இறந்து, என் தோல் - செருப்பா மாறி... உங்க கால்ல தேயணும் அன்பு!'' அர்ச்சனா அழ... அன்பு பதறி...

''என்ன அர்ச்சனா நீ? இப்படியெல்லாம் பேசினால்... எனக்கு உன்மேல் கோபம் வருது!'' அன்புவின் கண்களிலும் கண்ணீர் துளிர்த்தது.

''பொய்யில்லே! என் நெனப்பெல்லாம் இதுதான்! லதா வேணாம்னா வேற நல்ல பெண்ணா பார்க்கவா?''

''ப்ளீஸ்.... கல்யாணம் பற்றி பேசாதே! பிடிக்கலே!''

''எப்போ கல்யாணம் பற்றி பேசலாம்?''

''என்னைக் கொல்லாதே, அர்ச்சனா! அதை விடு. நீ பத்திரமா இருப்பாயா? திவ்யாவை துணைக்கு அழைச்சி படுத்துக் கொள்வாயா? நான் போனதும் திரும்பிடறேன்!''

''உங்க துணை இன்னும் எத்தனை நாளைக்கு? நல்லவளாய் வந்தால்... சமையல்காரியாய் உங்கள் வீட்டில் தொடரலாம்...! இல்லேன்னால் தனிச்சித்தானே வாழணும்!''

'அர்ச்சனாவிடம் தன் காதலைப் போட்டு உடைக்கலாமா?' என்று இதுபோல சமயத்தில் வெறி வரும். 'ஆக... என் மேல் உள்ள காதலால்தான்... காத்தீர்களா?' என்று கேட்டு விட்டால் என்ன செய்வது என்ற பயம் அவ்வப்போது வந்து தடுத்தது.

அவளிடம் எதையுமே எதிர்பாராமல் செய்யும் உதவி என்றால்... நம்பினால் சந்தோஷம்! இல்லையேல் அசிங்கம்தானே!

இறந்துபோன கணேஷிடம் எப்படி எந்த ஒரு எதிர்ப்பார்ப்பும் இல்லாமல்... அர்ச்சனா காதல் கொண்டுள்ளாளோ... அது போலவே அன்புவும் அவளிடம் எந்த ஒரு எதிர்ப்பார்ப்பும் இல்லாமல் காதலிக்கிறான். அவன் காதலிக்கும் தேவதை எந்தக் கஷ்டத்தையும் அனுபவிக்காமல்... சந்தோஷமாய் இருந்தாலே... அவனுக்கு சந்தோஷம்!

உலகிலேயே மிகக் கொடுமையானது... தான் காதலிக்கும் பெண் கஷ்டப்படுவதைக் கண்ணுறுவதுதான்! அந்தக் கஷ்டத்தை கடவுள் அன்புவுக்கு கொடுத்துவிட்டான்!

எத்தனை பேரையும், புகழையும் கடவுள் அன்புவுக்கு கொடுத்தாலும்... அவனால் சந்தோஷிக்க முடியாது!

**ஊ**ரில்...

தாய் சாரதா, அக்கா, மாமா, லதா ஓடிவந்து கட்டி அழ... அவனும் சத்தமிட்டு அழுதான்.

''நான் உன்னை விரட்டியது தப்புப்பா! மனிச்சிக்கப்பா! சாமி... என்

தங்கமே... திரும்பி வந்துடு! தெய்வமே... தெய்வமே... உன்னைப்பிரிஞ்சி என்னால இருக்க முடியலையே!'' அம்மா வீறிட்டு அழ...

''லதா... உங்களுக்காக காத்திட்டு இருக்கா மாப்ளே!'' மாமன் சொல்ல...

''லதாவுக்கு வேற மாப்பிள்ளை பாருங்க மாமா! சொன்னால் எல்லோரும் புரிஞ்சிக்கங்க!'' கையெடுத்துக் கும்பிட்டான்.

''ஏன் கண்ணு... உனக்கு அந்தப் புள்ளையையே பிடிச்சாகூட.... மறுதாலி கட்டி கூட்டிட்டு வந்துடேன்! அந்தப் பொண்ணை மருமகளா ஏத்துக்கிறேன்! சாமி சத்தியமா அந்தக் குழந்தை என் முதல்வாரிசு! தாய்க்காரி மாறிட்டேன் அன்பு!''

அம்மா சொல்ல திகைத்தான். பின் சொன்னான்:

''நம்ம கணேஷ் அவ மனசுல வாழ்ந்துட்டு இருக்கான். நான் கட்டிக்கிறேன்னு கேட்டாலும் ஒத்துக்கமாட்டாம்மா!''

''மகனே... அப்போ உனக்கொரு வாழ்க்கை?''

''அவ மனசு மாறும்ன்னு நம்பறேம்மா! அப்போது என் விருப்பம் சொல்லலாம்ன்னு இருக்கேன்! அவள்தான் என் வாழ்க்கை! என் உயிர்!'' உயிர் உருக சொன்னான்.

''தம்பி..! நாள் கடத்தாமல் சொல்லிடுப்பா! ஒரே வீட்டுல வாழறீங்க! உன்மேல் அவளுக்கு விருப்பம் கூட இருக்கலாம்! பொட்டபுள்ளை... மனசுல உள்ளதை சொல்லக்கூட தயங்கலாம். இல்லையா? சட்டுன்னு சொல்லுப்பா?'' அக்கா ஜெயா சொன்னாள்.

''அந்தப் பொண்ணையும் குழந்தையையும் போய் உடனே கூட்டிட்டு வந்துடு, அன்பு!''

''அப்படியெல்லாம் ஈஸியா வரமுடியாதும்மா! சீக்கிரமே சொந்தமா படம் டைரக்ட் பண்ற அளவு வளர்ந்து இருக்கேன். என் லட்சியம் நிறைவேறி.... கொஞ்சமா சாதிச்சிட்டு... அப்புறமா வரேன்!'' என் கடைசி நாள்ல... என் தொழில் விவசாயம்தான்,''

அப்படி சொன்ன மகனைப் பெருமை பொங்க ஆசையாய் நோக்கினாள், சாரதா.

18

குழந்தை கான்வென்ட்டிற்கு சென்றாள். சொல்லிக் கொடுப்பதை அப்படியே சொல்ல - அன்புவும், அர்ச்சனாவும் மகிழ்ந்தனர்.

கௌசல்யாவிற்கு விபரம் தெரிய ஆரம்பிக்க... அவளிடம் மாட்டிக் கொண்டு விழித்தனர்.

அன்பு குழந்தையைக் கட்டிமுத்தமிட்டால்...



''அப்பா... அம்மாவுக்கு முத்தம்? அம்மாவையும் கட்டி முத்தமிடுங்க!'' என்று அடம்பிடிப்பாள்.

அன்பு சிரித்து, மழுப்பி சமாளிப்பான்.

''அம்மா பெரியவ! பெரிவளைக் கட்டி முத்தமிடக்கூடாது. அது அசிங்கம்! உன்னைப் போல குழந்தைகளுக்குத்தான் முத்தம் கொடுக்கனும் குட்டி!''

அர்ச்சனா அவளுக்கு சோறு ஊட்டினாள்.

''அம்மா... அப்பாவுக்கும் ஊட்டிவிடு! அப்பா நாள்முழுக்க கஷ்டப்பட்டுட்டு வராரில்லையா? பாவம்மா அப்பா! ஆ... காட்டுங்க அப்பா...'' என்பாள்.

அர்ச்சனா முகம் கறுப்பாள்! அன்பு முகம் சிவப்பான்!

''அப்பா... நீங்களும் எங்களோட படுங்க! எனக்கு பயமா இருக்கு! எனக்கு இந்தப் புறம் அம்மா! அந்தப் புறம் நீங்க! உங்கமேல ஒரு காலும்... அம்மா மேல ஒரு காலும் போட்டுட்டு நான் தூங்கனும்! ப்ளீஸ் டாடி...!'' கெஞ்ச...

கௌசல்யா தூங்கும் வரை படுப்பான். பின்னர் எழுந்து சென்று விடுவான். சில நாட்கள் அசதியில் தூங்கி விட்டாலும்... அர்ச்சனா அவனை அப்படியே விட்டுவிடுவாள்.

அன்புவால் சின்ன தீங்குகூட ஏற்படாது என்று அவளுக்குத் தெரியும்!

''அம்மாவை கொஞ்சநேரம் உங்க நெஞ்சுமேலே படுக்க வச்சுக்கங்கப்பா!'' என்பாள் சிலநாட்களில்.

''அம்மா பெரியவள்! டாடி எப்படி தாங்குவேன்? டாடி செத்துரமாட்டேனா?'' சொன்னால் கப்சிப் ஆகிவிடுவாள்.

''அம்மாவையும் உங்க முதுகுல உட்கார வச்சி... யானை விளையாட்டு விளையாடுங்கப்பா! ப்ளீஸ்ப்பா...!'' அழகு முகம் சுருக்கி கேட்டால்... என்ன பதில் சொல்லலாம்ன்னு இருவருமே யோசிப்பார்கள்.

ஒரு நாள் திவ்யா வந்து சொன்னாள்.

''அன்பு மாமாவைப் பார்க்கும்போது ஆசையாசையா வருது! அவர் நல்ல குணத்தைப் பார்க்கும்போது... நீங்க சம்மதித்தால்... நான் ரெண்டாவதா கட்டிக்குவேன்!''

அர்ச்சனா அதிசயப்பட்டு நோக்க...

''நிஜமா... நீங்க சம்மதித்தால் அவரை நானும் கட்டிக்குவேன்! அவர் அழகும், ஆண்மையும், உயரமும்... அப்படியே அந்தக் காலத்து ராஜாக்கள்போல இருக்கார்!''

'திவ்யாவிடம் உண்மையைச் சொன்னால் என்ன? திவ்யா போன்ற

நல்லபெண் அன்புவின் வாழ்க்கைத் துணைவியாய் அமைந்தால்... அன்புவின் வாழ்க்கை எவ்வளவு இனிமையாய் இருக்கும்!' யோசித்த அர்ச்சனா... உடனடியாய் பின்கட்டு மாமரத்துக்கு கீழே அழைத்துச் சென்றாள்.

உண்மையை சொல்ல... திவ்யா பேச முடியாது தவித்தாள். பின்னர் படபடப்பாய் பேசினாள்.

''அக்கா... அக்கா... நீங்களும், மாமாவும் தெய்வம்க்கா! பார்த்த உடனே படுக்கைக்கு கூப்பிடற சில ஆண்கள் மத்தியில மாமா தெய்வம்! கதைபோல இருக்கே! கல்யாணமாகாத ஒரு ஆணும், விதவையான நீங்களும் கூடி... இப்படி விரசமே இல்லாத வாழ்க்கையை வாழ முடியுமா? இப்படி ஒரு நல்ல மனிதனின் நிழலில் வாழ்வதே பெரும் பேறுக்கா! மாமாவைக் கேளுங்க! நான் ரெடி!''

''மறுத்துட்டால்... வருத்தப்படக்கூடாது திவ்யா!''

''இப்படி ஒரு நல்ல மனுசன் கிடைக்கலன்னால்... வருத்தப்படாமல்.. எப்படி? கேளுங்க! சம்மதிச்சா என் அதிர்ஷ்டம்! இல்லேன்னால் உங்க ரகசியம் யாரிடமும் சொல்ல மாட்டேன்! சத்தியம்!'' சொல்லிவிட்டு திவ்யா சென்றாள்.

அன்று இரவு சாமியறையில் வைத்து மெதுவாய் கேட்டாள்.

''திவ்யா பற்றி என்ன நினைக்கறீங்க?''

''ஏன்? எதுக்கு? நல்லபெண்!''

''கட்டிக்கிறீங்களா?''

''என்ன அர்ச்சனா விளையாடறீயா?'' என்று பெருங்குரலில் கத்த...

''சத்தம்... சத்தம்... மெதுவா பேசுங்க!'' என்றவள் மதியம் நடந்த அனைத்தையும் சொல்ல... அவன் மறுக்க...

''கல்யாணம் வேணாம்ன்னு மறுக்க என்ன காரணம்? சரியான காரணம் வேணும்! சொல்லாமல் விடமாட்டேன் அன்பு!'' என்று கறாராய் கூறி.. அர்ச்சனா அவன் முகம் பார்க்க...

'சரியான சமயம்! உன் காதலை சொல்லிவிடு!' மனசு அறிவுறுத்த...

''நான் ஒண்ணு சொன்னால்... என்னை தப்பாநினைக்கக் கூடாது!'' மெதுவாய் அன்பு சொல்ல...

''சொல்லுங்க!''

''நான் உன்னைக் காதலித்தேன் அர்ச்சனா! இன்னமும் காதலிக்கிறேன்! இனியும் காதலிப்பேன்!'' தவிப்போடு மனதில் அடைத்துக் கொண்டிருந்ததை... அன்பு இறக்கிவைக்க...

அர்ச்சனா, ஒரு கூடை செந்நெருப்பை அள்ளி தலையில் கொட்டிய



கணக்காய் அதிர்ந்தாள்.

''என்ன அன்பு? ஏன் அன்பு? நி... நிஜமா?'' பதைபதைக்க கேட்டாள்.

''உன்னைப்பார்த்த நொடி என்னுள் காதல் வந்தது. அதை உன்கிட்ட சொல்ல நினைக்கும்போது... நீயும், கணேஷும் முந்திட்டு காதலை சொல்ல... என்னுள் எழுந்த நேசத்தை... பொங்கி எழுந்த வேகத்துலேயே என்னுள் போட்டு புதைச்சிட்டேன்! நீங்க ரெண்டு பேரும் சந்தோஷமா வாழ, கடவுள்கிட்ட பிரார்த்தனை செய்தேன். ஆனால், கணேஷோட விதி... பாவம் உன்னை தவிக்க விட்டுட்டு போயிட்டான். உன்னிடம் எதையுமே எதிர்பார்த்து நான் உனக்கு அடைக்கலம் கொடுக்கலே! இதை நீ புரிஞ்சிக்கணும், அர்ச்சனா!''

அர்ச்சனா விழிநீரை துடைத்து... அன்புவைப் பார்க்க... தொடர்ந்தான்.

''எந்தவித எதிர்ப்பார்ப்பும் இல்லாமல் காதலிச்சுட்டு இருக்கேன்! என் தவத்தால்... யாசகமாய்... காதல் பிச்சை போட்டாலும் நான் ஏத்துக்குவேன், அர்ச்சனா! மனதால்கூட வேறுபெண்ணை நினைக்கமாட்டேன்!'' உயிர் கரைந்து... உருகி அன்பு கூற...

''அது மட்டும் இந்த பிறவியில் நடக்காது! கணேஷ்... என் இதயத்துல ஸ்ட்ராங்கா ஏறி உட்கார்ந்துட்டான்! என்னால் அவனை மறக்கவே முடியாது! என்னை வீணா நினைச்சிட்டு உங்க வாழ்க்கையை அழிச்சிக்காதீங்க!'' அழுதாள்.

''கணேஷை மறக்கும் காலம் என்னை ஏற்றுக்கொண்டால் மகிழ்ந்து போவேன் அர்ச்சனா! எத்தனை நாட்கள்... மாதங்கள்... வருடங்கள்... ஜென்ம ஜென்மமானாலும்... உனக்காகக் காத்திருப்பேன், அர்ச்சனா!'' நெஞ்சில் வலியோடு சொன்னான்.

''என் காதல் நிஜமானால்... ஒரு நாள் எனக்கு நீ கிடைப்பாய்!''

''நோ... உங்கள் நினைவு ஒருக்காலும் நடக்காது''

''எனக்கு நம்பிக்கை இருக்கு!''

''உங்கள் நம்பிக்கை பொய்த்துப்போகும்!''

''பொய்க்கட்டும்! இந்தப் பேச்சை விடு! நான் உன்னை நேசிக்கிறேன் என்பதற்காக... நீ பயப்பட வேண்டாம்! எப்போதும் போல இயல்பா இரு. என்னைக்குமே அர்ச்சனாவுக்கு அன்பு நல்லவனாய்த்தான் இருப்பேன். உன் மேல் காதல் என்ற உணர்வு... என் உயிர்மூச்சு போல! அந்த உயிர்மூச்சு உன்னைச் சுற்றிக்கொண்டு இருக்கும்! ஆனால், உன் ஆடை உரிச்சி... அசிங்கமாய் பார்க்காது! உன் கற்பை என்றுமே களவாட நினைக்காது! என் விரல் நகம்கூட.... கனவாலும் அத்துமீறி தொடாது!''

''...............''

''நீ சுவாசிச்சி விட்ட காற்றை... நானும் சுவாசிச்சிகிட்டு... உன்னைத் தீண்டிய தென்றல்... அப்படியே என்னையும் தீண்டிக்கொண்டு... உன்னை

வாட்டிய வாடைக்காற்று... என்னையும் வாட்டிக்கொண்டு... இ... இந்த பாக்கியம் மட்டும் எனக்கு போதும், அர்ச்சனா!''

''..................''

''என் உயிர்மூச்சு உள்ளவரை காதலை சுவாசமாய் கொண்டு வாழ்வேன்! காதலே.. என் சுவாசமாய்..! கொண்டு வாழ்ந்து, மரணிப்பேன்! என் காதல் என்ற ஜீவாத்மா... உன்னை சுற்றி சுற்றி காக்கும்! கரையும்! கலங்கும்! உருகும்! அவ்வளவே! உன் உடம்புலையோ... மனசுலையோ உரிமை கொண்டாட வராது! நீயா ஏற்றுக்கொள்ளும்வரை காத்திருப்பேன்! மறுத்தாலும்... உனக்குக் காவலிருப்பேன்! அந்த உரிமையை எனக்குக் கொடுக்க வேண்டும், அர்ச்சனா! ப்ளீஸ்...'' கெஞ்சிவிட்டு படுத்துக் கொண்டான்.

அன்பு சுமையிறங்கிய உணர்வுடன் உறங்க... அர்ச்சனா சுமையேறிய உணர்வுடன் கொட்ட கொட்ட விழித்திருந்தாள்.

## 19

மனிதர்கள் வாழ்க்கையே போலியும், பொய்யும் நிறைந்ததுதான்! நூறில் ஐம்பது சதவீதத்தினர்.... பொய்யாய் வாழ்கிறார்கள்! போலியாய் சிரித்து வெளிவருகிறார்கள்! இரவெல்லாம் புருஷன் குடித்துவிட்டு வந்து.. மயிரைப் பிடித்து... மூர்க்கமாய் மூக்கு, கன்னம் என்று பாராமல் அறைவான். முதுகில் மொத்துவான். தலைமயிரைப் பிய்ப்பான். ஆனால், அவள் காலையில் எழுந்து வந்ததும்... எதிர்த்த வீட்டு மாமி... ஒருமாதிரி பார்த்த உடனே... அவள் கேட்கவில்லையென்றாலும்... இவளே சொல்லுவாள்:

'மாமி... என்ன அப்படி பார்க்கறீங்க? அவர் லேட்டா வந்தாரா... நான் ஒரு மூச்சு சத்தம் போட்டேன்! 'மன்னிச்சிக்க... மன்னிச்சிக்க'ன்னு காலில் விழாத குறையாய் கெஞ்சினார். சரி போன்னு மன்னிச்சி விட... ஊடலும், கூடலுமா... அவர் என்னை இராத்திரி முழுக்க விடலே! கொஞ்சலும், குலாவலும்... ஒரு சொட்டு தூக்கமில்லே!''

கன்னத்து காயத்தை மாமி பார்த்ததும் சொல்லுவாள்:

'ஆசையில் ராத்திரி முழுக்க கடிச்சி வச்சால்... காயம் வராமல் என்ன ஆகும்? போங்க மாமி!' என்று பொய்யாய் சிணுங்கி, போலியான நாணத்துடன் அகலுவாள். சந்தோஷத்தை அநுபவிப்பவர்களால் கூட இப்படி வெட்கப்பட முடியாது. இப்படி நிறைய பேர் இருக்க...

அன்புவும், அர்ச்சனாவும் ஊர், உலகத்துக்கு பொய்யான கணவன் மனைவியாய் வாழ்ந்தாலும்... உண்மையான பரஸ்பர அன்பு, நட்பு,



புரிதலோடு வாழ்ந்தனர். ஒருவரைஒருவர் புரிந்து... விட்டுக்கொடுத்து... திருப்தியாய் வாழ்ந்தனர்.

கௌசல்யா அவர்களின் சுவாசமானாள்.

''அர்ச்சனா... இப்படியே எவ்வளவு நாட்களுக்கு தனியாய் வாழ்வாய்? என்னை பிடிக்கலேன்னாலும்... ஏத்துக்க மனம் ஒப்பலன்னாலும்... வேறு நல்ல பையனா பார்க்கவா?'' ஒருநாள் அன்பு அக்கறையாய் கேட்க...

''நான் உங்களுக்கு நல்ல பெண்ணாய் பார்க்கவா?''

''அதெப்படி... நெஞ்சு முழுக்க நீயிருக்க... வேறொருத்தியை எப்படி மணப்பேன்?''

''முடியாது... முடியாதுல்ல? அது போலத்தான் - என் இதயம் முழுக்க கணேஷ் இருக்க... மாற்றானை எப்படி மணப்பேன்?''

அன்பு வாயடைத்துப் போனான்.

நான்கு நாள் கழித்து...

''அன்பு... இத்தனை நல்லவரா இருக்கீங்களே...! உங்க கெட்ட காலம், எனக்கும் கணேஷ்க்கும் நண்பராய் வந்து வாய்ச்சி... உங்க வாழ்க்கையே கேள்விக் குறியாயிடிச்சே! நாங்க நல்லா வாழ்ந்திருந்தால்... நீங்களும் மனம் மாறி ஒரு பெண்ணை மணந்து இன்பமா வாழ்ந்திருப்பீங்க! என்னால்தானே... எல்லாம் அந்த கணேஷ் பயலால்தானே!'' அர்ச்சனா சலிக்க...

''நான் நிஜமாவே சந்தோஷமா இருக்கேன்!''

''உங்க உணர்வுகள், ஆசாபாசங்கள் எல்லாத்தையும் குழிதோண்டி புதைச்சிட்டு சந்நியாசியா வாழறீங்களே! அன்பு...! கல்யாணம் வேண்டாம். ஆனால், தாம்பத்தியம்ன்னால் என்ன? தாம்பத்திய சுகம் எப்படி இருக்கும்? என்று தெரிந்து கொள்வதற்காகவாவது... ஒரு பெண்ணோட கூடி தெரிஞ்சிக்கங்களேன்! நீங்க விரல் சொடுக்கினால் வர எத்தனை பெண்கள் இருக்காங்க! இப்படி பட்டமரமா... பார்க்க கஷ்டமா இருக்கே! எந்த சுகத்தையும் அநுபவிக்காமல்...'' அர்ச்சனா வேதனையுடன் கூற...

''உனக்கு கிடைக்காமல் மறுக்கப்பட்ட.... பறிக்கப்பட்ட சுகம், சந்தோஷம் எனக்குமே வேண்டாம் அர்ச்சனா!'' அவன் நிஜமான உருகலுடன் கூற...

''என்ன அன்பு... உங்களுக்கும் எனக்கும் முடிச்சி போட்டுட்டு! நீங்க ஆம்பிளை! உங்களால்... உங்களால் கடைசிவரை இப்படியே இருக்க முடியுமா?'' சிறு கோபத்துடன் கேட்க...

''முடியும் அர்ச்சனா! என் வாழ்க்கையின் முதல் குறிக்கோள் உங்க ரெண்டுபேரையும் காப்பாத்தறதுதான்! அர்ச்சனாவின் துக்கம்... என் துக்கம்! அர்ச்சனாவின் சந்தோஷம்... என் சந்தோஷம்! நீ சிரித்தால் நானும் சிரித்து... நீ அழுதால் நானும் அழுது.. இதுபோதும்மா! உன் வாழ்க்கைங்கிற ரதத்துல

உன்னோட... உன் பக்கத்துல உட்கார பேராசைப்படலே! அட்லீஸ்ட் அந்த ரதத்தை ஓட்டும் சாரதியா என்னை ஏத்துட்டாப் போதும்!'' அவனுடைய உயிர்வலி கண்களில் தெரிந்தது.

''ஐயோ அன்பு...!'' முதுகு குலுங்க மடிந்து அழுதாள்.

''அன்பு... அன்பு... இப்படி ஒரு நல்லவரை என் வாழ்க்கையில் அறிமுகப்படுத்திய கடவுளுக்கு நன்றி சொல்றேன்! இப்படி தன்னலம் பாராமல்... பிறர்நலம் பார்க்கும் உங்களைக் கைதொழறேன், அன்பு! உங்க இத்தனை அன்புக்கும், பாசத்துக்கும் நான் தகுதியானவளா? இப்படி ஒரு தயாளனை... மனித தெய்வத்தைப் பார்க்கத்தான்... கணேஷ் பொட்டென்று போய்விட்டானா? என்ன தவம் செய்தேனோ? ஆனால்... ஆனால்... என்னால் கணேஷை மறந்து... உங்களை ஏற்க முடியாது! என் உயிர் உள்ளவரை உங்கள் வாழ்வு சிறக்க... கடவுளை பிரார்த்திட்டே இருப்பேன்!'' கதறி அழுதாள்.

''என்னுள் காமம் செத்து... உன் மேலான காதலே வாழ்கிறது அர்ச்சனா!'' அன்பு கூற, மேலும் குலுங்கி அழுதாள்.

ஒருநாள் லதாவிற்கு திருமணம் என்று அவன் குழந்தையோடு சென்றுவிட... அவனும், குழந்தையும் இல்லாமல் பைத்தியம் போல... உண்ணாமல், உறங்காமல் இருந்தாள். அவர்களைக் கண்டவுடன்தான் அவள் முகம் பளபளத்தது. அப்போது உடல்நிலை பாதிக்கப்பட்டு... ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆக... அன்பு ரொம்பவே கலங்கிப்போனான். அவளிடம் முதன் முறையாக அதிக கோபம் கொண்டு... கத்திவிட்டான்.

ஒருமுறை... ஊட்டி மலைச்சரிவில் படப்பிடிப்பு நடக்க.. காட்சியை நடிகனுக்கு விளக்கிக் கொண்டிருந்த அன்பு... தவறி விழுந்து... சரிவில் உருள... கை, கால் தலையென நல்ல அடி! காயம்!

அர்ச்சனா அலறியடித்து ஊட்டிக்கே சென்றுவிட்டாள், கௌசல்யாவோடு!

அர்ச்சனா அழுத அழுகையைக்கண்டு... 'காலம் முழுக்கவே இப்படி நோயாளியாய் இருக்கக்கூடாதா?' என்று ஏங்கினான். தன்மேல் அர்ச்சனாவுக்கு இத்தனை பாசமா? என்று திகைத்துப் போனான்.

அன்பு வீட்டுக்குவர... கண்ணின் மணியாய் காத்து, உணவு, மருந்து கொடுத்து, விரைவிலேயே குணமடையச் செய்தாள்.

படப்பிடிப்பு இல்லாத ஒரு லீவு நாளில் அன்புவை உடனடியாய் பாலசேகரன் அழைக்க... பயந்துகொண்டே சென்றான்-

அந்த அழைப்பு... அவன் தலையெழுத்தை மாற்றப் போகிறது எனத் தெரியாமல்!



20

பாலசேகரன் முன்பு அன்பு நின்றான்.

''அன்பு... சேலத்துப்பக்கமிருந்து ஒரு கொழுத்த பணக்காரன்... 'எனக்கொரு படம் பண்ணித்தரமுடியுமா?'ன்னு வந்து நிற்கிறான். உன்னைவச்சி... நானே எத்தனைநாள் பேரெடுப்பது? காதல்... கதையம்சம் நிறைந்ததா வேண்டுமாம்! அஜீத், விக்ரம், சூர்யா, விஜய் யாரை வேணாலும் ஹீரோவா போடுங்க! பணம் பிரச்சனை இல்லேங்கிறான். டாப்புல இருக்க ஹீரோயினாப்போடுங்க. ஆனால் படம் நல்லா வரணும்! இளசுகளுக்கு பாடம் புகட்டறாப் போல இருக்கணுமாம்!''

அன்பு பேசாமல் நின்றான்.

''காதலைக் கொஞ்சம் அழுத்தமா, ஆழமா சொல்லணும் என்று எதிர்பார்க்கிறார். என்னப்பா எதுனா கதையிருக்கா?''

''ட்ரை பண்றேன் சார்!''

''இப்படியெல்லாம் சொல்லக்கூடாது. உன்னால் முடியும் அன்பு பையா! காதலைப் பாங்கா சொல்ல முடியும்! நேர்த்தியான காதலை சொல்ல முடியும்! காதல்ன்னால்... அதுவும் உண்மைக்காதல்ன்னால் என்னன்னே தெரியாமல்.. சமூகத்துல காதலால் தற்கொலைகள் மலிஞ்சிப்போய் கிடக்குது! அந்த மாதிரி உள்ளவர்களுக்கு பாடம் புகட்டணும்! அடுத்ததா நிறைய பேர் காதல் நிறைவேறாமல்... விதியேன்னு பிடிக்காத வாழ்க்கை வாழ்ந்துட்டு இருக்காங்க! அவங்க மனப்புண்ணுல... வலிக்காமல்... மயிலிறகால் மருந்து கொண்டு வருடுவது கணக்காய்... இதமாய் இருக்கணும்! உனக்கு நல்ல எதிர்காலம் இருக்கு! என்னடா இந்தக் கிழவன் உளறரான்னு இப்போ நினைப்பே! நாளை ஜெயிச்ச பின்னாடி... அந்த ஆளு சொன்னது சரிதான்டான்னு சந்தோஷப்படுவே!''

''ஐயா...!'' அவர் காலில் மண்டியிட்டு வணங்கினான்.

''அன்பு பையா... என்ன இது கெட்ட பழக்கம்? மரியாதை மனசுல இருந்தாப் போதும்! நிம்மதியா வீட்டுக்குப்போ! அர்ச்சனா கையால வயிறுமுட்ட சாப்பிடு! பேப்பரையும் பேனாவையும் எடுத்துட்டு தனியே உட்கார்ந்து.. ரகரகமான காதலை வலிக்க வலிக்க எழுது! மக்கள் ரசனையைக் கொடுப்பவன்.. நல்ல கலைஞன்! நீ நல்ல கலைஞனாய் வருவாய்! எங்கும் காதல்! எதிலும் காதல்! காதல் இல்லையென்றால் சாகுதல் என்று இருக்கு! காதல் போயின் சாதல் அல்ல இளைஞா... சாதிக்க வேணுமடா இளைஞா என்று சொல்லு! மக்கள் உனக்கு வாழ்த்துப்பாடி பட்டுக்கம்பளம் விரிப்பாங்க! நாளை கதையை ரெடி பண்ணி எடுத்து வா! தாஜ்ல ரூம்போட சொல்லவா?''

"உங்க வீடே போதும் ஐயா! உங்க ஆசீர்வாதம் என்னைக்குமே எனக்கு வேண்டும்!"

அர்ச்சனாவிடம் சொல்ல... கைகுலுக்கி வாழ்த்து தெரிவித்தாள்.

அவள் தொட்ட கையை - முன்பொரு சமயம் போல - முத்தமிடத் தோன்றவில்லை. மாறாய் கண்ணில் ஒற்றிக் கொண்டபின்,

மாமரத்து அடியில் உட்கார்ந்து எழுதிய இரு கதைகளும் அவனுக்குத் திருப்தி அளிக்காமல் போக... அர்ச்சனாவை தோட்டத்திற்கு அழைத்து வந்தான்.

"ரெண்டு கதை எழுதினேன்! திருப்தியா இல்லே! மூன்றாவதா ஒன்றை நினைச்சி இருக்கேன்! அது நல்லா வரும்! ஆனால் அதற்கு உன் அனுமதி வேண்டும் அர்ச்சனா!"

"............"

"நம் வாழ்க்கைக் கதைதான். படமா எடுத்தா நல்லா வரும்! நம்ம வாழ்க்கையை வீதிக்கு கொண்டுவந்து அப்படி ஒரு காசு சம்பாதிக்கணுமான்னு நீ நினைக்கலாம்! நான் நினைச்சால்... ஆத்தாவே காசு கொடுப்பா! பெரிய பட்ஜெட்ல படமெடுக்கலாம்! அது உனக்குத் தெரிந்த கதைதான்! காசுக்காக இல்லை!

எத்தனையோ இளைஞர்கள் காதலுக்குத் தப்பான அர்த்தம் கொண்டு இருக்காங்க! பொய் காதலுக்கும், நிஜக்காதலுக்கும் அர்த்தமே தெரியாமல்... பொய்யை நிஜமென்று நம்பி தற்கொலை பண்ணிக்கிறாங்க! அப்படியே அது நிஜக்காதலாய் இருந்து நிறைவேறலன்னால்... அதுக்குப் பிறகு வாழ்க்கையே இல்லேன்னு நினைச்சி... விதியேன்னு கடமைக்காய் வாழ்கிறார்கள். இப்போதைய இளைய சமுதாயத்திற்கு பாடம்புகட்ட... நம் கதை சரியாய் இருக்கும். அதான் கேட்டேன்!" என்று பரிதாபமாய் சொன்னவன்,

"உனக்குப் பிடிக்கலேன்னா வேண்டாம்மா, அர்ச்சனா" என்றான்.

"உங்க முன்னேற்றம் எனக்கு முக்கியம்! செய்யுங்க அன்பு! பூரண திருப்தி!" என்று கண்கள் ஒளிற சொல்ல... அன்பு எழுதினான்.

மறுநாள் போனான். கதை சொல்லச் சொல்ல... அந்த இருவரும் அழுதுவிட... அன்புவின் கண்களிலும் நீர் எட்டிப் பார்த்தது.

கடைசியில் அவனைப் புரிந்து... நாயகி இணைந்ததாய் கூறியது மட்டுமே இவன் கற்பனை! மீதியெல்லாம் உண்மையே!

கற்பனையிலாவது அந்த அன்பு, அர்ச்சனா பாத்திரத்தை இணைத்துப் பார்க்க ஆசை. மக்களும் அதையேதான் விரும்புவார்கள் என்று அன்புவுக்குத் தெரியும்!

"பையா.. கதையா? இல்ல காவியமா? நிஜமா இதுபோல இருக்க



முடியுமா? எப்பேர்பட்ட தெய்வீகக் காதல்! கற்பனையே கரைக்குதே மனசை!" பாலசேகரன் நெகிழ...

"சாதாரண மனிதன் செய்யாமல்... மன்னன் செய்திருந்தால் சரித்திரம் என்பார்கள்! எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு தம்பி!" சேலம் சரவணன் சொன்னார்.

"திரும்பவும் சொல்றேன்! நிஜமா இப்படி இரு ஆத்மாக்கள்... இருக்கவே முடியாது, அன்பு!" பாலசேகரன் கூற...

'நானும் அர்ச்சனாவும் இருக்கோம் ஐயா! நிஜமாய்... விரல் நகம் தொட்டுக் கொள்ளாமல்... விரசப்பார்வை பார்த்துக் கொள்ளாமல்... அர்ச்சனா கணேஷை காதலித்துக் கொண்டும்... நான் அர்ச்சனாவை காதலித்துக் கொண்டும்... இன்னும் உயிரோடு... காதலை சுவாசமாய் கொண்டு!' அன்புவுக்கு பெரும் குரலெடுத்து கத்த வேண்டும் போல இருந்தது.

## 21

இரவு, பகல் பாராமல் ஐந்துமாத கடும் உழைப்பால் படம் முடிந்தது.

பாடல்கள் அத்தனையும்... அந்த பெண் கவிஞரால்... உயிரையே கரைய வைக்கும் வார்த்தைகளால் கோர்க்கப்பட்டு... பிரமாதமாய் இருந்தது.

ப்ரிவியூ காட்சி அந்த பெரிய தியேட்டரில் நடைபெற பாலசேகரன் ஏற்பாடு செய்திருந்தார். திரையுலகமே ஒரு எதிர்ப்பார்ப்புடன் திரண்டு இருந்தது.

படம் ஓட ஓட அர்ச்சனாவால் தாங்க முடியவில்லை. நெஞ்செல்லாம் அடைத்து... உடல் உதறி... வியர்வை ஆறாய் பெருகியது - அந்த ஏசியிலும்!

வெடித்துக் கிளம்பிய அழுகையைக் கட்டுப்படுத்த முடியாமல் முந்தானையை வைத்து அடைத்தும்... முதுகு குலுங்கியது.

அன்பு இதைக்கண்டு "அர்ச்சனா... அர்ச்சனாம்மா.... ஈஸி... ஈஸிம்மா! ப்ளீஸ்... உன்னை கொஞ்சம் எனக்காக கட்டுப்படுத்திக்கோயேன்! எல்லாரும் பார்க்கறாங்க!" மெதுவாய் கெஞ்சினான்.

"அந்தப் பையன்... அந்தப் பையன் எ... என் க... கணேஷ் போலவே இருக்கான்!"

"ரொம்பவே கஷ்டப்பட்டேன் அர்ச்சனா - நம்ம கணேஷ்போல பையன் கிடைக்க!"

"எனக்கு உடனே கணேஷைப் பார்க்கணும்! அதுவும் உயிரோடு பார்த்து கட்டி அணைச்சி அழணும்போல வெறி வருது! இன்னும் கொஞ்ச நேரத்தில்

பைத்தியமாகி... வீதி வீதியா அலைஞ்சுடுவேன் அன்பு! நான் வீட்டுக்குப் போறேன்!''

''அர்ச்சனாம்மா... ப்ளீஸ்ம்மா...''

அன்புவின் இருகைகளையும் சட்டென்று பற்றினாள்.

''அன்பு! இது உங்க கையில்லே! காலா நினைச்சி கேட்கிறேன்! என்னால முடியல! நரம்பெல்லாம் வெடிக்கறாப் போல இருக்கே!'' என்று அழ...

திவ்யாவோடு காரில் அர்ச்சனாவை அனுப்பி வைத்தான்.

நல்ல விலைக்கு விற்றது. நகரம், கிராமம் என்று... படம்பற்றி பேசப்பட்டது.

தயாரிப்பாளர் ஏக சந்தோஷத்தில் அழகிய பங்களா ஒன்றை வாங்கி, பரிசளித்தார்.

அர்ச்சனா, அம்மா, அக்கா, லதா.. எல்லோருக்கும் பார்த்துப் பார்த்து செய்தான்.

கணேஷின் அம்மா, நடராஜனால் துரத்திவிடப்பட்டு - தன் சகோதரன் வீட்டில் அடைக்கலமாக இருந்தாள். அவளையும் பார்த்து... அவள் பெயரில் ரெண்டு லட்ச ரூபாயை டெபாசிட் செய்தான். அந்த பேங்க் பாஸ்புத்தகத்தைக் கையில் கொடுக்க... கதறிவிட்டாள், அந்த அம்மாள்!

''என் மருமகளையும், பேத்தியையும் நல்லா வச்சிட்டாப் போதும்பா! அர்ச்சனாவை மணந்து... மகிழ்ச்சியாய் வாழறே இல்லையா?'' என்று கேட்க... பதில் சொல்லாமல் வெளியேறினான்.

அடுத்த படத்துக்கான அட்வான்ஸ் குமிய... அதையெல்லாம் மறுத்து... மீண்டும் சேலத்துக்காரருக்கே படம் பண்ணினான்.

புது வீட்டிற்கு குடிபோனார்கள். திவ்யா அம்மா சொன்னாள்:

''உங்களைப் போல கருத்து ஒத்த கணவன் - மனைவியை இதுவரை பார்த்ததில்லேப்பா! மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்தவரம் என்று சொல்லுவார்கள். ஆனால் அந்த தெய்வமே... மகாலட்சுமியே உனக்கு மனைவியா அமைஞ்சிருக்கா! அவள் குணத்துக்கும், மனத்துக்கும் நீ இன்னும் ரொம்ப நல்லா வருவேப்பா!'' என்று வாழ்த்திவிட்டுப் போக... அன்பு சிலிர்த்துப் போனான்.

டி.வி.க்கள் போட்டி போட்டுக் கொண்டு அவன் வீடு வந்தது.

அர்ச்சனாவையும் விட்டு வைக்கவில்லை.

'உங்க மேரேஜ்... லவ் மேரேஜா...? இத்தனை நல்லா வருவாருன்னு உங்களுக்கு தெரியுமா? உங்களோடு சண்டை போடுவாரா? முதன் முதலா அன்பு சாரை எங்கே பார்த்தீங்க?' என்று கேள்விக் கணைகளைத் தொடுக்க... அர்ச்சனா வாயையே திறக்கவில்லை.

அன்பு மழுப்பலாய் பதில் சொன்னான்.



''இப்படி ஒரு தேவதை... வரமாய் வாழ்க்கையில் வந்தால்... எதையுமே சாதிக்க முடியும், இல்லையா சார்?'' என்று ஒரு பெண் நிருபர் கண்சிமிட்டி கேட்க...

''யெஸ்ம்மா! இந்த தேவதை இல்லேன்னால்... இத்தனை தூரம் வந்திருக்க முடியாது! என் ஆசையெல்லாம்... வீணாய் கிராமத்திலேயே புதைஞ்சி போயிருக்கும்! என் வெற்றிக்கு காரணம்... என் அர்ச்சனா!'' என்று பேட்டியை முடித்தான்.

அர்ச்சனா முறைத்துக் கொண்டிருக்க... ''ஸாரி அர்ச்சனா... வாய் தவறி வந்துடிச்சி!'' மன்னிப்பு கேட்டு நகர்ந்தான்.

டி.வி.யைப் பார்த்து... உடனே மகனைப் பார்க்க சாரதா புறப்பட்டு விட்டாள்.

'புயலாய் இருப்பாளா...? பூகம்பமாய் மாறுவாளா..? பூவாய் மலர்வாளா...?

## 22

**சா**ரதா வர, அர்ச்சனா பயந்துவிட்டாள்.

''வாடி... என் தங்கம்! என் ராசாத்தி! உன்னைப் போய் கோபிச்சுக்குவேனா? என் புள்ளை ஊரெல்லாம் மெச்ச... உயர... நீதான்டி கண்ணு காரணம்! எம்புள்ளை பட்டமரமா நின்னுடுவானோன்னு பயந்தேன்! என் பெத்த வயிறு குளிர்ந்துடிச்சி தாயீ..! நீ என் புள்ளையோட குடித்தனம் பண்ற பாங்கை பார்க்க வந்தேன்! அன்பு பயலை சந்தோஷமா வச்சிக்கிறையாம்மா? செல்லம்... வாம்மா... வா! அத்தைகிட்ட என்ன பயம்? அத்தை திருந்திட்டேன்... வைரம்! என் வயித்தை குளிரவச்சாப் போல... நல்ல சேதி சொல்லி.. என் நெஞ்சிலையும் பால் வார்க்கணும் தாயீ!''

அர்ச்சனா புரியாமல் முழிக்க... அன்பு புரிந்து கொண்டான்.

''எனக்கு பேரப் பிள்ளையை பெத்துக் குடுதாயீ! அது என் நெஞ்சுல ஒண்ணுக்கு விட்டு அடிச்சாத்தான்... என் கட்டை வேகும்! செய்வாயா அம்மா?'' என்ற சாரதா, அர்ச்சனாவை அருகே இழுத்து..

''கண்ணும், மூக்கும், முடியும் எம்புட்டு அழகு! பைத்தியக்காரிக்கு இது அன்னைக்கி கண்ணுல படலியே! இப்படி புடவையை போர்த்திக்கிறதும்.. முடியை கொண்டையா போட்டிருப்பதும் புடிக்கலே தாயீ! தளர தளர பின்னி குண்டு மல்லிகை வச்சா எவ்வளவு அழகா இருக்கும்!'' அணைத்து, உச்சி வகிட்டில் முத்தமிட்டாள்.

''லதாவைவிட நல்லா சமைக்கறீயே! எங்க லதாகுட்டிய கட்டி வச்சிருந்தாக்கூட... உன்னைப்போல கண்ணும் கருத்துமா பாத்துக்க மாட்டான்னு தோணுதும்மா!''

இரவு, அர்ச்சனா ஒரு அறையிலும், அன்பு ஒரு அறையிலும் படுத்துக் கொள்ள... தினமும் இதுவே தொடர...

"என்னடா புருஷன், பொண்டாட்டி - ரெண்டுபேரும் வேற வேற ரூம்புல படுத்துட்டு? இராத்திரியில ரெண்டு பேரும் கூடவே மாட்டீங்களா..? இந்த மாதிரி பனிகாலத்துல... பொண்டாட்டியை கட்டிகிட்டு தூங்கினால் சுகமா இருக்கும்! போடா... போ... கதை, கண்றாவியையெல்லாம் பகலில் வச்சிக்க! கௌசல்யா குட்டி... பாட்டி கதை சொல்றேன்! வாடிம்மா!" என்று குழந்தையை அழைத்துக் கொண்டு... அன்புவை அர்ச்சனாவின் அறையில் தள்ளி பூட்டினாள்.

"ஸாரி... ஸாரி அர்ச்சனாம்மா!" என்று கெஞ்சி விட்டு... ஒரு போர்வையை உதறி படுத்தான். ஒரு நாள் நள்ளிரவு விழிப்பு வந்து முழிக்க...

அர்ச்சனாவின் வரிவடிவம் தெரிந்தது. கலைந்து ஒதுங்கிய முந்தானை! கணுக்கால் வரை ஏறியிருக்கும் சேலை! சேலை நழுவி பாலாய், பளிங்காய் தெரிந்த இடுப்பு என அவன் கண்களுக்கு விருந்து அளிக்க...

எத்தனையோ நடிகைகளை அரைகுறையாய் பார்த்தும் சலனப்படாத மனசு... முதல்முதலாய் சலனப்பட... அந்த சலனமென்னும் சாத்தானை விரட்டியடிக்க கந்தர் சஷ்டி கவசம் சொல்லிக் கொண்டான்.

மறுநாளே சாரதாவை வற்புறுத்தி கிராமம் அனுப்பி வைத்தான்.

கௌசல்யா வளர வளர டென்ஷன் படுத்தினாள்.

"அம்மா இடுப்பு எவ்வளவு சூப்பர்! அதைப் பிடிச்சி கிள்ளணும்ன்னு தோணாதா டாடி?" சலித்துக் கொள்வாள்.

"அப்பா... உங்க படத்துல விக்ரம் அங்கிள் த்ரிஷா ஆன்ட்டியை எப்படி கட்டிக்கிறார்! அப்படி அம்மாவை நீங்க கட்டிக்கங்களேன்! ப்ளீஸ்..." கெஞ்சுவாள்.

"கமல் அங்கிள் போல... அம்மாவுக்கு லிப்போஸ்ட லிப்ஸ் வச்சி கிஸ் கொடுங்கப்பா! நான் பார்க்கணும்!": சிணுங்குவாள்.

"விஜய், ஜோதிகா போல ரெண்டுபேரும் ஒரு குத்தாட்டம் போடுங்களேன்! நீங்க ரெண்டு பேரும் போர் போங்க! ச்சே!"

"நான் தூங்கினதும் அம்மாவை கொஞ்சுவீங்களா? முத்தமிடுவீங்களா? மடியில போட்டுக்குவீங்களா?"

"அம்மா... இந்த அப்பா உன்கிட்ட சில்மிஷமே பண்ண மாட்டேங்கிறார்! ஏம்மா இவரை மேரேஜ் பண்ணிட்ட?" கேட்பாள்.

ஒருமுறை பட வெற்றி விழாவில் தயாரிப்பாளர் கூல்ட்ரிங்ஸ்ஸில் பியரை கலந்துவிட.. அன்று போதையில் தள்ளாடி வந்தவனிடம் கத்தி, கலாட்டா செய்துவிட்டாள்.

"எனக்கே தெரியாது அர்ச்சனா! நான் குடிக்கமாட்டேன்னு மறுத்தப்போ... எனக்கே தெரியாமல் நடந்த சதி! அன்பு பற்றி இந்த அர்ச்சனாம்மாவுக்கு



தெரியுமில்லையா? ப்ளீஸ்...ப்ளீஸ்... மன்னிச்சி என்னோட பேசேன்!" அப்போது அர்ச்சனா அன்புவோடு ஒரு வாரம் வரை பேசவில்லை.

சமீபமாய் ஒரு நடிகை, காட்சியை தத்ரூபமாய் விளக்கிய அன்புவைப் பாராட்ட வார்த்தை கிடைக்காமல்... கட்டி அணைத்து முத்தமிட்டு விட... அந்தச் செய்தி பத்திரிகையில் வந்து.. கண்ணுற்ற அர்ச்சனா... அவனோடு கோபித்துக் கொண்டு ஒருமாதம் வரை பேசவில்லை.

இந்தக் கோபம் அன்புவுக்கு பிடித்திருந்தது.

அர்ச்சனாவுக்கு தன்மீதே கோபம் கோபமாய் வந்தது. 'அவரை எவளோ முத்தமிட்டால்... என் வயிறு எதற்கு பற்றி எரிய வேண்டும்?" அன்புவிடம் மன்னிப்புக் கேட்டு சமாதானமானாள்.

கதை சொல்லி முடித்தாள் அர்ச்சனா.

"எனக்கு வயசு முப்பத்தெட்டு பக்கம்! அவருக்கு நாற்பதுக்கு மேல! இன்னமும் நாங்க ஒழுக்கமா வாழறோம்! நிஜ அம்மா, அப்பாவைவிட பொத்தி பொத்தி வளர்த்த எங்களை எடுத்தெறிந்து பேசிட்டையே பாவி!" கத்தினாள் அர்ச்சனா.

கௌசல்யா ஓடிப்போய் கதவைத் தாழ்போட்டுக் கொண்டாள்.

23

கௌசல்யா யாருடனும் பேசாமல் வெளியே போனாள், வந்தாள்.

ஐந்தாம் நாள்...

ஃபோன் அடித்தது.

அன்பு கிளம்பிக் கொண்டிருக்க... அர்ச்சனாதான் ஃபோனை எடுத்தாள். கொஞ்ச நேரத்தில் வீறிட்டவள் - அழுகையோடு சொன்னாள்.

"அன்பு... கௌசல்யா தாங்க! கல்யாணம் பண்ணிக்க போறாளாம்! உடனே வந்தா பார்க்கலாமாம்! ஆசீர்வாதம் பண்ணலாமாம்! 'காத்திருக்க முடியாது! உன் பொய்யான புருஷனை கூட்டிட்டு வந்து சேர்'ங்கிறா. அவ அடிக்கடி போவாளே தாம்பரத்துல இருக்க லேடி ப்ரொபசர் வீட்டுக்கு! அங்கேதானாம்! உடனே புறப்படுங்க! இப்படி கல்லைத்தூக்கி தலையில போடறாளே! அந்தப் பையன் நல்லவனா? கெட்டவனா? தெரியலையே! இவளுக்கு கல்யாண வயசு வர்லே! சீக்கிரம் போனால் நிறுத்திடலாம்."

கார் வேகமாய் பறந்தது.

அர்ச்சனா அழுது அழுது முகம் வீங்கினாள்.

'இத்தனை நாள் மார்மீதும், தோள்மீதும் போட்டு வளர்த்த பிள்ளை!

இப்படி செய்துவிட்டாளே!' அன்புவுக்கு நெஞ்சமெல்லாம் வலித்தது.

''அன்பு... அன்பு... என்னால முடியல... நான் படுக்கணும்! ரொம்ப துக்கமா இருந்தால்... என் வீட்டில் உள்ளவரை அம்மா மடியில படுத்துக்குவேன்! கஷ்டமெல்லாம் நீங்கினாற் போல இருக்கும்! எனக்கு உங்க மடி வேணும்! தலை சாய்ச்சிக்க உங்க மடிவேணும்! கொஞ்சநேரம் என் அம்மாவா மாறி... தட்டி...தாலாட்ட முடியுமா? அன்பு... ப்ளீஸ்.. ப்ளீஸ்...'' அர்ச்சனா சிறுகுழந்தையாய் அழ...

அன்பு அவளை இழுத்து மடியில் போட்டுக் கொண்டான். ஒரு கையால் காரை ஓட்டிக்கொண்டு... மெல்ல முதுகில் தட்டி... வருடிவிட.... முதலில் வீறிட்டு அழுதவள்... முதுகு குலுங்கியவள்.. கொஞ்ச நேரத்தில் அவன் மடிதந்த நிம்மதியில்.. எல்லாவற்றையும் மறந்து உறங்கினாள்.

நீண்ட நேரத்தின் பின் பங்களா வந்துவிட.... எழுப்பி கைபிடித்து அழைத்துப் போனான்.

நகம் தொடாமல் இருந்தவள்... அவன் மார்போடு ஒண்டிக் கொண்டே.... பயந்த குழந்தையாய் செல்ல... முதலில் கண்ணில்பட்டது மணவறையும், ஐயரும்தான்!

ஐயர் மந்திரம் சொல்ல... மணவறையை சுற்றி சாரதா, ஜெயா, லதா, மாமா, ராகவன், மல்லிகா, ரம்யா, கணேஷின் தாய் என உறவுப்பட்டாளமே இருந்தது.

கௌசல்யாவும், அந்தப் பையனும் புத்தம் புது உடையில்!

''கௌசல்யா... கௌஷி... வேணாம்! வேணாம்டா! ப்ளீஸ்...!'' என்று அர்ச்சனா கதற...

''நீ படிம்மா! நல்ல பையன்னால் இவனையே பண்ணிவக்கிறேன்! இப்போ வேண்டாம்!'' அன்பு கூற...

''நீங்க எத்தனை எதிர்த்தாலும், கெஞ்சினாலும் கல்யாணம் மட்டும் நிற்காது!'' கௌசல்யா கண்டிப்புடன் கூற...

''உன்னை வளர்க்க... உறவுகளைப் பகைச்சுட்டு... எத்தனை கஷ்டம்! நன்றியா மகளே?'' அர்ச்சனா கரைந்து அழ...

''பழசையே சொல்லி போர் அடிக்காதேம்மா! என் தாத்தா, பாட்டி புறப்பட்டு வந்துட்டாங்க! அவங்களை ஏமாற்ற மனசு வர்லே!'' திமிராய் சொல்ல...

அர்ச்சனா ஓடிப்போய் அப்பா, அம்மாவைக் கட்டி கதறினாள். ''என் வயித்துல பொறந்த பிள்ளையாட்டம் வளர்த்தேனே! எங்கே குறையுன்னு தெரியல்லயே! அம்மா... அம்மா!'' என்று கட்டி அழ...

''அழுது முடிச்சாச்சா? இனி மணவறைக்குப் போகலாமா?'' என்று அம்மா இறுமாப்புடன் சொல்ல... மேலும் இருவரும் குலுங்கினர்.

''தாத்தா... பாட்டிகளா... புதிர் போதும்ன்னு நினைக்கிறேன்! பொண்ணை ரொம்ப நேரம் அழவச்சி... முகம் வீங்கினால்... மாப்பிள்ளை



பயந்துட்டு தாலிகட்டாமல் ஓடிட்டா... என்ன செய்வது?ம்?'' என்று குறும்பு கொப்பளிக்க அன்புவை கௌசல்யா பார்க்க...

''ஏய் பொண்ணே...! அழுதது போதும்! மாப்பிள்ளையை அழைச்சிட்டுப் போய் மணவறையில் உட்கார்!'' - அர்ச்சனாவைப் பார்த்து அப்பா சொல்ல...

''கல்யாணம் எனக்கில்லே! உங்க ரெண்டுபேருக்கும் தான்!'' என்று கௌசல்யா குண்டைத்தூக்கி போட.... இருவரும் அதிர்ந்தனர். ''இவன் ஃப்ரண்ட்! உண்மையாதான்! நான் உன் பொண்ணும்மா! உன் வளர்ப்புல எப்படி தவறுவேன்!ம்?''

''அம்மா..! காதல்ன்னா என்னம்மா..? செத்துப் போன மனிதருக்காக... உன் வாழ்க்கையை அழிச்சிட்டு..! உன்னையே நினைச்சி உருகி தவிக்கற அன்பு அப்போவோட காதலையும், ஆசையையும் பொசுக்கிட்டு வாழ்வதா, காதல்ம்மா? நீ தப்பா அர்த்தம் புரிஞ்சிகிட்டேம்மா! கணேஷ் மாமா மேல நீங்க கொண்டது காதலேயில்ல! இப்போ... இப்போ... அன்பு அப்பா மேல் கொண்டு இருப்பதுதான் காதல்!''

''...............''

''அன்பு அப்பாவுக்காக எத்தனை நேரமானாலும் விழிச்சி... பசியோடு காத்திருக்கிறாயே, அது காதல்ம்மா! அவருக்கு ஆக்ஸிடெண்ட் என்றதும் கதறி ஓடினாயே, அது காதல்லம்மா! அவர் எதிர்காலம் சிறக்க, காளிகாம்பாள் கோயில் கற்பக்கிருகத்தை - முட்டியெல்லாம் புண்ணாக - சுற்றி வந்தாயே, அது காதல்ம்மா! லதா, திவ்யா போன்ற பெண்களைக் கட்டி வைக்க முயற்சி செய்தாயே, அதுல உன் காதல் தெரியுதும்மா! அவர் சந்தோஷம், துக்கங்களை உன்னுடையதாகவும் ஏற்றுக் கொண்டாயே... அதுல உன் உண்மை நேசம் தெரியுதும்மா! அவர் குடிச்சார்ன்னு தெரிஞ்சி, கத்தி, கலாட்டா பண்ணீயே, அது காதல்ம்மா! எவளோ அவரை 'கிஸ்' பண்ணா உனக்கேன் கோபம்? கொந்தளிப்பு? இத்தனையிலும் உன் காதல் இருக்க... நேசம், பாசம் இருக்க... செத்தவர் மேல நேசம்ன்னு பாசாங்கு பண்ணிட்டு.... உன் வாழ்க்கையை அழிச்சிட்டது போதாதுன்னு... அன்பு அப்பாவோட வாழ்க்கையையும் அழிச்சிட்டு இருக்கையே! அவரை உயிரோட கொன்னு வச்சிருக்கீயே!''

''..............''

''அப்படியே... நெசமாவே கணேஷ் மாமாவை காதலிச்சிட்டு இருப்பதாய் இருந்தாலும்... கணேஷ் மாமா, மேலே இருந்து உன் நேசத்துக்காக சந்தோஷப்பட்டுக்க மாட்டார்! மாறாய்... 'நல்ல என் நண்பனை வாழவிடாமல் தண்டிக்கிறாயே... பாவி'ன்னு சபிப்பார். அவரிடமிருந்து சாபத்துக்கு பதிலா ஆசீர்வாதம் வேணும்ன்னால்... அன்பு அப்பாவை மணந்து வாழு!''

''.................''

''நிஜமாக்வே... உங்க ரெண்டு பேருக்கும் ஏற்பட்டதுதான், காதல்! உன்

நிகழ்காலத்துக்காக... தன் எதிர்காலத்தையே விட்டுக்கொடுத்து வாழறாரே... இந்த மனுஷனுடைய நேசம் எவ்வளவு பெரிசு!''

''.................''

''காதலிக்கிறோம் என்பதைவிட... ஒரு நல்லவரால் காதலிக்கப் படறோம் என்பது எத்தனை வரம்! நீ சுயநலமே இல்லாத ஒரு நல்ல உள்ளத்தால் நேசிக்கப் படறேம்மா! உன் முன்ஜென்ம புண்ணியம்தான்... அன்பு அப்பா உன் வாழ்வில் வந்தார்! உங்க ரெண்டு பேருக்கும் ஏற்பட வேண்டிய பந்தம் இது. தவறுதலா, கடவுள் கணேஷ் மாமாவோட உங்களை இணைச்சுட்டார்! அதான் கணேஷ்மாமா உங்களை முத்தமிடாமலேயே மாண்டுட்டார்!'' கௌசல்யா சொல்லி முடித்தாள்.

''அன்புக்காக படைக்கப்பட்டவள் நீதான்ம்மா!'' இது கணேஷின் அம்மா.

''உன் மனசு கல்லாடி? இப்படி வதைச்சி இருக்கீயே!'' இது அம்மா மல்லிகா.

''அன்புமேல் பிரியமே ஏற்பட்டதில்லையா, தாயீ?'' இது சாரதா.

''தயங்காதேம்மா! மறுக்காதேம்மா! இத்தனை நல்ல மனுஷன் உனக்காவே உயிரைவச்சிட்டு வாழறாரே! வாரிசு இல்லாமல் ஆக்கிடாதே! ஊரிலும், உலகிலும், பேராலும், புகழாலும் உயர்ந்த இந்த உத்தமரை நிஜமாவே கணவனா ஏத்துக்கணும் அர்ச்சனா!'' ராகவன் கண்கள் பளபளக்கக் கூற.

''ரெண்டு பேரும் ஒண்ணு சேரலன்னால் செத்துடுவேம்மா!'' - கௌசல்யா பயமுறுத்தினாள்.

''ஐயோ கௌசல்யா...'' என்று அர்ச்சனா அழுதாள்.

'என் நேசம் நிஜமானால்... எனக்கு அர்ச்சனா கிடைக்க வேண்டும்!' மனதில் வேண்டிக்கொண்டார் அன்பு.

''நமக்காக.. அவர் வாழ்க்கையையே அர்ப்பணிச்ச நல்ல மனிதருக்கு... உன்னையே காணிக்கையா கொடும்மா!'' கௌசல்யா அழுதாள்.

கணேஷ் கொஞ்ச காலமாகவே அவள் கருத்தில் மறைந்து விட்டான் என்பது தான் உண்மை. நூலறுந்த பட்டமாய்... மன வானில் அவன் நினைவுகள் தூரம் தூரமாய்ப் போக... கஷ்டப்பட்டு நினைவில் கொண்டு வந்து நிறுத்தினாலும்... கணேஷிற்கு பதிலாய் அவ்விடத்தில் அன்பு தான் வந்து நிறைந்து நின்றான், புன்னகைத்தான்.

'அன்பு லேட்டாய் வந்தால் தவித்தும்... அன்று குடித்திருக்கிறான் என்று தெரிந்ததும்.. கோபம் கொண்டும்... நடிகைகளோடு 'கிசுகிசு'க்கப்பட்டால் ஆத்திரம் வந்து விடுவதும்... காதலால்தானா? நான் அன்புவை விரும்புகிறேனா? என் காதலை... அன்புவின் காதல் வென்று விட்டதா? அதுதான் என் மனப்பலகையில் கணேஷின் ஞாபகங்கள் ஒவ்வொன்றும் அழிக்கப்பட்டு.... அன்புவின் ஞாபகங்கள் எழுதப்படுகிறதா?'



'என்னுள் அன்பு ஊடுருவி விட்டாரா? எல்லோரும் சொல்வதுபோல... நான் அன்புக்காக படைக்கப்பட்டவளா?'

'என்மேல் இத்தனை ஆழமாய் நேசம் கொண்ட நெஞ்சை... ஆம்பளையை ஏமாற்றியிருக்கேனே!'

அர்ச்சனா கண்ணைத்திறந்து அன்புவை நோக்கினாள்.

அன்பு கண்களில் காதலைத் தேக்கி... வலியோடு... தவிப்போடு நிற்க...

அர்ச்சனா அவனை நேசமாய் ஊடுருவி... தென்றலாய் பார்வையில் தீண்டிவிட்டு... இதழில் புன்னகையோடு... நாணத்தை சுமந்து கொண்டு... மணவறையில் போய் அமர...

அன்பு திகைத்து... அப்படியே உருகி நிற்க... ''வாங்கப்பா!'' என்று செல்லச்சிணுங்கலோடு... அன்புவின் கைபற்றி அழைத்துப்போய்... அர்ச்சனாவின் அருகில் அமரவைத்தாள், கௌசல்யா!

அன்புவின் இதயத்தில் மழைச்சாரலின் ஜில்லிப்பும்... பனிக்கால மலர்களின் தென்றலான தொடுகையும்... மயிலிறகு வருடலாய் வசந்தகாலத் தீண்டலும்... ஒரு சேரக் கலந்து, ஊடுருவி, சிலிர்த்து... தித்திக்க வைக்க... நெகிழ்ந்து போனான்.

அர்ச்சனா கழுத்தில் அன்பு திருமாங்கல்யம் சூட்ட... அத்தனைபேரும் மங்கல அரிசியை... அவர்கள் மீது தூவ... அப்படியே தளர்ந்து... நெகிழ்ந்து... கண்ணீர்விட்டாள்.

''நல்ல நேரத்தில் அழறீயே அர்ச்சனா...!'' அப்பா ராகவன் சொல்ல... கண்ணீரோடு மலர்ந்தாள்.

**கா**தலாய்... நேசமாய்... பாசமாய் பார்த்துக் கொண்டிருந்த அன்புவின் மடியில் உரிமையுடன் தஞ்சம் புகுந்து... அப்படியே மடிந்து அழுதாள், அர்ச்சனா!

அன்பு, விழிகள் கலங்க... அர்ச்சனாவைத் தூக்கி... கன்னம் முழுக்க முத்தமிட்டு... ஆசையாய் இறுக அணைக்க... அவன் கைகளுக்குள் நிம்மதியுடன் சிறைப்பட்டாள், அர்ச்சனா!

காலம் உள்ளவரை காதல் வாழும்!

காலங்கள்... வருடங்கள்... கடந்தாலும் உண்மைக் காதல் வெல்லும்! வென்றே தீரும்!

